# வரவு

# VARAVU

# 1994

வர்த்தக மாணவர் ஒன்றியம்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

---

நான்காவது மலர்

## குருதியெலாம்....

கணக்கியலின் கடினத்தைக்
காட்டுகின்ற தன்சிரிப்பால்
பிணக்கறுத்துப் போதிக்கும்
பேராற்றலால், சுதுமலைமண்
மணம்வீச யோகராசன்தனை
மனதார வாழவைத்த நற்
குணமான மாணவரின்
குருதியெலாம் நின்நினைவே!

—வர்த்தக மாணவர் ஒன்றியம்

# மாற்றுக் கற்கைநெறி



பல்தொழில் வாய்ப்புக்களைத் தன்னுள் உள்ளடக்கிய ஒரு துறை — வர்த்தகக் கல்வித்துறை.

இக் காரணத்தினால் திறமை மிக்க மாணவர்கள் பலர் இக் கற்கைநெறியின் பாற் கவரப் படுகின்றார்கள்.

திறமை மிக்க மாணவர்களின் படையெடுப்பினால் இத்துறை என்றுமில்லாதவாறு தரம் உயர்ந்து நிற்கின்றது.

மிக மிக உயர்ந்த புள்ளிகளை இத்துறையில் பெறுபவர்களே பல்கலைக்கழக அனுமதிக்குத் தகைமை பெறுகின்றார்கள்.

இத்துறையில் மிகச் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களும் பல்கலைக்கழகம் செல்ல முடியாத நிலை உள்ளது.

வர்த்தகக் கல்வியில் மாற்றுக் கற்கைநெறிகள் பல உள்ளன.

இந்த மாற்றுக் கற்கைநெறிகளை நமது பிரதேசத்திற்குக் கொண்டு வருதலே இன்றைய தேவை.

இதற்கான முயற்சிகள் முறையாக முளை கொள்ளவும் இல்லை.

வரவு — இதற்கான களம் அமைத்துக் கொடுத்திருப்பதாகக் கருதுகின்றேன்.


இத்தகைய உயர்ந்த சிந்தனைக்கு வரவு வெளியீட்டாளர்கள் முன் உதாரணமாக விளங்குவது மகிழ்ச்சியே.

அவர்கள் முயற்சி வெற்றி பெறட்டும்.

அ. பஞ்சலிங்கம்
அதிபர்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

# தரத்தின் தீர்ப்பு



வர்த்தகக் கல்விக்கு எமது கல்லூரியில் நாளைய பொழுது நலமானதாகவும் பலமான தாகவும் அமையும் என்று 1993இல் கூறப் பட்டது—கூறியவாறே அமைந்து வருகின்றது.

வர்த்தகக் கல்வியின் கடந்த ஆண்டுப் பெறுபேறு இக்கூற்றுக்குச் சாட்சியம் பகர் கின்றது.

அறிவியற் கல்விக்கே யாழ். இந்துவில் சிறப்பிடம் என்ற எண்ணம் பரவலாக இருந்து வருகின்றது.

இல்லை,

கலையும் வர்த்தகமும் இங்கு வளமுடன் செறிந்துள்ளது என்பதைப் பலர் அறியவில்லை.

தலைகளின் எண்ணிக்கை தான் தரத்தின் தீர்ப்பு அல்ல.

பெறுபேறுகளின் விகிதாசாரமும் தரநிர்ணயமாகலாம். அவ்வாறா யின் வர்த்தகக் கல்வி முந்தியிருக்கவே செய்யும்.

நல்ல அதிபர். நவீனமயமாக்கப்பட்ட நூலகம்.

ஆசிரியர்களினதும் – மாணவர்களினதும் தேடலுக்கு விஸ்தாரமான வளம்.

இதன் அறுவடையும் பெறுபேறுகளில் தொனிக்கின்றது.


ஏனைய அக – புற செயற்பாடுகள் சிறப்பானவை, ஆசிரிய வழிக் காட்டல் இவற்றிற்கு உறுதுணை.

இச் சூழல் எமது கல்லூரியில் வர்த்தகத் துறையை மேலும் மேன்மைப் படுத்தப் போகின்றது என்பதில் மாற்றுக் கருத்து ஏற்பட நியாயமில்லை.

பொ. வில்வராஜா
பொறுப்பாசிரியர்
வர்த்தக மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

# இன்றைய தேவை



இன்றைய கல்வி ஒழுங்கில் வணிகவியல் தனித்துவம் மிக்கதாகத் திகழ்கின்றது.

புள்ளி விபரவியல், கணணியியல், அறிவியல், கலையியல் அனைத்தையும் உள்ளடக்கிய பரந்து விரிந்த ஒரு உயர் கல்வித் துறையாக வணிகவியல் விளங்குகின்றது.

பரந்த பாடத்திட்டத்தைக்கொண்ட இக் கற்கை நெறி பயிலும் மாணவர்கள் தாய்மொழி தவிர்ந்த பிறமொழி அறிவு-சிறப்பாக ஆங்கில மொழி அறிவு இன்மையால் பல பின்னடைவுகளைச் சந்திக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

வணிகவியல் மாணவன் ஒருவன் இத்துறையில் துறைசார் அறிவு நிலை பெறுவதற்கு நவீன உலகமொழியாகிய ஆங்கிலமொழிப் பயிற்சி தவிர்க்க முடியாத தேவை.

இம்மொழிப் பயிற்சியினை இடைநிலைக் கல்வி பயிலுங் காலத்திலேயே வரித்துக் கொள்ளல் உயர் கல்வி சிறப்புற அமைவதற்குத் தோன்றாத் துணையாகும்.

இடைநிலைக் கல்வி நிலையங்கள் – அவற்றிற்கான பாடவிதானத்தை வகுக்கும் கல்வியியலாளர்கள் - இம்மொழிப் பயிற்சிக்கு ஆவன செய்வது அவசியம்.

ஆயினும்,

தமிழ்மொழியில் வணிகவியல் சார் நூல்கள் வெளிக்கொணர்வது சமுதாயத்தின் தவிர்க்க முடியாத தேவை.

வணிகவியலாளர்கள் சிறப்பாக இடை நிலைப் பள்ளிகளில் வணிகவியல் ஆசிரியர்களாக இருப்பவர்கள் இதற்கான முயற்சியில் முனைவதும் செயற்படுவதும் சமுதாயத் தேவையாகும்.

இத் தேவையின் ஒரு சிறு பங்களிப்பே வரவு.


எமது முன்னோடிகள் - 1988 – 1989 காலகட்டத்தில் – வரவு மலரை மலர வைத்தனர். அந்த நல்லிதயங்களை நாம் நன்றியுடன் நோக்குகின்றோம்.

இப்பணி தொடர – வரவு மலர – வரும் சந்ததிகளும் உழைக்க வேண்டும் – உதவ வேண்டும் என்று வேண்டுகின்றேன்.


ச. பாலமனோகரன்
தலைவர்
வர்த்தக மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

# தேடல்



நூற்றாண்டு கண்ட எமது கல்லூரியின் வர்த்தக மாணவர் ஒன்றியம் தனது எட்டாவது அகவையை நிறைவு செய்கின்றது.

இக் குறுகிய காலப் பின்னனியில் ஒன்றியத்தின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்யுங் காலை அது எமக்கு மகத்தானதாகவே தெரிகின்றது.

இந்த மகத்தான நிலைக்கு புறவூக்கமும் அகவூக்கமும் காரணமாகும்.

வர்த்தகவியலுக்கு இங்கு உள்ள உயர்ந்த நிலை புறவூக்கமாயின்– அந்த உயர்ந்த நிலைக்கு ஏற்ப செயற்பட வேண்டிய தேவை அகவூக்கமாகின்றது.

எமது ஒன்றிய உறுப்பினர்களிடையே அறிவு தேடல் நிலை, அவர்கள் கூடப் பிறந்த குணமாகிவிட்டது.

இந்தத் தேடலின் தேவையாக ஒன்றியம் திங்கள் தோறும் துறைசார் தேர்ச்சியாளர்களை அழைத்துக் கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றது.

கருத்தரங்குகள் தேடலுக்கு ஒரு வடிகாலாயினும் எம் தேவைகளுக்கு ஏற்ப கல்லூரி நூல் நிலையம் பெரிதளவு உதவுகின்றது. நூல் நிலையத்தை அந்த நிலைக்கு உயர்த்துவதில் உழைப்பவர் அதிபர்.

தன் கடமைகளுக்கும் பணிகளுக்கும் அப்பால் அவர்கள் நூல் நிலையத்தின் சிறப்பின்பால் காட்டும் அக்கறை மறப்பதற்குரியதல்ல.

வரவு வெளியிடுவதற்கு அவ்வப்போது ஆலோசனை வழங்குபவர்கள் பலர்.

அதிபர், எம் துறைசார் ஆசிரியர்கள், ஒன்றிய உறுப்பினர்கள், கல்லூரியின் அண்மித்த பழைய மாணவர்கள்.

அண்மித்த பழைய மாணவர்களுள் திரு. க. சுசீந்திரன் அவர்களும் திரு. வை. சிவனேசன் அவர்களும் முதன்மை பெறுகின்றனர்.


இது, சஞ்சிகையின் நான்காவது இதழ். வரவு மலர்வதற்கு தோன்றாத் துணையாக நிற்பவர்கள் யாழ் வர்த்தகர்கள். அவர்கள் எம் கௌரவத்துக்குரியவர்கள்.

வர்த்தக மாணவர் ஒன்றியமும் அதன்மூலம் வரவும் நிலைத்து நிற்க நாளை வருபவர்கள் நலமே உழைக்க வேண்டுகின்றேன்.

பா. சிவஸ்கந்தசர்மா
செயலர்,
வர்த்தக மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

# அறுவடை



கல்வியின் அளவீடு பரீட்சையின் பெறு பேறு. எத்தகைய கல்விச் சித்தாந்தத்தினதும் இறுதி நிலை இதுவாகும்.

இதில் இரண்டுபட்ட கருத்துக்கு இடமில்லை.

சித்தாந்த மோதல்கள் பரீட்சையின் பெறு பேறுகளை மட்டம் தட்டுவதாக அமையக் கூடாது.

அவ்வாறு அமையவேண்டும் என்று எந்த சித்தாந்த வாதியும் எண்ணுவதுமில்லை—செயற் படுவதுமில்லை.

ஆனால்,

சித்தாந்தங்களின் பரிசோதனை - அதனை முன்னெடுப்பவர்களுக் குப் புலப்படாத நிலையில் - பரீட்சைப் பெறுபேறுகளை மட்டம் தட்டுவதாக அமைவதும் உண்டு.

இந்த அபாயகரமான நிலை அமையும் சாத்தியங்கள் புலப்படுகின் றன.

ஏலவே முடங்கி நிற்கும் பல்கலைக் கழகம் செல்வதற்கான கல்வி புதிய பரிசோதனைகளால் முற்றாக முடங்கிவிடும்.

பயிற்சிப் பரீட்சைகள் பொது மட்டத்தில் வேண்டும். இது ஆபத் தானது அல்ல. இது நல்ல ஆரோக்கியமான கல்விச் செயற்பாடு.

அடிப்படையை மாற்றுவோம் - கல்வியைச் சீர்திருத்துவோம்என்ற குரல் ஓங்கி ஒலிக்கட்டும்.

ஆனால், மாணவர்கள் பகடைக் காய்களாகி பலியிடப்படக் கூடாது.

சித்தாந்தங்கள் மோதட்டும் — வளரட்டும். அதே நேரத்தில் மாணவர் களும் உயர்ந்த பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற பெரியவர்கள் உதவ முன் வருதல் வேண்டும்.

சி. சிறீரங்கன்
இதழாசிரியர்
வர்த்தக மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

# யாழ். இந்துவில் நாம்

யாழ் இந்துக் கல்லூரியில் வர்த்தகக் கல்விக்கு தனித்துவமானதோர் இடமுண்டு. அறிவியற் துறைகளைப் போன்றே வர்த்தகத் துறையும் இங்கு சிறப்புற்று விளங்குகின்றது. நடந்து முடிந்த பரீட்சை முடிவுகள் வருமாறு:

க. பொ. த. (சா. த.)ப் பரீட்சை டிசம்பர் 1993

| | | | |
|---|---|---|---|
| விசேட சித்தி | 82 | திறமைச் சித்தி | 61 |
| சாதாரண சித்தி | 11 | சித்தியின்மை | 01 |

சித்தியடைத்தோர் விகிதம் 99.36

க. பொ. த. (உயர்தர)ப் பரீட்சை

1992 ஆகஸ்ட் (உயர்தரம்)

| | |
|---|---|
| க. கேந்திரன் | 323 |
| பொ. பிரபாகரன் | 305 |
| செ. கலிஸ்ரஸ் அன்ரனி | 290 |
| மு. ஜெயசீலன் | 288 |
| சோ. சிறீஸ்கந்தராசா | 287 |
| அ. சுதன் | 285 |
| ஸ்ரீ. ஸ்ரீவிமலகாந்தன் | 278 |
| ந. முரளீதரன் | 270 |
| ம. சசிதரன் | 267 |

1993 ஆகஸ்ட் (உயர்தரம்)

| | |
|---|---|
| சி. சண்முகதாஸ் | 306 |
| சு. விக்னவேல் | 288 |
| து. சரத்சந்திரன் | 284 |
| ம. ஆனந்தலிங்கம் | 267 |
| தி. சிவநிருபன் | 267 |
| சி. சிவதரன் | 253 |
| வே. சந்திரகுமார் | 252 |

பல்கலைக்கழக அனுமதிக்கு 27 மாணவர்கள் தகுதி பெற்றனர்.



1993 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க. பொ. த. (உயர்தர)ப் பரீட்சையில் செல்வன் சி. சண்முகதாஸ் வர்த்தகப்பிரிவில் நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றுள்ளார்.

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

# வர்த்தக மாணவர் ஒன்றியம்

பதவியாளர்கள்

*1993 — 1994*

| | |
|---|---|
| *காப்பாளர்:* | திரு. அ. பஞ்சலிங்கம் (அதிபர்) |
| *பொறுப்பாசிரியர்:* | திரு. பொ. வில்வராசா |
| | திரு. சே. சிவசுப்பிரமணிய சர்மா |
| | திரு. நா. சிவஞானசுந்தரம்பிள்ளை |
| *தலைவர்:* | செல்வன் ச. பாலமனோகரன் |
| *துணைத் தலைவர்:* | செல்வன் இ. நிசாந்தன் |
| *செயலர்:* | செல்வன் பா. சிவஸ்கந்தசர்மா |
| *துணைச் செயலர்:* | செல்வன் வா. விக்கினேஸ்வரா |
| *பொருளர்:* | செல்வன் செ. சுபாகரன் |
| *இதழாசிரியர்:* | செல்வன் சி. சிறீரங்கன் |
| *விளம்பர நிர்வாகி:* | செல்வன் ச. ஜெயசீலன் |
| *ஆட்சிக்குழு:* | செல்வன் ச. நிமால்சங்கர் |
| | செல்வன் சி. குகதாஸ் |
| | செல்வன் ஸ்ரீ. பிரசாந்தன் |
| | செல்வன் ச. மணிமாறன் |
| | செல்வன் செ. முகுந்தன் |

COMMERCIAL BANK

## கொமர்ஷல் வங்கி

# சுவர்ண திலின ஜயபத

- 3 மாதங்களுக்கொருமுறை வென்றெடுக்க ரூ. 10 லட்சம் பெறுமதியான முதற் பரிசு.
- 3 மாதங்களுக்கொருமுறை ரூ. 50000 பெறுமதியான 3 பரிசுகள்.
- ஒவ்வொரு மாதமும் 10 அதிஷ்டசாலிகளுக்கு தங்க நாணயங்கள்.

### ஒவ்வொரு வருடமும் 16 வெற்றி வாய்ப்புக்கள்!

சுவர்ண திலின ஜயபத சான்றிதழ் ஒன்றில் ரூ. 1000 மட்டும் முதலீடு செய்து இப்பரிசுகள் எல்லாவற்றையும் வெல்லும் வாய்ப்புக்கள், அத்துடன் 10% வருடாந்த வட்டியையும் பெறுங்கள். நீங்கள் வாங்கும் சான்றிதழ்களின் எண்ணிக்கையைப் பொறுத்து உங்கள் வெற்றி வாய்ப்பும் அதிகரிக்கிறது.


மாதாந்த சீட்டிழுப்பு நடைபெறுவதுடன் 3 மாதங்களுக்கொரு முறை மாபெரும் சீட்டிழுப்பொன்றும் இடம் பெறும். கொள்வனவு செய்யப்பட்ட மாதத்தைத் தொடர்ந்து வரும் மாதத்திலிருந்தும் சான்றிதழ்கள் சீட்டிழுப்புகளில் பங்குபற்றத் தகுதி பெறும். 12 மாதங்களின் முடிவில் சான்றிதழ்களைப் பணமாக்கவோ கொமர்ஷல் வங்கியின் ஏதேனும் வைப்புத் திட்டங்களாக மாற்றவோ அல்லது பரிசுகளை வெல்லத் தொடர்ந்து வைத்திருக்கவோ முடியும். ஒரு முறை மட்டுமல்ல, மீண்டும் மீண்டும் அதுவும் வருடத்திற்கு 16 தடவைகள் பரிசு பெறும் வாய்ப்புண்டு.

உங்கள் அன்புக்குரியவர்களுக்கு
அருமையான அன்பளிப்பு:

**சுவர்ண திலின ஜயபத**

**உங்கள் அதிஷ்டத்திற்கு முடிவே இல்லை!**

# வர்த்தக மாணவர் ஒன்றியம்
## 1993 — 1994



இருப்பவர்கள்:-

(இடமிருந்து வலம்) திரு. பொ. வில்வராஜா (பொறுப்பாசிரியர்) செல்வன் பா. சிவஸ்கந்தசர்மா (செயலாளர்), கப்டன் நா. சோம சுந்தரம் (பிரதி அதிபர்), செல்வன் ச. பாலமனோகரன் (தலைவர்), திரு. அ. பஞ்சலிங்கம் (அதிபர்), திரு. நா. சிவஞானசுந்தம் பிள்ளை (பொறுப்பாசிரியர்), திரு. சே. சிவசுப்பிரமணிய சர்மா (பொறுப்பாசிரியர்)

நிற்பவர்கள்:-

(இடமிருந்து வலம்) செல்வன் ச. நிமால்சங்கர், செல்வன் செ. சுபா கரன் (பொருளாளர்), செல்வன் சி. சிறீரங்கன், செல்வன் இ. நிஷாந்தன், செல்வன் சி. குகதாஸ், செல்வன் ச. ஜெயசீலன், செல்வன் வா. விக்னேஸ்வரா.

## உள்ளே ....

○ நெல் உற்பத்தியும்... — மா. சின்னத்தம்பி 09
○ இலங்கையினுடைய .. — கி. அன்ரனி ஜோர்ஜ் ராஜன் 13
○ தொழிலாளர் நலன்... — கு. லவீந்திரகுமார் 19
○ கைமாறும் கருவிகளும்... — க. சுசீந்திரன் 30
○ இலங்கையில் ஆயுள் காப்பீடு... — பா. சிவஸ்கந்தசர்மா 33
○ தேசிய சேமிப்பு வங்கி... — ப. உதயணன் 40
○ இலங்கையின் பொருளாதாரம் — வா. லோகேஸ்வரன் 43
○ குத்தகையும் வாடகைக்... — வை. சிவனேசன் 46
○ அறவிட முடியாக் கடனும்... — பா. இரவீந்திரன் 54
○ தென்னாசிய நாடுகளின்... — கா. குகபாலன் 60
○ சிந்தனை விதிகள் — ச. ஜெயசீலன் 71
○ வரைவிலக்கணம் — ச. பாலமனோகரன் 74
○ வினையின் காலங்காட்டும்... — பொ. செங்கதிர்ச்செல்வன் 78
○ இந்து சமயப் பரம்பல் — ப. கணேசலிங்கம் 83
○ நைமித்திகக் கிரியைகள்... — சோ. சுஜீவகுமார் 89

**இன்றைய அறிமுகம், நாளைய நாகரிகம்.**

முகூர்த்தப் பட்டுப்புடவைகளை உங்கள் விருப்பத்திற்கு தெரிவு செய்ய ஒரே ஸ்தாபனம்.

## சோபனா ஆடை அகம்

தேன்மதுரத் தென்றலாள் வான்பரப்பில் வந்தது போல் யாழ் நகரில் வந்து உதித்தாள்.

**மதுரா பட்டு மகால்**

16, பெரியகடை வீதி, — யாழ்ப்பாணம்.

இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

நியூ சுபமாலா

மோட்டோர்ஸ்

79, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

*Space Donated by*

V

**ESWAR CORPORATION**

170, (18) STANLEY ROAD,

JAFFNA.

# நெல் உற்பத்தியும் அதன் பொருளாதார முக்கியத்துவமும்

இலங்கையின் மரபுவழி விவசாயத்தில் முதன்மையானது உள்நாட்டு விவசாய மரபுக்குட்பட்ட நெல்லுற்பத்தியாகும். இலங்கை மக்களின் பண்பாட்டு அபிவிருத்தியுடன் மிக நெருக்கமான தொடர்புடையதாக நெல்லுற்பத்தி அமைவது சிறப்பானதாகும்.

தானிய உற்பத்தியில் மேலாதிக்கம் கொண்ட உற்பத்தித்துறையாக இது விளங்குகிறது. வருடாந்த விவசாயப் பயிர் அறுவடையில் காணப்படும் நிலப்பரப்பில் ஏறக்குறைய 75% நெல்லுற்பத்திக்குரியதாகும். மக்களுக்குரிய கலோரிப் பெறுமானத்தில் 50% இற்கு மேலானதை இது வழங்குகின்றது.

இலங்கையில் வேலைவாய்ப்பு வழங்குதல் மிக முக்கியமான அபிவிருத்தித் தேவையாகக் கருதப்படும் போது இத்துறை அதில் முக்கியமானதாக விளங்குகிறது. ஏறக்குறைய ஆறு இலட்சம் பேர்வரை இத்துறையில் தொழில்வாய்ப்புப் பெறுகின்றனர்.

ஏறக்குறைய 7 இலட்சம் நிலத்துண்டுகள் இதில் காணப்படும் போது, இவற்றில் 50 சதவீதமானவை ஒரு ஹெக்டேயரிலும் குறைந்த பரப்பளவுடையன. பயிரிடப்பட்ட பரப்பளவு 1977 இல் 2046000 ஏக்கராகவும் 1988 இல் 2144000 ஏக்கராகவும் காணப்பட்டது. 1992 இல் இது 803000 ஹெக்டேயராக விளங்கியது.


**மா. சின்னத்தம்பி,**
விரிவுரையாளர், கல்வியியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்.


மொத்த நெல்லுற்பத்தியானது 1977 இல் 80.3 மில்லியன் புசலாக விளங்கியது. எனினும் அதிகரித்த அரச முயற்சிகள், கால நிலையின் தன்மை என்பவற்றால் 1988 இல் 118.6 மில்லியன் புசலாக அதிகரித்திருந்தது. 1989 இல் இவ்வுற்பத்தி 112.2 மில்லியன் புசலாகக் காணப்பட்டது.

இலங்கையில் இத்துறையின் அபிவிருத்தியின் முக்கியத்துவம் நன்கு உணரப்பட்டே வந்துள்ளது.

## அபிவிருத்திக்கான உபாயங்கள்

நெல்லுற்பத்தியை அதிகரிப்பது தொடர்பாக இடைக் காலப்பகுதியில் வினைத்திறனை அதிகரித்தல், விளைச்சலை அதிகரித்தல், உற்பத்திச் செலவைக் குறைத்தல் போன்றன முக்கியத்துவம் அளிக்கப்பட்ட விடயங்களாகக் கொள்ளப்பட்டன. இத்துறையின் அபிவிருத்தி தொடர்பாக, பல கொள்கைகள், திட்டங்கள் என்பன கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் பின்வருவன முக்கியமானவை.

1. உலர் இடைநிலைப்பட்ட வலயங்களின் மண்ணின் தன்மைக்கேற்ப பொருத்தமான விவசாயப் பயிர்களை நடுதற்கான ஊக்கத்தினை வழங்குதல். பிரதான நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் இவ்வாறான 150,000 ஏக்கர் பரப்பு காணப்படுகின்றது.

2. நீர்ப்பாசனத்திட்டங்கள் மீதான முதலீடுகளிலிருந்து நல்ல விளைச்சலைப் பெறுவதில் அக்கறை செலுத்தல்.

3. ஹெக்டேயருக்கான விளைச்சலை அதிகரிக்கும் வகையில் நெல் விளையும் பிரதேசங்களின் பல்வேறுபட்ட தன்மைக்கேற்ப

புதிய நெல்லினங்களை விருத்தி செய்வதில் அதிக கவனம் செலுத்துதல்.

4. வரட்சி, மிகையான மழைவீழ்ச்சி என்பவற்றினால் ஏற்படக்கூடிய ஆபத்தினைக் குறைக்கக்கூடிய வகையில் சிறந்த தொழில்நுட்பத்தை அதிகரித்துக் கொள்ளுதல்.

5. தற்போது நடைமுறையிலுள்ள நிறுவனங்களை மாற்றியமைப்பதன் மூலம் அல்லது அவற்றை ஒருங்கிணைப்பதன் மூலம் கிராமிய மட்டத்தில் விவசாய சேவைகளைத் திறமையான முறையில், அமைத்துக் கொள்ளுதல். சிறப்பாக கிராமிய மட்டத்தில் உள்ளீடுகளை வழங்கிக் கொள்ளுதல்.

இத்தகைய நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற் கொள்ளப்பட்டமையினால் நெல்லுற்பத்தித் துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சிப் போக்கு தென்பட்டுள்ளது.

## அபிவிருத்தியின் குறிக்கோள்கள்

இலங்கையில் நெல்லுற்பத்தியானது 1982 - 1988 காலப்பகுதியில் வருடாந்தம் 2.7% வளர்ச்சியைக் காட்டியது. 1992 இலும் இத்துறை வளர்ச்சி வீழ்ச்சிப் போக்கைக் காட்டியுள்ளது.

நெல்லுற்பத்தித் துறையின் அபிவிருத்தியில் அரசாங்கம் தொடர்ந்தும் அதிக கவனம் செலுத்தி வருவது பல அடிப்படைக் குறிக்கோள்களை அடைவதற்காகவே யாகும். அவற்றுள் முக்கியமானவை பின் வருவன.

1) நாட்டில் அடிப்படை உணவுற்பத்தியில் இயன்றளவு நிறைவு மட்டத்தை அடைதல். உணவுற்பத்தியானது நாட்டின் வறுமையுடனும், அதன் வழியாகச் சமூக நீதியுடனும் தொடர்புடையது.

2) வெளிநாட்டு வளமாகக் கருதப்படும் அந்நியச் செலாவணி வருமானங்களைப் பாதுகாத்தலும் உயர்த்தலும். குறிப்பாக அரிசி உற்பத்தியைப் பெருக்கி ஏற்றுமதியைத் தூண்டுதல்.

3) கிராமிய மட்டத்தில் தொழில் வாய்ப்பையும், வருமான மட்டத்தையும் அதிகரித்தல். இது பெரிதும் இலங்கை அரசாங்கத்தின் அரிசிப் பங்கீட்டுமுறை, உணவு முத்திரைத் திட்டம், ஜனசவியத் திட்டம் என்பவற்றோடு தொடர்புடையதாகும்.

## ஜனசவியத் திட்டமும் நெல்லுற்பத்தி யும்

இலங்கையில் வறுமை தணிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஜனசவியத் திட்டம் பெரிதும் கிராமியத்துறை சார்ந்ததாக இருப்பதால், நெல்லுற்பத்தியுடன் தொடர்புடையதாக விளங்குகிறது. 20% - 30% வரையிலான ஜனசக்தி நன்மை பெறுபவர்கள் குறைந்த வருமானமுடைய விவசாயிகளென நம்பப்படுகிறது. இவர்களது வருமானத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் முக்கியமானவை. நெல்லுற்பத்தி சார்ந்தும், கிராமியத்துறை சார்ந்தும் வறியோரின் தேவைகளை நிறைவேற்றுவது தொடர்பாகப் பின்வரும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவது அவசியமாயுள்ளது.

1) அவர்கள் வாழுகின்ற பகுதிகளிலேயே நிலங்களைத் தேர்வு செய்து பொருத்தமான அளவு நிலங்களை வழங்குதல். தற்போது அவர்களிடம் உள்ள நிலங்கள் குறைவாக இருக்கின்றமை ஓர் மட்டுப்படுத்தப்பட்ட காரணியாகும்.

2) நில அபிவிருத்தி, நல்லின விதைகள், இரசாயனப்பசளை போன்ற உள்ளீட்டு வசதிகளை அபிவிருத்தி செய்தலும் அவர்களது கடன் தேவைகளை மதிப்பிடுதலும்.

3) தற்போது காணப்படுகின்ற சந்தைப்படுத்தும் வசதிகளை இயன்றளவு உச்ச மட்டத்தில் பயன்படுத்திக் கொள்ளுதல்.

கிராமிய மட்டத்தில் நெல்லுற்பத்தியோடு தொடர்புடைய வறிய விவசாயிகளை வறுமையிலிருந்து மேலுயர்த்துவது அவர்கள் சார்ந்துள்ள துறையினது வினைத்திறனை உயர்த்துவதற்கு உதவும் நடவடிக்கையாகவும் கருதப்படுகிறது.

## நிலப்பரப்பும் இயலளவும்

இலங்கையில் நெல்லுற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டு வரும் நிலம் பல்வேறு வகையினதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

| | வகை | ஏறக்குறைய பரப்பளவு ஏக்கர் ('000) |
|---|---|---|
| 1. | பிரதான நீர்ப்பாய்ச்சல் நிலம் — வரள்வலயம் | 625 |
| 2. | சிறிய நீர்ப்பாய்ச்சல் நிலம் — வரள்வலயம் | 350 |
| 3. | மழை வீழ்ச்சி கொண்ட மானாவாரி நிலம் — கரையோரம் | 175 |
| 4. | மழை வீழ்ச்சி கொண்ட bunded Land — வரள்வலயம் | 175 |
| 5. | நீர்ப்பாசனமும் ஊற்று நீர் வசதியும் | 50 |
| 6. | ஊற்று நீர் வசதி — மலைநாட்டு ஈரவலயம் | 100 |
| 7. | ஊற்று நீர் வசதி — தாழ்நில ஈரவலயம் | 175 |
| 8. | மோசமான நீர்ப்பாசன வசதியுடைய நிலம் — தாழ்நில ஈரவலயம் | 50 |
| | மொத்தம் | 1700 |

இவற்றில் 1, 5, 6, 7 எனக் குறிப்பிடப்படும் பகுதி நிலங்களில் தரமான நெல் விதையினங்கள் பயன்படுத்தப்பட்டு, அதன் விளைவாக மொத்த உற்பத்தி குறிப்பிடத் தக்களவில் அதிகரித்தது. மாறாக 2, 3, 4 எனக்குறிப்பிடப்படும் பகுதிகளில் நெல்லுற்பத்தியை அதிகரிப்பது தொடர்பான பிரச்சினைகள் காணப்பட்டுள்ளன. இங்கு தொழில்நுட்ப பிரயோகத்தில் பின் தங்கிய நிலை நிலவுவதால் நெல்லுற்பத்தி ஒப்பீட்டு ரீதியில் மிகவும் குறைவானதாகவே காணப்பட்டது.

ஈரவலயத்திலும் இடைப்பட்ட வலயங்களிலும் நெல்லுக்கான உற்பத்தித்திறன்–ஒரு ஹெக்டேயருக்கானவிளைச்சல்-உயர்வானதாகவே காணப்பட்டது. வரள் பகுதியிலும் இடைப்பட்ட வலயங்களாகவுமுள்ள நீர்ப்பாய்ச்சல் நிலங்களில், பெரியதோர் இடைவெளி காணப்படுகின்றது. 3, 4, 8 எனக்குறிப்பிடப்படும் பகுதிகளில் நெல்லுற்பத்தியை தூண்டுதற்கான சமூக பொருளாதார தேவைகள் ஏற்பட்டுள்ளன.

உற்பத்தியை நல்ல நிலையில் பேண வேண்டியதன் அவசியம் - இரணைமடுக் குளத்திற்குப் புறம்பாக - மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டம் தொடர்பாக உணரப்பட்டுள்ளது. இதற்காக இத்தகைய நீர்ப்பாசனத் திட்டங்களில் அதிகம் முதலீடு செய்வதும், திருத்தமான வடிகால் முறை, சிறந்த நீர் முகாமை என்பவற்றில் கவனஞ் செலுத்துவதும் அவசியமாகின்றது. விவசாயிகளிடையே சுயதங்கியிருப்பு நிலைமைகளை ஊக்குவிக்கும் நிறுவன அமைப்புக்களை வளர்த்தெடுப்பதும் இதற்கு அவசியமாகின்றது.

மோசமான நீர்ப்பாசன வசதி கொண்ட தாழ்நிலப் பிரதேசத்தில் மரபு வழியான விதையினங்கள் பயன்படுத்தப் படுவதால் ஏக்கருக்கான விளைச்சல் 25 – 30 புசல் வரையிலேயே காணப்படுகின்றது. உப்புநீர் உள்வருதல் தொடர்பான பிரச் சினைகளும் இப்பகுதியில் உண்டு. உப்புநீர் வெளியேற்றும் திட்டங்களுடன் இணைந்து அபிவிருத்தி மேற்கொள்ளப்படலாம். இங்கு சிறு கைத்தொழில்கள் (விவசாய உள்ளீடு சார்ந்து) நந்நீர் மீன்பிடி முயற் சிகளும் ஊக்குவிக்கப்பட முடியும்.

## நெல்லுற்பத்திக்கான கடன்

இத்துறைக்கு புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கொடுகடன் திட்டத்தின் கீழும், வேளாண்மை நம்பிக்கை நிதியத்தி னாலும், கடன்களிற் பெரும்பகுதி வழங் கப்பட்டது, 1992 இல் இதற்கென முத லாவது திட்டத்தின் கீழ் 618 மில்லியன் ரூபா கடனாக வழங்கப்பட்ட போது நிதியத்தினால் 49 மல்லியன் ரூபா மாத் திரமே வழங்கப்பட்டது.

நெல்லுற்பத்திக்கான கடன்களை வழங்குவதில் நிறுவனங்களின் பங்கு 15% – 25% வரையிலேயே காணப்படுகின் றது, கடன் வழங்கும் முறைகள் நன்கு ஸ்திரப்படுத்தப்பட்டிருக்கவில்லை. நாட்டிலி ருக்கும் 11 இலட்சம் விவசாயிகளில் 50,000 பேர் மாத்திரமே குறுங்கால விவசா யக் கடனைப் பெற்று வருவது குறிப்பிடத் தக்கது. ஒருங்கிணைந்த கிராமிய கடன்திட் டத்தின் கீழ் தலா விவசாயிகளுக்கு வழங்கப் பட்ட கடன் அளவு கூட 1974 இல் ரூபா 10. 34 ஆகவிருந்து 1988 ல் ரூபா 3. 92 ஆகவீழ்ச்சியடைந்தது.

வணிக வங்கிகள். கூட்டுறவு வங்கிமுறை கள் ஊடாக நெல் உற்பத்தியாளருக்கு வழங்கப்படும் கடன்களில் அறவிடமுடியாத தொகையில் ஒரு பகுதியை மீள்நிதியாக வழங்கும் வகையில் அரசாங்கம் விவசாயக் கடன் உத்தரவாதத்திட்டத்தைப் பின்பற்றி வருகின்றது.

முறை சார்ந்தமுறைகளையும், முறை சாரா முறைகளையும் இணைத்து முகவர் முறையை அறிமுகப்படுத்தியும் இக் கடன் வசதிகளை இயன்றளவு அதிகரித்து வரு கிறது.

இவற்றுடன் உத்தரவாத விலைத் திட்டம், காப்புறுதிதிட்டம், சந்தைப்படுத் தல் உதவிகள், போன்ற ஏனைய ஊக்கு விப்பு முறைகளிலும் கவனம் செலுத்தப் படுகிறது,

## துரிதமகாவலித்திட்டமும் நெல் உற்பத்தியும்

மிகப்பெரிய திட்டமான மகாவலியில் 100,000 ஹெக்டேயர்கள் வரை நெல்லுற் பத்தி நடைபெறுகிறது. மகாவலி 'எச்' பகுதியிலேயே மிகவும் கூடுதலான நிலப் பரப்பு (40,000 ஹெக்டேயர் வரையில்) காணப்படுகிறது, இலங்கையின் மொத்த நெல்உற்பத்தியில் 8% வரை இங்கு மாத் திரம் கிடைக்கிறது. ஏனைய பி. சி. ஜி. எல். திட்டங்களிலும் நெல்உற்பத்தி நடைபெறுகிறது. எதிர்காலத்தில் நாட்டின் நெல்லுற்பத்தியில் தலைமையிடத்தை இது பெறும்.

## முடிவுரை

தேசிய ரீதியில் இத்துறையினை அபி விருத்தி செய்தல், வறுமை ஒழிப்பு, தொழில் வாய்ப்பு, செலாவணி உழைப்பு, கிராமிய அபிவிருத்தி போன்ற பல்வேறு மட்டங்களிலான முன்னேற்றங்களை ஏற் படுத்தும் என்ற வகையில்இதன் நீண்ட கால அபிவிருத்தித் திட்டத்தில் அக்கறை கொள்வது மிகவும் அவசியமாகிறது. □

யாழ் இந்துவின்

வர்த்தக மாணவர் ஒன்றியத்தின்

வரவிற்கு நல்லாசிகள்

**PARIS MARTS**

155, POWER HOUSE ROAD,

JAFFNA.

T. Phone: **23635**

வாழ்த்துக்கள் பல

**ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை**

235, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்

உறுதியான

கம்பியூட்டர் கல்வியைப் பெற

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

16, 3rd CROSS STREET,

JAFFNA.

வளர்ந்து வரும் வரவுக்கு

வாழ்த்துக்கள்

எங்களிடம் சகல விதமான
அலங்காரப் பொருட்கள்
அன்பளிப்பு பொருட்கள் லேஸ் வகைகள்
பட்டன், ரோல்கோட் நகைகள்
நாட்டியத்திற்குரிய ஆபரணங்கள்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற

**நிகானி**

72, நவீன சந்தை

யாழ்ப்பாணம்.

- ஜப்பான் சாறி வகைகள்
- ஜே. பி. சாறி வகைகள்
- சிறுவர்களுக்கேற்ற ஆடை வகைகள்
- சேட்டிங், சூட்டிங்
- றெடிமேட் ஜீன்ஸ், சோட்ஸ்

மலிவாகப் பெற்றுக் கொள்ள

இன்றே நாடுங்கள்

யோகாஸ் புடவை மாளிகை

இல. 16 B, பெரியகடை வீதி, — யாழ்ப்பாணம்.

ஆண், பெண் இருபாலரது
உடைகளும்
சிறந்த முறையில் தைத்துப் பெற
இன்றே நாடுங்கள்

PRAHASPATHY TEX
( Textiles & Tailoring )

15, GRAND BAZAAR,
JAFFNA

வளமான "வரவுக்கு"

வாழ்த்துகிறோம்

சிவகணேசன் ஸ்ரோர்ஸ்

41, பெரியகடை வீதி,


யாழ்ப்பாணம்.

## இந்துவின் வரவு இதழுக்கு
## இதய வாழ்த்துக்கள்

**A. S. Arumugam & Sons**

81, STANLEY ROAD, — JAFFNA.

---



சிறந்த பல் கண்ணாடி வேலைகளுக்கு

இன்றே நாடுங்கள்

# லாவண்யா

பல் மூக்குக் கண்ணாடி அகம்

175, மின்சார நிலைய வீதி, — யாழ்ப்பாணம்

கிளைகள்:

**வி. ரி. அன் சன்ஸ்,**
**302, மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**(எழிலகம் முன்பாக.)**

**வி. ரி, அன் சன்ஸ்,**
**கே. கே. எஸ் வீதி,**
**சுன்னாகம்.**
**(இலங்கை வங்கி அருகில்.)**

உங்கள் பாதங்கள் அழகானவை

எங்கள் பாதணிகளும்

அழகானவை,

இவை இரண்டையும்

இணைத்து வைப்பது

# பிராங்

# எம்போறியம்

16 (38), கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

இதயம் கனிந்த வாழ்த்துக்கள்

- பாடசாலைப் புத்தகப் பைகள்
- பிளாஸ்ரிக் பொருட்கள்
- அலுமீனியப் பொருட்கள்

என்பவற்றை நிதான விலையில்
வாங்கிட இன்றே நாடுங்கள்

# ஸ்ரீ ராம்

# விற்பனை நிலையம்

326, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்

வணிகக்கலை

வளர வாழ்த்துகிறோம்

சங்கீதம் சங்கமிக்கும்
சங்கீத சாம்ராஜ்யம்

# ஷண் றெக்கோடிங் ஸ்பொட்

கொம்பக்ட் டிஸ்கில் இருந்து நாடாவில்

பாடல்களைப் பதிவு செய்திட

ஷண் றெக்கோடிங் ஸ்பொட்
நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

மனமுவந்த

அன்பளிப்பு

↑

# ஸ்ரீ

# தாமோதர

# விலாஸ்

239, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

# இலங்கையினுடைய வருமானப் பகிர்வின் ஏற்றத் தாழ்வினைக் குறைப்பதற்கு ஏற்றுமதித் துறையின் பங்களிப்பு

இன்றைய வளர்முக நாடுகளின் பொருளாதாரப்பிரச்சனைகளில் ஒன்றாகப் பெருகி வரும் வருமான ஏற்றத் தாழ்வு அமைகின்றது. இதுவே வாழ்க்கைத் தர வேறுபாடு பொருளாதாரச் சமமின்மை என்பவற்றிற்கு அடித்தளமாக அமைகின்றது. இவ்வருமான ஏற்றத்தாழ்வுகள் வருமானப் பகிர்வில் மட்டுமல்லாது வெவ்வேறு பட்ட செயல்திட்ட சீரின்மையையும் ஏற்படுத்தி உள்ளது. குறிப்பாக

1. நுகர்வுக்கு அடிப்படை வசதியின்மை.
2. வேலைவாய்ப்பு இன்மையால் வருமான வழிமுறைகளைப் பெருக்க முடியாமை.
3. பொருளாதார அடித்தளமின்மை.
4. அபிவிருத்தியில் தாழ்ந்த வருமானம் பெறுவோரை பெருமளவில் ஈடுபடுத்தப்படாமை.
5. பொருளாதார செழிப்பின்மை.

போன்றவற்றிலும் இச் சமமின்மையானது தங்கியுள்ளதாகக் காணப்படுகின்றது. எனவே வருமான ஏற்றத் தாழ்வினை நீக்கி வருமான சம பங்கீட்டுத் தத்துவத்துடனான பொருளாதார வளர்ச்சியே பொருத்தமானதென நவீன பொருளியலாளர்களினால் கருதப்படுகின்றது. அவ்வாறான அடிப்படையில் ஏற்றத்தாழ்வினை நீக்கும் வருமான மீள் பங்கீட்டு உபாயமாக ஏற்றுமதித் துறையை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றது.


கி. அன்ரனி ஜோர்ஜ் ராஜன்
ஆண்டு 13 F
வர்த்தகப் பிரிவு


## வளர்முக நாடுகளின் வருமானப் பகிர்வு

ஒரு நாட்டினுடைய பொருளாதாரத்தில் அந்நாட்டிற்குப் பல்வேறுபட்ட வழிகளில் கிடைக்கப் பெறுகின்ற வருமானமானது எல்லாக் குடித்தனத் துறையினரும் ஏறத்தாள சமமாகப் பகிரப்படல் வேண்டும். இவ்வாறு சமமாகப் பகிரப்படுமாயின் நாட்டின் சகல மக்களுடைய வாழ்க்கைத் தரங்கள், வாழ்க்கைமட்டங்கள் சமமானதாக அமைவதுடன் இச் சம பங்கீடு நாட்டினுடைய பொருளாதார அபிவிருத்தி வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும். இந்த சம பங்கீட்டின்மைக்கு அரசினுடைய அக்கறை இன்மையால் வளர்முக நாடுகளில் இப் பிரச்சனை வெளிப்படையாகக் காணப்படவில்லை. இப் பிரச்சனையை நீக்கினால் மட்டுமே இந்நாடுகளுடைய வளர்ச்சி, அபிவிருத்தி துரிதப்படுத்தப்பட முடியும். மாறாக இப் பங்கீடு சமமற்றுக் காணப்பட்டால் வாழ்க்கை மட்ட, வர்க்க பேதம் தோன்றுவதுடன் பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்திக்கு இப் பிரச்சனை முட்டுக்கட்டையாக அமையும் ஒரு நாட்டினுடைய வருமானப் பகிர்வே நாட்டு மக்களுடைய வாழ்க்கைத் தரத்தினை தீர்மானிப்பதாக அமைகின்றது. அண்மைக் காலத்தில் உலகளாவிய மட்டத்தில் ''பங்கீட்டு சமத்துவம்'' என்பதான அபிவிருத்தி முன்னுரிமை

செயற்பாட்டைக் கருத்திற் கொள்ள வேண்டுமென பரவலாக எடுத்துரைக்கப் பட்டது. பொதுவாகவே வளர்முக நாடுகளுக்கிடையில் பெருகி வரும் வருமான ஏற்றத் தாழ்வுகள் குறித்து 1970 களின் போது அதிக ளவில் அக்கறை செலுத்தப்பட்டது. இவ் அக்கறைக்கு இணங்கும் முகமாகவே "வெறும் வளர்ச்சி" என்ற பொருளாதாரக் கருத்துக்கோள் புறக்கணிக்கப்பட்டு சர்வதேச நிறுவனங்கள் பயன்படுத்திய பதப் பிரயோகமாகிய "பகிர்வுடன் கூடிய வளர்ச்சி" என்ற சொற்களின் மூலம் இந்த விதமான அக்கறை செலுத்தப்பட்டது. இதன் படி இது வருமான சமத்துவப் பகிர்வுடன் கூடியதான பொருளாதார வளர்ச்சியே அவசியமானதெனப் புலப் படுத்தியது.

இலங்கை உட்பட வளர்முக நாடுகளில் இவ் வருமான ஏற்றத்தாழ்வானது மிகவும் அதிகமாகப் பரம்பிக் காணப்பட்டது. எனினும் இந் நாடுகள் இவ் வருமான ஏற்றத் தாழ்வினை குறைத்துக்கொள்வதன் ஊடாக இலகுவான முறையில் வளர்ச்சியைத் துரிதப் படுத்துவதொன்றாக காணப் படும். இதனைப் பின்வரும் இரு வழிகளில் ஊக்கப்படுத்தி விட முடியும்.

1. உயர் வருமானம் உழைப்பவர்கள் தாழ்ந்த வருமான மட்டத்தில் இருப் போருக்கு வருமான வழி முறைகளை அதிகரிக்கச் செய்தல்.

2. அபிவிருத்தி நடவடிக்கைகளில் அவர் களுடைய பங்கேற்பினை அதிகளவில் ஊக்கப்படுத்தல்.

## இலங்கையினுடைய வருமான ஏற்றத்தாழ்வு நிலை

இலங்கையை நோக்கும் போது ஏனைய தென்னாசிய வளர்முக நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் தெளிவான வருமான ஏற்றத் தாழ்வு காணப்படாத சூழ்நிலையிலும் கூட இலங்கையின் கொள்கை வகுப்பாளர்கள் ஆரம்பத்திலிருந்து ஓரளவு இச் சமநிலையைப் பேண முன்வந்துள்ளனர். 1950 இல் உருவாக்கப்பட்ட அரச பல்வேறுபட்ட செயல் திட்டங்களிலும் இந்த எண்ணக்கரு முன் வைக்கப்பட்டுள்ளன. இவ் வருமான ஏற்றத் தாழ்வினை நீக்கும் நோக்குடனே பத்தாண்டு, ஐந்தாண்டுத் திட்டங்கள் முன் வைக்கப்பட்டன. இவை தேசியவருமான வாழ்க்கைத்தர மட்டத்தினை உயர்த்தும் நோக்குடனேயே உருவாக்கப்பட்டது. இதன் மூலம் வருமான ஏற்றத் தாழ்வினைச் சீர்செய்தலே ஆகும்.

இத் திட்டங்களின் அடிப்படையில் குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங் களுக்கு இத் திட்டங்களின் மூலம் பெருமளவிலான அந்நியச் செலாவணியை ஏற்றுமதி மூலம் பெறப்பட்டு அவற்றைக் கொண்டு அவர்களின் தலா வருமானத்தினை உச்சப்படுத்தி அவர்களுடைய அடிப்படை வசதிகளை நிறைவடையச் செய்து வருமான ஏற்றத் தாழ்வை சீர்செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. அண்மைக் காலத்தில் குடிமக்களுடைய வருமானப் பகிர்வில் பேரளவிலான ஏற்றத் தாழ்வுகள், வேலைத் திண்டாட்டம் போன்றவற்றின் மூலம் இது முக்கியத்துவம் பெறுகின்றது. 1977-1987 வரையான காலப்பகுதியில் அரச செலவீனத்தில் வறிய மக்களுடைய மேம்பாட்டுத் திட்டங்கள் மீது எந்தவித கவனமும் செலுத்தப்படவில்லை. இக்காலப் பகுதியில் வேலையின்மைப் பிரச்சனை அதிகளவில் எழுந்ததினால் வறிய மக்களுடைய மெய் வருமானப் போக்கு வீழ்ச்சி அடைந்து காணப்பட்டது. இக் காலப்பகுதியின் பின்னரே வறியவர் மீது குறிப்பாக கவனம் செலுத்தப்பட்டே ஜனசக்தி போன்ற வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தி வறியவர் மீது பார்வை திருப்பப்பட்டது.

இச் செயற்பாட்டின் பின்னர் வறியவருக்கு முன் உரிமை வளங்கப்படட்ன.

கி. அன்ரனி ஜோர்ஜ் ராஜன்

அண்மைக் காலத் தரவுகளின்படி இலங்கையில் வறியவர்கள் ¼ பங்கினராக மொத்த சனத்தொகையில் காணப்படுவதால் அரசு வறுமை ஒழிப்பினை மேற்கொள்ள முழுமையாக ஈடுபட்டுள்ளது, 1981–82ல் இவ் வறுமை தொடர்பான சுட்டெண்ணின்படி செல்வந்தரிடமிருந்து வறியவருக்கு 3.1 சதவீதம் செல்வம் இடமாற்றம் செய்ய வேண்டிய நிலை காணப்பட்டது. அபிவிருத்தி அடைந்த நாடுகளை நோக்கும் போது இந்நாட்டு அரசுகள் செல்வந்தர் மீது நேர் வரிகளை விதித்து வறியவருக்கு வருமான சமநிலையை ஏற்படுத்துவதனூடாக நாட்டை மென்மேலும் அபிவிருத்தி அடையச் செய்கிறது. ஆனால் இலங்கை போன்ற வறிய நாடுகளில் அரசாங்கம் இச் செயற் பாட்டை ஆற்ற முடியாதுள்ளது. ஏனெனில், செல்வந்தவர்க்கத்தவர் பெருமளவில் காணப்படாமல் வறியவரே அதிகளவில் காணப்படுவதனாலாகும். 1977 இன் பிற்பட்ட காலத்தில் வருமான ஏற்றத் தாழ்வு அதிகரிக்கும் ஒரு பெரும் போக்கு காணப்பட்டதால் வறிய மக்களின் வாழ்க்கை நிலைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு இருந்தது. இதன் காரணமாக அரசு மிகத் தீவிரமாக செயல்ப்பட்டது.

## வருமான பகிர்வின் ஏற்றுமதித் துறையினுடைய முக்கியத்துவம்

இந்த வகையான வருமானப் பகிர்வின் ஏற்றத் தாழ்வுகள் குறைந்திட வேண்டுமென்ற பின்னணியில் நோக்கும் போது இக்குறிக்கோளை எய்துவதற்கு ஏற்றுமதித் துறையினுடைய திருப்திகரமான பங்களிப்பு அவசியமானதெனக் கொள்ளப் பட்டு வந்தமைக்கு பேரினப் பொருளாதார ரீதியில் சில அடிப்படைகள் உண்டு.

1) வறிய, வாழ்க்கைத்தரம் குறைந்த மக்களுக்கு நுகர்விற்கு வேண்டிய அடிப்படை வசதி அளித்தல்.

அதாவது பொருளாதாரத்தில் காணப்படுகின்ற கீழ் உழைப்பினைப் பெறுகின்ற வறிய மக்களுடைய நுகர்விற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை நுகர்வதற்கு ஏற்றவாறு அவர்களது வாழ்க்கை மட்டத்தை உயர்த்தி மக்களுக்கு இப்பண்டங்கள் சேர்வதற்கு வழி செய்ய வேண்டும். இவ்வாறான நுகர்வில் முக்கியத்துவம் வாய்ந்த பண்டங்கள் சேவைகள் போதியளவில் கிடைக்கக் கூடியதாக இருந்தால் மட்டுமே அவர்கள் தமது வருவாயைப் பயன்படுத்தி சம அளவிலான கேள்வியை ஏற்படுத்திவிட முடியும். அத்துடன் அரசு பண்டங்கள், சேவைகள் ஊடாக விதிக்கப்படுகின்ற நேரில் வரிகளைத் தளர்த்துவதன் ஊடாகவும் அவர்களுடைய கொள்வனவு வலுவை அதிகரித்துவிடமுடியும். எனினும் இச் செயற்பாட்டை வருமானப் பகிர்வினால் மட்டும் ஏற்படுத்த முடியாது. மாறாக நுகர்வுப் பொருட்கிடைப்பனவு அதிகரிக்கப்படல் வேண்டும். இந்நோக்கின் பயனாக ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்பட்டும் அத்தியாவசியப் பொருட்பங்கீட்டில் சமத்துவ அளவினைக்கொண்டு தலா வருமானத்தை சமப்படுத்த முடியவில்லை. இதற்கு அடிப்படையாக உள்நாட்டு உற்பத்தி போதியதாக இருக்குமெனக் காணப்படவில்லை. உள்ளாட்டு உற்பத்தியை அதிகரிப்பினும் நாடு கணிசமான அளவிலேயும் இறக்குமதிசெய்யவேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது. உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பினும் பொருட்களும், இயந்திரங்களும் தேவைப்பட்டன. மேலும் வறிய மக்களுடைய தேவையை நிறைவுறுத்த வடிகால் அமைப்பு, குழாய் நீர் வசதி, கட்டடப் பொருட்கள் என்பன தேவையாக அமைந்தன. இவ்வாறானவற்றை இறக்குமதி செய்வதன் மூலமே உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கி, இவற்றின் மூலம்

ஏற்றுமதியை ஊக்கப்படுத்திவிட முடியும். எனவே ஏற்றுமதித் துறையினுடைய உயர் மட்டமாக இறக்குமதியே தங்கி உள்ளது.

2) வறிய, வாழ்க்கைத்தரம் குறைந்த மக்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கி வசதி அளித்தல்.

அதாவது வருமானம் குன்றிய மக்களிடையே வருமானப் பகிர்வினை சமப்படுத்துவதற்கு புதிய புதிய வேலைத் திட்டங்கள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும். நமது நாட்டை நோக்குகையில் 28 சதவீதத்தினர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்றனர். இதனை நீக்குவதற்கு அடிப்படையில் வேலைவாய்ப்பு மூலாதாரங்களை உருவாக்கி பேரண்டப் பொருளியல் ரீதியான நிலையை அமைத்தல் வெண்டும். வறிய மக்களின் வருமான மட்டத்தை நோக்கும் போது அதனை சீர் செய்வதற்குரிய சிறந்த மூலாதாரமாக வேலைவாய்ப்பினை உருவாக்குவதே சிறப்பானதாக அமைந்தது. இவர்களின் வறுமையை ஒழிப்பதற்கு செயற்திறன் மிக்க இறுதித் தீர்வு இதுவாகும். இதன் அடிப்படையில் அரசு அண்மைக் காலங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட ஜனசக்தி திட்டத்தினூடாக இத் திட்டத்தில் பங்கு கொள்ளும் குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு வழங்கல், ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித்திட்டம், சுதந்திர வர்த்தக வலயம் இன்னும் பல் வேறுபட்ட செயல் திட்டங்கள் உருவாக்கி வறிய மக்களின் மெய்வருமான அளவினை அதிகரிக்கச் செய்கிறது. இதன்மூலம் கிடைக்கும்வருவாயைக் கொண்டு பண்டங்களுக்குத் தாக்கமான கேள்வியை ஏற்படுத்த முடியும். இத் தொழில்வாய்ப்பால் வருமான அதிகரிப்பினைப் பெற்ற வறிய குடும்பங்கள் வீட்டு நிர்மாணம், பிள்ளைகளுக்கு கல்வி அறிவினைப் புகட்ட முடிதல் என்பன ஏற்பட்டு வாழ்க்கை வளம் பெற உதவும்.

3) வறிய, வாழ்க்கைத் தரம் குறைந்த மக்களுக்கு பொருளாதாரத் தளத்தினைப் பலப்படுத்தல்

அதாவது ஒரு பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதற்கு வருமான சமத்துவம் அவசியம். இச் சமத்துவத்தை அடைவதற்கும் மக்களிடையே பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கும் வருமான அடித்தளம் அவசியமானதாகக் காணப்படுகின்றது. இவ் அடித்தளம் காணப்பட்டாலே அவர்களின் வருமான சமத்துவம் உறுதிப்பாடுடையதாக அமையும். இந்த விதமான அடித்தளத்தினை அமைப்பதற்கு ஏற்றுமதி அதிகரிப்பு, மாற்றல் கொடுப்பனவு, தொழில்வாய்ப்பு என்பன அவசியமான தொன்றாகக் காணப்படுகின்றது. இவ் அடித்தளத்தினை உருவாக்குவதற்கு அரசாங்கம் உணவு மானியம், இலவசக்கல்வி, சுகாதாரம் போன்ற செலவீனங்களை உட்படுத்திய முறையில் இம்மாற்றங்களை வழங்கி வருமானம் குறைந்த மக்களுடைய மெய் வருமானத்தில் சேமிப்பை ஏற்படுத்த உதவுகின்றன. 1977 க்கு பிற்பட்ட காலத்தில் இலங்கையில் அதிகரித்த ஏற்றத்தாழ்வை உணர்ந்த அரசு அவர்களின் கொள்வனவு சக்தியை உறுதிப்படுத்திவிட பெருமளவில் முயன்று வருகின்றது. இந்த மானிய வழங்கல் திட்டங்கள் போசனை குறை நிரப்பு திட்டமாகவும், வருமான குறை நிரப்புத் திட்டமாகவும் அமைகிறது. 1953 – 1973 காலத்தில் வருமான சமத்துவம் காணப்பட்டது. இதற்கு பெருமளவு பயன்படுத்தி வந்தது இத் திட்டங்களே. இத் திட்டங்கள் மூலமாகவும், தொழில் வாய்ப்பின் மூலமாகவும் கிடைக்கப் பெறும் வருமானங்கள் வறியவருக்கு அதிகளவில் நுகரப்போகும் மனநிலை உருவாகிறது. இத் தொழிற்பாட்டால் கேள்வி கூட நாட்டில் பணவீக்க நிலை ஏற்பட மீண்டும் கொள்வனவு சக்தி குறைகின்றது. எனவே அவர்களை பெரியளவில் மூல தரங்களை ஏற்படுத்துவது நோக்கல்ல. மாறாக அவர்களது கேள்வி

யைச் சமப்படுத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பினூடோ அல்லது இறக்குமதியினூடோ கொள்வனவு சக்தியை பெற்றுக் கொடுக்க வேண்டும். இச் செயற்பாட்டை நிகழ்த்துவதற்கு உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவித்து அதன் மூலம் ஏற்றுமதியை அதிகரித்து கிடைக்கப் பெறும் வருவாயில் மாற்றல் கொடுப்பனவுகளை வழங்குவதே சிறப்பானதாகும்.

4. பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்கு தாழ்ந்த வருமானம் உடையவர்களையும் ஈடுபடுத்தல்

அதாவது நாட்டில் ஏற்படுத்தப்படுகின்ற பொருளாதார அபிவிருத்திச் செயல் திட்டங்களில் செல்வந்தர் மட்டும் அதிகளவில் ஈடுபடுவதைத் தவிர்த்து வறிய, வாழ்க்கைத் தரம் குறைந்தவர்களையும் அந் நடவடிக்கைகளில் ஈடுபடவைத்தல் என்பதாகும். பல்வேறுபட்ட வலயங்களில் அடிப்படையில் தோட்டப் பயிர்கள் செறிவாகப் பெருமளவில் உற்பத்தி செய்யக்கூடிய உற்பத்தி விளை நிலங்களில் வறியவர்களும் உற்பத்தி செய்து ஏற்றுமதியைப் பெருக்கி மொத்தத் தேசிய உற்பத்தியை அதிகரித்து நாட்டினுடைய வருமானத்தை உயர்த்த முடியும். இந் நிலையில் உற்பத்தி அதிகரிப்பதன் விளைவாக உயர்ந்த அளவிலான ஏற்றுமதிச் செயற்பாடு ஏற்படும். இவ்வாறான வலயங்களில் வாழ்வோரது நேரடி வருமான மூலாதாரங்கள் அதிகரிக்கப்படும். ஏற்றுமதித்துறையில் பாரம்பரியமற்ற உற்பத்திகளை உற்பத்தி செய்து பொருளாதாரத்தில் நன்நிலையை அடைய முடியும். இவ்வாறு பெருமளவிற்கு திரண்டுள்ள சிறு தோட்ட உடமையாளர்களின் வருமானங்களை அதிகரிக்கச் செய்வதன் மூலம் ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்து விடுவதற்கு உதவுகின்றது. ஏற்றுமதிப்பயிர் உற்பத்தித் திறன் அதிகரிப்பு வறிய சிறு நிலச் சொந்தக்காரர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கும், அதன் மூலம் நாட்டின் ஏற்றத் தாழ்வான வருமானப் பகிர்வினை குறைத்து விடுவதற்கும் நேரடியாக உதவ முடியும்.

5. நாட்டினுடைய பொருளாதார செழிப்பினை ஏற்படுத்தல்

அதாவது ஏனைய செயற்பாடுகள் நிகழ்வதினால் வறுமை, ஏற்றத் தாழ்வுகள் நீங்கி பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தி ஏற்படுதலே செழிப்பு ஏற்படுதலாகும். 1955, 1984 ஆகிய ஆண்டுகளில் இலங்கை பாரிய அளவில் செழிப்பு நிலைகளையும், ஓரளவு குறைந்த செழிப்பு நிலைகளையும் அனுபவித்து வந்துள்ளது. இதன் விளைவாகவே 1951 இல் வருமான ஏற்றத் தாழ்வு பலப்படுத்தப்பட்டு, குறைக்கப்பட்டு இருந்தது 1977 இன் போது அரசு நாணயப் பெறுமதி இறக்கம் மேற் கொண்டு இருக்காவிடின் வருமான ஏற்றத் தாழ்வுகள் குறைவாக அமைந்து செழிப்புத் தன்மை தொடர்ந்து காணப்பட்டு இருக்கும். 1984 இன் போது தேயிலைத் துறையின் முன்னணி உற்பத்தியினால் இவ் வருமானத்தைக் கொண்டு அவை சார்ந்த வறியவருக்கு உயர் கூலி வழங்கப்பட வாழ்க்கைத்தரம் அதிகரிக்கப்பட்டது. செழிப்புநிலைக்கட்டம் ஒன்றின் போது உருவாக்கப்படும் ஏற்றுமதி வருமானம், குறைந்த வருமானப் பிரிவினரின் சம்பாத்தியங்களுக்கு குறை நிரப்பு செய்வதற்கு நேரடியாக உதவி அளிப்பதன் மூலம் ஏற்றத் தாழ்வு குறைக்கப்படுகிறது. இதனால் செழிப்பு நிலையின் போது வறியவருடைய சம்பாத்தியங்கள் அதிகரிக்கப்பட அவர்களது கொள்வனவாற்றல் கூடி வாழ்க்கைத் தரம் உயர்வடைகின்றது.

வருமானப் பகிர்வில், உற்பத்திப் பகிர்வில் பங்கீட்டு நீதியை ஏற்படுத்த பொருளாதார வளர்ச்சியானது ஏற்றுமதித் துறையில் பங்கீட்டு நீதியுடன் கூடியதாக உருவாக்கப்படல் வேண்டும் என்பதாய் இக் கட்டுரை அமைகின்றது. இக் கோட்பாடு

சிறப்பாக அமைய வேண்டுமாயின் எமது ஏற்றுமதிகள் தேசிய பொருளாதாரத்திற்கு பெருமளவு ஊட்டிய பெறுமதியை வழங்க வேண்டும். அவ்வாறாயினே பெருமளவு அந்நிய செலவாணி உழைப்பு இறக்கு மதிக்குத் தேவையான வருவாயை உழைத்தல், வேலைவாய்ப்பு வழங்கல் வறுமை மட்டத்தினரையும் பொருளாதார செயற் திட்டத்தில் பங்கு பெறச் செய் தல், வருமான அதிகரிப்பினை ஏற்படுத்தல், நுகர்வு ஆற்றல் அதிகரிப்பினை ஏற்படுத் தல், அதிகரித்த வறுமை மட்டத்தவரின் அடித்தள வசதியை உருவாக்கல் போன்றன சாத்தியமானதாக அமையும். □

---

உசாத்துணை நூல்கள்:

i) பொருளியல் நோக்கு 1993 பெப்ரவரி

ii) மத்திய வங்கி அறிக்கை 1992

இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களைப் பற்றிய கண்காட்சி களை நடத்தவும், கருத்தரங்குகளை நடத்தவும் பயன்படக்கூடிய வகையில் ஒரு கண்காட்சி நிலையத்தை இலங்கை முதலீட்டுச் சபை, சிங்கப்பூர் ''பிக்கோ ஆர்ட்ஸ்'' நிறுவனத்தின் உதவியுடன் உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் ஏற்றுமதிப் பொருள் களைக் காட்சிப்படுத்தும் வசதியை ஏற்றுமதியாளர் பெறுவது டன் இலங்கைக்கான உல்லாசப் பயணிகள் வருகையும் அந்நியச் செலாவணி உழைப்பும் அதிகரிக்கும்.

வரவு மலரே வருக! வருக!

V

KANAPATHY
STORES,
JAFFNA.

மலர்ந்து வரும் வரவுக்கு
வாழ்த்துக்கள்.

நவநாகரிகத்துக்கேற்ப,
சேட்டிங், சூட்டிங், பேபிசூட்
புதிய டிசைன்,
சாறி வகைகள்,
சாறிகளுக்கேற்ற அனைத்துநிற
சகல வகையான,
பிளவுஸ் துணிகள்.
யாவற்றையும் பெற்றுக் கொள்ள,
மக்கள் மத்தியில் நிலைத்துவிட்ட
கைராசியான ஸ்தாபனம்.

பாலேந்திராஸ்

170, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

வரவு சஞ்சிகையே
நீ வளமுடன் வருக.

க. கு. கந்தையாபிள்ளை
அன் சன்

318. மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

வரவு விருட்சம் போல் மிளிர
வாழ்த்துகிறோம்,

கணேசானந்தாஸ்
பட்டுமாளிகை

15, நவீன சந்தை.
யாழ்ப்பாணம்.

யாழ் இந்துக் கல்லூரியின்

வரவு வளம்பெற வாழ்த்துகிறோம்.

**BOSECO**

31, MODERN MARKET
HOSPITAL ROAD,
JAFFNA.

வரவுக்கு

எமது வாழ்த்துக்கள்

கண்ணாடி வகைகளை
மலிவாகப் பெற்றுக் கொள்ளவும்
பிறேம் போடவும்
சிறந்த ஸ்தாபனம்

**RAJENDRA STORES**

No 103. (192) K. K. S. Road,
JAFFNA.

*Prop:* T. RAJENDRAN

SPACE DONATED BY

V

**RAJAH CREAM HOUSE**

36, KASTHURIAR ROAD, — JAFFNA.

## வரவுக்கு வாழ்த்துகிறோம்

# கலக்ஸி புகைப்பட சேவை

### வர்ண புகைப்பட பிரதியாக்குநர்

ஆரம்ப பிரதியாக்குநர் பயிற்சியை கலக்ஸி புகைப்பட சேவையில் பெறுவதன் மூலம் ஒரு சிறந்த பிரதியாக்குநராக எமது ஸ்தாபனத்திலோ வேறு நிறுவனங்களிலோ வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்ள முடியும். மேலதிக விபரங்கட்கு எமது ஸ்தாபனத்துடன் தபால் மூலம் தொடர்பு கொள்ளவும்.

கலக்ஸி புகைப்பட சேவை,
337 1/1, முதலாம் மாடி,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## நவீன புடவை உலகின் முன்னோடிகள்

சிறந்த ரகம், நிதான விலை
உங்கள் மங்கள வைபவங்களுக்கேற்ற

- கூறைச் சேலைகள்
- செந்தூரப் பூவே
- காஞ்சிபுரம்
- பெனாறிஸ்
- சாறி வகைகள், பட்டுவேட்டி

ஆகியவற்றை மலிவான விலையில் பெற்றுக்கொள்ள
யாழ் நகரில் தன்னிகரற்ற ஸ்தாபனம்

# சுகுணாஸ் பிடவை மாளிகை

29, நவீன சந்தை, — யாழ்ப்பாணம்.

- கிளை: இருஷிகா ஆடை அகம்

69 A, நவீன சந்தை, — யாழ்ப்பாணம்.

# கல்யாணி கிறீம் ஹவுஸ்

சகல வகையான,

● ஐஸ்கிறீம் வகைகள்

● குளிர் பானங்கள்

● சிற்றுண்டிகளுக்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்

**கல்யாணி கிறீம் ஹவுஸ்**

73, கஸ்தூரியார் வீதி, — யாழ்ப்பாணம்

வரவே நீ நீடூழி வாழ்க.

மு. குமாரசாமிப்பிள்ளை

ஸ்ரோர்ஸ்

120. மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

தரமான இமிரேசன் கோல்ட் கவறிங்
நகைகள், மணப்பெண்களின்
சோடனை நகைகள்.
லேஸ், நூல் வகைகள்.
சிறுவர் விளையாட்டுப் பொருட்கள்
மற்றும்,
உள்நாட்டு, வெளிநாட்டு அழகு
சாதனப் பொருட்களை
நிதான விலைக்கு,
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள,

ஜெயா அழகு சாதன
மாளிகை

160, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்,

177, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

# தொழிலாளர் நலன் பேணும் சட்டங்கள்

தொழில் ஸ்தாபனங்களில் வேலைக்கு அமர்த்தப்படும் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதையும் மேம்படுத்துவதையும் பிரதான நோக்கமாகக் கொண்டே தொழிலாளர் சட்டங்கள் அரசினாற் பிரகடனம் செய்யப்படுகின்றன. இதற்கு முன்னர் தலையிடாக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. அக்காலத்தில் முதலாளிகள் தமது விருப்பத்திற்கமைய தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி விரும்பிய சம்பளங்களை வழங்கி விரும்பிய வேளையில் அவர்களை வேலையிலிருந்து நீக்கும் சுதந்திரத்தை அனுபவித்து வந்தார்கள். இக் கொள்கைக்கு அரசாங்கமும் உடந்தையாக அமைந்தது. ஆனால் இந்நிலைமை படிப் படியாக மாற்றமடைந்து தலையிடாக் கொள்கை கைவிடப்பட்டு முதலாளிமாரின் சுரண்டல்களிலிருந்து தொழிலாளர்களைப் பாதுகாப்பது அரசின் பிரதான பொறுப்பாக மாற்றப்பட்டது. இவ்வாறு ஏற்பட்ட மாற்றத்தின் பிரதிபலிப்பாகவே தொழிலாளர் சட்டங்கள் அரசினாற் பிரகடனம் செய்யப்பட்டு, செயற்படுத்தப்பட்டன.

## சர்வதேச தொழில் ஸ்தாபனம்
## International Industrial Organaization

சர்வதேச ரீதியில் முதலாளிமார்களின் சுரண்டல்களிலிருந்து தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக ஐ. நா சபையினால் உருவாக்கப்பட்ட ஒரு நிறுவனமே, சர்வதேச தொழில் ஸ்தாபனம் ஆகும். இதில் இலங்கை 1948 ஆம் ஆண்டு அங்கத்துவம் பெற்றது. இத்தாபனத்தாற் கொண்டுவரப்பட்ட பல்வேறு தீர்மானங்கள் இலங்கை அரசினால், நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் இத்தாபனத்தால் கொண்டு வரப்பட்ட தீர்மானங்கள், அங்கத்துவ நாடுகளில், நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கட்டாயமில்லை.


கு லவீந்திரகுமார்
ஆண்டு 13ஏ
வர்த்தகப் பிரிவு


இதன் தொழிற்பாடுகள்:

1. அங்கத்துவ நாடுகளுக்கு நிபுணத்துவ ஆலோசனை வழங்குதல்.
2. அங்கத்துவ நாடுகளுக்கு நிதி வசதி அளித்தல்.
3. அங்கத்துவ நாடுகளின் தொழிலாளருக்குப் பயிற்சியை வழங்கல்.

## தொழிற் திணைக்களம்
## Labour Department

இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள், இலங்கை கொண்டுவரப்பட்ட போது அவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக, பிரித்தானிய அரசால் முதன் முதலாக இலங்கையில் தொழிலாளர், சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. உதாரணம் இந்தியக் குடியேற்ற தொழிலாளர் கட்டளைச் சட்டம்.

மேலும் இவர்களின் நலனைக் கவனிப்பதற்காக 1923 ஆம் ஆண்டு "இந்திய தொழிலாளருக்கான திணைக்களம்" உருவாக்கப்பட்டது. பின்னர் 1931 ஆம் ஆண்டு இவ்வமைப்பு தொழிற் திணைக்களமாக மாற்றியமைக்கப்பட்டது. இதற்குப்

பொறுப்பாக தொழில் ஆணையாளர் காணப்படுவர். இவர் நிர்வாகத்தை வசதி செய்வதற்காக மாவட்ட ரீதியில் உதவி ஆணையாளரை நியமித்திருப்பார். இத் திணைக்களத்தின் கடமைகளாவன:-

1. தொழிலாளருக்கான புதிய சட்டங்களை உருவாக்கலும் நடைமுறைப் படுத்தலும்.
2. தொழிலாளருக்கான கருத்தரங்குகளை நடாத்தல்.
3. தொழிலாளர் வர்த்த மானியை வெளியிடல்.
4. தொழிற்பிணக்கைத் தீர்க்க உதவுதல்.
5. இழிவுக் கூலியைத் தீர்மானிக்க உதவுதல்.
6. தொழிலாளர் சார்பாய் பேரம் பேசல்.

இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்டங்களை மூன்று பிரதான வகுதிக்குள் உள்ளடக்கலாம்.

1. சமூக நலன் சட்டங்கள்.
2. தொழிற் பிணக்குகளைத் தடுத்தலும் தீர்த்தலும்.
3. தொழில் நிபந்தனைகளை வரையறுத்து ஒழுங்குபடுத்தும் சட்டம்.
4. ஏனைய தொழிலாளர் சார்பான சட்டங்கள்.

## *ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் (1958ம் ஆண்டு 15 ஆம் இலக்கம)*

இச்சட்டத்திற்கமைய ஊழியர்களிடமிருந்தும், தொழில் தருநர்களிடமிருந்தும குறித்த வீதத் தொகை பணம் மத்திய வங்கியின் ''ஊழியர் சேமலாப நிதிப் பிரிவுக்கு'' சேர்த்தலைக் குறிக்கும். இந்தச் சட்டத்தின் படி ஊழியரின் சம்பளத்தில 8%த்துடன் முதலாளி, ஊழியரின் சம்பளத்தில் 12%த்தையும் சேர்த்து முதலாளியினால் மத்திய வங்கிக்கு அனுப்பப்படும். இவ்வாறு அனுப்பப்படும் தொகையானது முதல் மாதக் கட்டணம் அடுத்தமாத இறுதிக்குள் அனுப்ப வேண்டும். இத் தொகைக்கு மத்திய வங்கி குறித்த வீத வட்டிவழங்குகின்றது. இக்கொடுப்பனவானது ஒரு ஊழியர் காணப்படும் நிறுவனத்தின் முதலாளியும் கட்டாயம் செலுத்த வேண்டுமென இச்சட்டம் வலியுறுத்துகின்றது, இச் சேமலாப நிதியை முடிவுக்காலத்தில் தொழிலாளர்கள் பின்வரும் சந்தர்ப்பங்களில் மீளப்பெறமுடியும்.

1. ஆண் ஊழியர் 55 வயதை அடைதல்.
2. பெண் ஊழியர் 55 வயதை அடைதல்.

என்ற சந்தர்ப்பங்களில் E. P. F. பெறுகின்றனர். மாறாகத் தொழிலாளர்கள் இளைப்பாறுவதற்கு முன்னர்

1. ஊழியர் இறந்து போதல்.
2. ஊழியர் தளர்ச்சி காரணமாய் நிரந்தரமாக முற்றிலும் திறன் அழிந்தோர்.
3. நிரந்தரமாக இலங்கையைவிட்டு குடி அகல்வோர்.
4. திருமணம் செய்வதற்காக தொழிலினை விட்டு நீங்கும் பெண்பாலார்.
5, திணைக்களத்தில் பணியாளராக மாறுவோர்.

போன்றவர்கள் E. P. F. பெற்றுக் கொள்ள முடியும் என்றாலும்,

1. 50 வயதை அடைந்த பெண்கள்.
2. 55 வயதடைந்த ஆண்கள்.

ஆகியோர் இத்திட்டத்திற் சேர்ந்து கொள்வதைச் சட்டம் தடைசெய்துள்ளது.

ஊழியர் சேமலாப நிதியைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் தொழிற்திணைக்களத்திற்கு மட்டுமே உரியதாகும். இதிற் புதிதாகச் சேரும் ஊழியர்களைப் பதியப் பயன்படுவதே பதிவுச்சீட்டாகும். இது தொழிற் சந்தோரில், ஊழியர் சேமலாப நிதி அலுவலகத்தில் பெறப்படும். இவ்வாறு ஊழியரை முதன் முதலில் பதிவு செய்யும் வேளையில், வேலைக்கமர்த்துபவர் ஊழியர் உதவியுடன், இவ்வட்டையை நிரப்பிக் கொள்

ளுதல் வேண்டும். இவ்வட்டையில் ஊழியர் பெயர், பிறந்த திகதி, வாழ்க்கைத் துணைவர், வாழ்க்கைத் துணைவி பெயர், பெற்றோர்பெயர் ஆகியவிடயங்கள் இடம்பெறும். ஊழியர் பதிவுச் சீட்டுடன், ஊழியர் ஒவ்வொருவருக்கும், அங்கத்துவப் பத்திரம் நிரப்பி வைத்துக் கொள்ளுமாறு முதலாளி வேண்டுவார். அங்கத்துவப் பத்திரத்தில் கைப்பெருவிரல் அடையாளம் வைப்பதற்கான இடமும் விடப்பட்டிருக்கும். கைவிரல் அடையாளம் இடப்படக் காரணம் அவர்கள் ஒவ்வொருவருக்கும்,ஒப்புடைய பெயரையோ அல்லது ஒரே பெயரையோ கொண்டிருப்பதனாலாகும். இவர்களுக்குப் பணம் கிடைக்கும் காலத்தில் அடையாளங் காண்பது கடினமாகும். எனவே நலனுரிமை கோருவோர் மீது ஐயம் ஏற்படும்போது கைவிரல் அடையாளத்தால் இனம் காணலாம்.

இவ்வாறு சரியாக பதிவு செய்த பின் இப்பத்திரங்கள், வேலைக்கமர்த்துவோரிடம் அனுப்பி அவராற் பேணப்பட்டு பின் ஊழியர் வேலை விட்டு நீங்கும்போது அவரிடம் கொடுபடும். வேலைவிட்டு நீங்கும் தொழிலாளர் புதிய ஓர் தொழிலை ஏற்கும்போது செய்ய வேண்டிய முக்கிய கடமை என்னவெனில் அவ்வங்கத்துவப் பத்திரத்தைப் புதிய முதலாளியிடம் காட்டுதல் வேண்டும். மேலும் தம்மைப் புதிதாய், வேலைக்கமர்த்தியவரிடம், தனது பழைய அங்கத்துவ இலக்கத்தையும், பழைய முதலாளியின் பெயரையும் அறிவிக்க வேண்டும்.

ஓர் ஊழியர் எக்காரணத்திலிருந்தும் மாத இடையில் வேலையிலிருந்து நீக்கப்படின், அடுத்த மூன்று மாதங்களுக்கும், அவருடைய அங்கத்துவ இலக்கம், பெயர் என்பன திரட்டில் தொடர்ந்தெழுதப்பட வேண்டும். எனினும் அவர் குறிப்பாய் ''நீக்கினார்'' என எழுத வேண்டும். அவரின் பெயருக்கெதிரில், நேராக ஓர் கோட்டைக் கீறிக்கொள்ளலாம். மேலும் ஊழியர் சேமலாப நிதியிலிருந்து நீக்கப்பட்ட ஒருவரின் இலக்கம் வேறு புதிய ஊழியருக்கு வழங்கலாகாது.

இவ்வாறு தனியார் கூட்டுத்தாபன ஊழியருக்கு வழங்கப்படும், ஊழியர் சேமலாப நிதிக்கும், ஒய்வூதியத்திற்கும், இடையில் பல வேறுபாட்டைக் காணலாம்.

| ஊழியர் சேமலாப நிதியம் | ஒய்வூதியம் |
|---|---|
| 1. தனியார் திணைக்களம் தவிர்ந்த ஏனைய துறை ஊழியருக்கு தொழிலை விட்டுநீங்கும் போது இது வழங்கப்படும். | திணைக்கள ஊழியர் வேலையை விட்டு நீங்கிய பின் அவர்களுக்கு மாதாமாதம் வழங்கப்படும். |
| 2. ஊழியர் சேமலாப நிதி ஒரு தொகைக் கொடுப்பனவு. | ஒய்வூதியம் மாதாமாதம் கொடுக்கப்படும். |
| 3. சேமலாப நிதி சட்டத்தால் நிர்வகிக்கப்படும். | ஒய்வூதியம் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும். |
| 4. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு வட்டி வழங்கப்படும். | ஒய்வூதியத்தில் அவ்வாறில்லை. |
| 5. ஊழியர் சேமலாப நிதியத்தில் முதலாளி கொடுப்பனவு, ஊழியர் கொடுப்பனவு, மத்திய வங்கியின் வட்டி என்பன அடங்கும். | ஒய்வூதியத்தில் அவ்வாறில்லை. |
| 6. ஊழியர் சேமலாப நிதியினை அடிப்படையாய்க் கொண்டு ஊழியர் கடன் பெற முடியும். | ஒய்வூதியத்திலிருந்து அரச ஊழியர் கடனே பெற முடியாது. |

பின்வரும் நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதியைச் செலுத்துகின்றன.

1. பல்கலைக் கழகம்.
2. தேயிலை ஆராய்ச்சி நிலையம்.
3. இறப்பர் ஆராய்ச்சி நிலையம்.
4. வர்த்தக வங்கிகள்.

## ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம் (1980 ம் ஆண்டு 46 ம் இலக்கம்)

இதன்படி ஊழியர் மொத்தச் சம்பளத்தில் 3% தை முதலாளி ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு அனுப்புதல் வேண்டும். இத்தொகையானது இலாபகரமான ஏதேனும் முயற்சியில் ஈடுபடுத்தி பெறும் பங்கு இலாபத்தை குறித்த நபரின் கணக்கில் சேர்க்கப்படும். இது பின்வரும் நிறுவனங்களில் முதலிடப்படும்.

1. Dry Docks Ltd
2. Lanka Procelain Ltd
3. Lanka Milkfoods Ltd
4. Lanka Cement Ltd
5. Singer Industries
6. Lanka Ashok Leyland Ltd

குறித்த மாதப் பணமானது அடுத்த மாத இறுதிக்குள் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு அனுப்புதல் வேண்டும். இந் நிதியத்திற்குப் பொறுப்பாக அமைச்சரால் நிர்ணயிக்கப்பட்ட தலைவர் காணப்படுவார். இச் சட்டத்தில் 1986 ம் ஆண்டு திருத்தத்தின் படி தொடர்ச்சியாய் ஊழியர் நம்பிக்கை நிதியப்பணம் கட்டப்பட்ட ஊழியருக்கு இலவச ஆயுட் காப்புறுதி கொண்டுவரப்பட்டது. இதன் 1988 ம் ஆண்டு 47 ம் இலக்க திருத்தச் சட்டத்தின்படி சுயதொழிலில் ஈடுபட்டோரையும் வெளிநாட்டில் வேலையில் ஈடுபட்டோரையும் சேர்ப்பதற்குச் சட்டம் வகை செய்துள்ளது, எனினும் இச் சட்டத்தின் படி கோவில்களில் வேலைசெய்வோர், தொண்டர் சபையில் வேலை செய்வோர், அனாதை இல்லத்தில் வேலை செய்வோர் என்போர் சேர்க்கப்பட மாட்டார்கள். இச் சட்டத்தில் அண்மையில் கொண்டுவரப்பட்ட மாற்றத்தின் படி வைத்திய வசதி பெறமுடியாத தொழிலாளிக்கும், அவரில் தங்கி வாழ்வோருக்கும் இலவச மருத்துவ வசதியை பெற்றுக்கொடுப்பதுடன் 150,000 ரூபா வரையான திரட்டிய கொடுப்பனவினைப் பெறவும் வகை செய்துள்ளது. இப் பணத்தை பின்வரும் சந்தர்பங்களில் மீளப் பெறமுடியும்.

1. மருத்துவக் காரணம்
2. நிரந்தரக் குடியகல்வு பெறுவோர்
3. ஓய்வூதியம் பெறத் தகுதி உடையவர்களாய் மாறும் போது
4. தொழிலாளி 60 வயதினை அடைந்த பின்னர்.

## பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச் சட்டம் (1983 ம் ஆண்டு 12 ம் இலக்கம்)

தனியார் கூட்டுத்தாபன ஊழியருக்கு, சேவையிலிருந்து இளைப்பாறும்போது வழங்கப்படும் ஒரு சன்மானமாகும். தொழிலாளி ஒருவர் நிதிமோசடி கையாடல், முதலாளியின் சொத்துக்கு வேண்டுமென்று சேதம் விளைவித்தல் போன்ற காரணங்களுக்கான நட்டங்களைப் பணிக்கொடையிலிருந்து கழித்து மிகுதியே வழங்கப்படும். பணிக்கொடையானது இரு பகுதியினருக்கு வழங்கப்படுகிறது.

1. இலங்கை தனியார் கூட்டுத்தாபன ஊழியர்கள்
2. இந்தியா திரும்பும் தோட்டத் தொழிலாளர்

மேலும் பின்வரும் பகுதியினர் பணிக்கொடையைப் பெற்றுக் கொள்ள முடியாது.

1. வீட்டு வேலைகாரர்
2. ஓய்வூதியம் பெறுவோர்
3. தனிப்பட்ட சாரதி
4. ஐந்து வருடத்திற்குக் குறைந்த சேவையாற்றியோர்
5. பதினைந்து தொழிலாளருக்குக் குறைந்த நிறுவனத்தில் வேலை செய்வோர். என்போராவர்.

பணிக்கொடையைப் பின்வருமாறு கணிக்கலாம்.

$$\text{பணிக்கொடை} = \frac{\text{இறுதிமாதச் சம்பளம்}}{2} \times \text{சேவை நிதியம்}$$

உ + ம்:- ஒரு தொழிலாளியின் கடைசி மாதச் சம்பளம் 10,000/- ஆகும். அவரின் சேவைக்காலம் 10 வருடங்களாகும். எனவே இவர் இளைப்பாறும் போது பணிக்கொடையாகப் பெறும் தொகை.

$$\text{பணிக்கொடை} = \left\{\frac{10,000}{2} \times 10\right\}$$

$$= 50,000$$

## கடை காரியாலய ஊழியர் சட்டம் (1954 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கம்)

கடையில், அல்லது தாபனத்தில் வேலை செய்பவரே இச்சட்ட ஏற்பாட்டைக் தமது கடையில் அல்லது தாபனத்தில் கொண்டு வரப்பொறுப்புடையவர். இச்சட்டமானது ஊழியரின் வேலை நேரம் பற்றி விளக்குகின்றது. இதன்படி வாரமொன்றிற்கு 45 மணித்தியாலம் வேலை செய்ய வேண்டும். ஒரு நாளுக்கு 8 மணித்தியாலம் மட்டுமே வேலை செய்ய முடியும். இவ் 8 மணித்தியால வேலையானது தொடர்ச்சியாக எட்டு மணித்தியாலம் வேலை செய்வதை வலியுறுத்துகின்றது. கடைகாரியாலயத்தில் வேலை செய்யும் ஊழியருக்கு வாரத்தில் ஐந்து நாள் வேலையும் ஒருநாள் அரைநேரவேலையும் (5 மணித்தியாலம்) மறுநாள் முழு நேர வேலை லீவாக அமைதல் வேண்டும். ஓர் நாளில் எட்டு மணித்தியாலத்திற்கு மேல் 1 வாரத்தில் 45 மணித்தியாலத்திற்கு வேலை செய்யும் ஊழியருக்கு மணி வீதத்தின் $1\frac{1}{2}$ மடங்கு சம்பளம் வழங்குதல் வேண்டும். ஊழியருக்கு மதிய போசன இடைவேளையானது ஒரு மணிநேரத்திற்குக் குறையாமல் அமைய வேண்டும். மேலும் ஆண்டு விடுமுறையாக 14 நாட்கள் முழுச் சம்பளத்துடன் வழங்கப்படும். பதின்னான்கு நாட்களில் ஏழு நாட்கள் தொடர்ச்சியாக லீவு பெறலாம். ஓர் ஊழியரை வேலையிலிருந்து நீக்குவதெனின் ஒரு மாதத்திற்கு முன்னர் ஊழியருக்கு முதலாளி அறிவித்தல் வேண்டும். மேலும் ஊழியர் சுயவிருப்பப்படி வேலையிலிருந்து நீக்குவதெனின் ஒரு மாதத்திற்கு முன் முதலாளிக்கு அறிவிக்க வேண்டும். ஊழியரை முன் அறிவித்தலின்றி வேலையிலிருந்து நீக்கின் அவரால் எடுபடாதிருக்கும் லீவிற்கு ஒருநாட் சம்பள வீதம் என்றபடி வழங்குதல் வேண்டும். அவசரமான சொந்த அலுவல் முன்னிட்டு சாதாரணமாய் ஏழு நாட்கள் லீவிற்கும் 14 நாட்கள் விடுமுறை லீவிற்கும் 21 நாள் மருத்துவ லீவிற்கும் பெற உரித்துண்டு. இது முழுச்சம்பளத்துடன் வழங்க வேண்டும். முதல் முதலாய் வேலைக்குச் சேர்ந்த நபர் சேர்ந்து இரண்டு மாதத்திற்கு ஒருநாள் லீவு சம்பளத்துடன் பெறமுடியும். முதலாளி

ஊழியர் தொடர்பில் பெயர், வயது, பால் வேலை நேரம், சம்பளம் பற்றிய பதிவை வைத்திருக்க வேண்டியதோடு சம்பளம் பெற்றமைக்கு ஊழியரின் கையொப்பமும் பெறல் வேண்டும்.

பதின்னான்கு வயதிற்குட்பட்ட எவரையும் வேலைக்கமர்த்துதலாகாது. பதினெட்டு வயதிற்குட்பட்ட ஆண், பெண்பாலார் என்போரை ஒருபோதும் காலை ஆறுமணிக்கு முன் / மாலை ஆறுமணிக்கு பின் வேலைக் கமர்த்துதலாகாது.

அண்மைய ஆண்டில் இச் சட்டத்தில் கடை காரியாலயம் என்பன காலை பத்து மணி முதல் மாலை பத்து மணிவரை திறந்திருத்தல் வேண்டும். மேலும் இச் சட்டம் நடை முறைப்படுத்தியமைக்குப் பல காரணங்கள் உண்டு. அவை:-

1. ஊழியரின் வேலை நேரத்தைக் தீர்மானிக்க
2. மேலதிக வேலை தொடர்பான வீதங்களைக் தீர்மானித்தல்.
3. ஊழியருக்கான இழிவுக்கூலியைத் தீர்மானிக்க.
4. ஊழியருக்கு முதலாளியால் வழங்கப்பட வேண்டிய வசதியைத் தீர்மானிக்க
5. ஊழியருக்கான லீவுகளைத் தீர்மானித்தல் என்பனவாகும்.

கடை காரியாலயச் சட்டமானது

1. ஊழியர் தொடர்பில் பதிவை வைத்திருத்தல்.
2. மேலதிக நேரக் கொடுப்பனவு சாதரண கூலியை விட 1½ மடங்கு கூடக் கொடுத்தல்
3. ஊழியருக்குக் கொடுத்த சம்பளத்தை உறுதிப்படுத்தி ஏடுகளில் கையொப்பம் வாங்கி வைத்திருத்தல்.

என்ற வகையில் முதலாளியையும் கட்டுப்படுத்தும்.

### சம்பள சபைக் கட்டளைச் சட்டம் ( 27 ஆம் இலக்கம் )

இச் சட்டமானது 37 வகையான தொழில்களின் நிரந்தர சம்பளத்தைத் தீர்மானிக்கிறது. அதன்படி தொழிலாளர் உரிமை, வசதி, ஆகக் குறைந்த சம்பளம் ஆகியவற்றை வரையறுத்துள்ளது கடை காரியாலய ஊழியர் நீங்கலாக ஏனைய தொழிலாளருக்கே கழிவுக்கூலியைத் தீர்மானிக்கிறது. இச்சபையானது கூலியை தீர்மானிக்கும் போது வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கிறது. இச்சபையில் அங்கம் வகிப்போராகப் பின்வருவோரைக் கணிக்கலாம்.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் 7 பேர்

தொழில் தருநர் பிரதிநிதிகள் 7 பேர்

தொழிற் திணைக்கள பிரதிநிதிகள் 7 பேர்

ஆகியோர் சேர்ந்து இழிவுக்கூலியைத் தீர்மானிக்கிறார்கள். இச் சட்டத்தின்படி தொழிலாளரின் கடன் பாடுகள்:-

1. முதலாளிக்கு விசுவாசமாய் நடத்தல்.
2. முதலாளி விதிகளை மதித்து நடத்தல்.
3. தாமாகவே வெளிவந்து உழைப்பையும் வினைத்திறனையும் வெளியிடல்.
4. வேலை நேரத்தில் மது அருந்துதல் கூடாது.
5. நேர்மையான முறையில் செயற்பட வேண்டும்.
6. முதலாளியின் அனுமதியின்றி துண்டுப் பிரசுரங்களை வெளியிட முடியாது.

இச்சபை பின்வரும் சந்தர்ப்பத்தில் விசேட சரத்தைப் பிரயோகித்துள்ளது.

1. முழு இயலுமையற்ற தொழிலாளர் வேலை செய்யும் போது
2. துண்டுக் கூலியில் வேலை செய்வோர்
3. பயிலுனர் / தொழில் கற்போர்
4. இரண்டு/இரண்டிற்கு மேற்பட்ட தொழிலில் ஈடுபடுவோர் போன்ற சந்தர்ப்பமாகும்.

இச்சட்டத்தின் பிரகாரம் தொழில் தருநர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

1. ஊழியர் தொடர்பில் பதிவேடு வைத்திருத்தல்
2. வேலையிலிருந்து விலக்குவோர் தொடர்பில் பதிவை வைத்திருத்தல்
3. அறிவித்தலைத் தொங்கவிடல்
4. ஏனைய பதிவேட்டைப் பராமரித்தல் என்பனவாகும்.

## பெண்கள், இளம் ஆட்களை வேலையில் ஈடுபடுத்தற் சட்டம் (1956 - 47)

பெண்களையும், இளமாட்களையும், வேலையில் அமர்த்துவது தொடர்பாக வரையறுக்கும், சட்டமிதுவாகும். இச் சட்டம் பின்வரும் வரையறைகளைச் செய்கின்றது.

1. பாடசாலை நாட்களில் 14-18 வயதான இளமாட்களை வேலைக்கமர்த்தலாகாது.
2. மேற்கூறிய நபரை பி.ப 6 மணி-மு.ப 6 மணி வரையும் வேலைக்கமர்த்தலாகாது.
3. பாடசாலை நாட்களில் இரண்டு மணித்தியாலத்திற்கு மேற்பட்டாலும், ஞாயிற்றுக்கிழமைகளில் இரண்டு மணித்தியாலத்திற்கு மேற்பட்ட நேரத்திலும் வேலைக்கமர்த்தலாம்.
4. விபத்து ஏற்படக்கூடிய வேலையில் இவர்களை ஈடுபடுத்தலாகாது.
5. மேற்கூறிய நபரை இரவு நேரத்தில் வேலைக்கமர்த்தவோ, நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடுத்தவோ முடியாது.

இச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் பெண்ணிற்கு இருக்கை ஆசனம் வழங்க வேண்டும். அவ்வாசனத்தில் ஓய்வு நேரத்தில் அமரவும் உரிமையுண்டு. மேலும் இரவு நேரத்தில் வேலைக்கமர்த்துவதாயின் தொழில் மந்திரியிடமிருந்து அனுமதி பெற வேண்டும். இச்சட்டத்தில் 1984 ஆம் ஆண்டு திருத்தம் கொண்டுவரப்பட்டது.

1. பெண் எவரும் சுயவிருப்பத்திற்கு மாறாக வேலைக்கமர்த்தலாகாது.
2. இரவு 10 மணிக்குப் பின் பெண்களை வேலைக்கமர்த்துவதாயின், ஆணையாளரிடம் எழுத்து மூல அனுமதி பெற வேண்டும்.
3. பெண்களின் வேலை நேரத்தில் அடிக்கடி மாற்றம் செய்யலாகாது.
4. இரவு வேலை செய்யும் பெண்களுக்கு வழமையான சம்பளத்திலும், $1\frac{1}{2}$ மடங்கு சம்பளம் வழங்க வேண்டும்.
5. பெண் எவரும் ஒரு மாதத்தில் 10 நாட்களுக்கு மேல் இரவு வேலை செய்தலாகாது என்பன அம்மாற்றமாகும்.

## தொழிற் பிணக்குச் சட்டம்

தொழில் தருநருக்கும். தொழிலாளருக்குமிடையே பிணக்கேற்படுமிடத்து

அதனை நீக்க என உருவாக்கிய சட்டமே தொழிற்பிணக்குகள் சட்டமாகும். வழமை யிலே தொழிற் பிணக்குகள் ஏற்படுமிடத்து தொழிலாளி, முதலாளி, நுகர்வோர் என்ற மூன்று வர்க்கத்தவரும், பாதிக்கப்படுகின் றனர். தொழிற் பிணக்கு என்றால் முதலா ளிக்கும், தொழிலாளிக்குமிடையில் ஏற்படும் எந்தவொரு பிணக்கும், முதலாளிக்கும், தொழிலாளி ஒருவருக்குமிடையில் ஏற்படும் எந்தவொரு பிணக்கும் / வேலையாட்களுக் கும், வேலையாட்களுக்குமிடையில் ஏற்படும் எந்தவொரு பிணக்கும், அப்பிணக்கிற்கு வேலை கொடுத்தல் சம்பந்தமாகவோ / வேலை நீக்கல் சம்பந்தமாகவோ அல்லது வேலையைத் திருப்பி வழங்கல் சம்பந்த மாகவோ ஒரு நபரினைப் பொறுத்தவரை, ஏற்படுமிடத்து தொழிற்பிணக்கு ஏற்படும் (1930, 45 ஆவது பிரிவு) இவ்வாறு தொழிற் பிணக்கு ஏற்படுமிடத்து, பிணக்கிலிருந்து தீர்வு காணும் பொருட்டு தொழில் தரு னரோ, தொழிலாளரோ அல்லது அவரைப் பிரதி நிதித்துவப்படுத்தும், தொழிற் சங்கங் களோ இச் சட்டத்திற்கேற்ப விண்ணப்பம் செய்யலாம். இதனை ஏற்ற தொழிற் திணைக்களம் கட்டாய நடுவர் தீர்ப்பு என்ற முறைகளைப் பின்பற்றி தீர்த்துவைக்கும். கட்டாய நடுவர் தீர்ப்பு என்பதோ தொழில் ஆணையாளரால் நியமிக்கப்பட்ட அதிகாரி முன்னிலையில் சரிசம நிலையில் முதலாளி தொழில் பெறுநர் என்போர் விசாரணைக் குட்படுத்தப்பட்டு தீர்ப்பு வழங்கப்படும். இத்தீர்ப்பை முதலாளி, தொழில் பெறுநர் என்போர் கட்டாயம் ஏற்க வேண்டிய நிலை ஏற்படும்.

### *தொழில் நியாய சபை / தொழில் முறை மன்று*

தொழிற் தகராற்றுக் காக்கப்பட்ட நியர்யமன்றுகளில் பிரிவு 31 இன் கீழ் 1957 ஆம் ஆண்டு தொழில் மன்று என்பது முக் கியமானதொன்றாகும். இச்சபை கொண்டு வருவதற்கு முன்னர் குடியியல் சார் நீதி மன்றம் ஒப்பந்த அடிப்படையில், ஏற்பட்ட முரண்பாடுகளை விசாரணை செய்யவும், நட்டஈடு வழங்கவும், உதவின. ஆனால் இது இழந்த வேலையை மீண்டும் பெற்றுத் தர உதவவில்லை. ஊழியர் வேலையிலி ருந்து நீக்கப்பட்ட பின்பே இச்சபையிடம் விண்ணப்பம் கோரமுடியும். தொழிற் பிணக்கு சம்பந்தமாய் முறையிட நியாய சபை வேலையாள் நேரடியாக / தொழிற் சங்க உதவியுடன் முறையிடலாம். இம் முறைப்பாட்டை விசாரிப்பவர் மன்றின் தலைவராவார். இவருக்குதவியாக செயலா ளருட்பட ஒரு குழு காணப்படும். இச்சட் டமானது பின்வரும் வரையறைகளைச் செய்கின்றது.

தொழிலாளி எந்த வகையிலாவது வேலையிலிருந்து நீக்கப்படின் நேரடியாகவே தொழில் மன்றில் முறையிடலாம். ஒப்பந் தம் ஏற்படும்போது ஒப்பந்தம் தொடர்பில் அதிருப்தி ஏற்படின் / ஊழியர் வேலையிலிருந்து நீக்கப்பட்ட பின் கொடுக்கவேண்டிய சட்டபூர்வமான கொடுப் பனவு கொடுக்கப்படாவிடின், (பணிக் கொடை) தொழிலாளி சுயமாய் விரும்பாத விடத்து தொழில் தருநர் கட்டாயத்தின் பேரில், அத்தொழிலில் ஈடுபடின், தொழிலி லிருந்து விலகிய பின்பு நியாய சபைத்தீர்ப் பின் உதவியை நாடலாம். இப்பிரிவு 31D உபபிரிவு I இன்படி இத்தீர்ப்பு உறுதியான தும், முடிவானதுமாகும். ஆனால் இப்பிரிவு II இல் தீர்ப்பு வழங்கப்பட்டு 14 நாட்களுள் உயர்நீதி மன்றத்தில் முறையிடலாம் எனக் கூறுகின்றது.

இச்சபையானது நீதி நியாயம், என்ப தற்கு மதிப்பளிக்காது பாதிக்கப்பட்டவர் களுக்கு நிவாரணம் வழங்கும். இதன்படி ஒப்பந்தத்தில் குறிக்கப்படாத விடயம் பற் றியும் தீர்ப்பு வழங்க அதிகாரமுண்டு. தொழில் நீதி மன்றைவிட செலவு குறைந் தது என்பதனால் 85% மனோர் இதன் தீர்ப்பை நாடுவர்.

## தொழில் நீதி மன்றம்

தொழிற் பிணக்கைத் தீர்க்கப் பயன்படும் ஓர் முறையே தொழில் நீதி மன்றமாகும். பாதிக்கப்பட்ட நபர் நேரடியாக நீதிமன்ற உதவியை நாட முடியாது. பிரிவு VI இன் கீழ் அமைச்சர் பாதிக்கப்படும் நபரிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பத்தினை மட்டுமே தொழில் நீதி மன்றிற்கு அனுப்ப முடியும். இந்நீதி மன்றும் தனக்குத் தேவையான ஆவணத்தை திரட்டவோ, சத்திய கூற்றைப் பெறவோ அதிகாரமுண்டு. இந் நீதி மன்றத் தீர்ப்பை ஏற்க மறுத்த நபர் தீர்ப்பை மறுப்புச் செய்து அதே நீதி மன்றில் மேன் முறையீடு செய்யலாம். தொழில் நீதி மன்றால் பெறப்படும் தீர்ப்பு அதிக செலவைக் கொண்டிருப்பதனால் இதன் தீர்ப்பைப் 15% மானோரே நாடுகின்றனர்.

## சேவை முடிவுறுத்தற் சட்டம்

1960 களில் ஏற்பட்ட சேகுவரா குழப்பத்தை முன்வைத்தே பல தொழில் வழங்குநர்கள், ஊழியரைச் சேவையிலிருந்து நீக்கினர். இதனால் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்க நாட்டின் அரசாங்கமானது 1971 ஆம் ஆண்டு சேவை முடிவுறுத்தற் சட்டத்தை நடைமுறைப் படுத்தியது. இச்சட்டப்படி ஊழியரின் சம்மதத்துடன் அல்லது தொழிற் திணைக்கள சம்மதத்துடனேயே ஊழியரை வேலையிலிருந்து நீக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது. இச்சட்டமானது கடை, காரியாலயத்தில் சட்டத்திற்குட்பட்டோரையும், கூலிகள் சபைக் கட்டளைச் சட்டத்திற்குட்டோரையும், தொழிற்சங்கக் கட்டளைச் சட்டத்திற்குட்பட்டோரையும், கட்டுப்படுத்துகின்றது. ஒழுக்காற்று நடவடிக்கை என்றதன் பேரில் ஊழியரின் தொழில் முடிவுறுத்தப்படின் அது தொழில் தருநராலேயே முடிவுறுத்தப்பட்டது எனக் கூறமுடியும். இச்சட்டத்திற்கு முரணாய் வேலையாள் முடிவுறுத்தப்படின் ஏற்கனவே இருந்த பதவியில் வேலை செய்யவும், அவர் முடிவுறுத்தப்படாவிடின் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய சம்பளத்தையும் பெறத் தகுதியுடையவர். 1976 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்கத் திருத்தச் சட்டப்படி தீர்ப்பு வழங்கப்பட்டு குறிப்பிட்ட திகதிக்கு முன் அச் சட்டத்தை, அத்தீர்ப்பை நடைமுறைப் படுத்தாவிடின் பிந்திய ஒவ்வொரு நாட்களுக்கும் 50% படி தண்டப்பணம் அறவிடப் படல்வேண்டும்.

## தொழிலாளர் சபைச் சட்டம் (14 ஆம் இலக்கம்)

ஊழியர்களை நிர்வாகத்திற் பங்குபற்ற வைக்கவென உருவாக்கப்பட்ட சட்டமே இதுவாகும். இதன்படி தொழிலாளர் சபையில் பங்குபற்ற விரும்பிய தொழிலாளர் தேர்வில், பங்குபற்றி இரகசிய வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுள் ஒருவரைப் படைத்தலைவராய்த் தேர்ந்தெடுத்து இச் சபை நிறுவன வளர்ச்சிக்கும் ஊழியர் நலனுக்குமாய்ப் பாடுபடும். அவை:-

1. புதிய ஊழியரை வேலைக்கமர்த்தல்
   புதிய ஊழியருக்கு பதவி உயர்வு வழங்கல்.
   நிறுவன அபிவிருத்திக்கு திட்டமிடல்.
2. உற்பத்தி விற்பனையைக் கூட்ட வகை செய்தல்.
3. தொழில் தருநருக்கும் தொழிலாளருக்குமிடையே பிணக்கேற்படுகையில், அதைத் தீர்த்தல்.
4. ஊழியரது சமூக பொருளாதார நலனைப் பேணுதல்.
5. நிறுவனத்தின் வளத்தை நல்ல முறையில் பேணுதல் என்பனவாகும்.

இச்சபையின் ஆலோசனையை முதலாளி கேட்கத்தவறின் தொழிலமைச்சருக் கறிவிக்கலாம். தொழிலாளரை முகாமையில்

பங்குபற்ற வைத்த நிறுவனமாய்ப் பின்வரு வனவற்றைக் கூறலாம்.

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்.
இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
துறைமுக அதிகாரசபை கூட்டுத்தாபனம்.

## தொழிற் சங்கக் கட்டளைச் சட்டம் (1935 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்கம்)

இலங்கையில் ஊழியர் நலன் பேண என உருவாக்கப்படும், தொழிற்சங்கசங் ளின் பதிவை வலியுறுத்தவென உருவாக்கப் பட்ட சட்டம் இதுவாகும். இதன்படி தொழிற்சங்கமானது தொழிற்திணைக்களத் திடம் பதிவு செய்து கொள்ளுதல் வேண் டும். தொழிற்திணைக்களத்தில் தொழிற் சங்கப் பதிவை ஏற்கவே தொழில் அதி காரி என்ற ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பார். இவ்வதிகாரிக்குத் தொழிற்சங்கத்தின் ஆண் டறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வறிக்கை இயக்குநர் பெயர், விபரம், முடிவுக்கணக்கு போன்ற பல்வேறு விடயங் களைக் கொண்டிருக்கும்.

இத்தொழிற்சங்க ஆண்டறிக்கையை பதிவாளருக்கனுப்புகையில் அதில் பொய் யான விடயம் உள்ளடக்கப்பட்டாலும், சங்க அங்கத்தவர்களுடைய துன்பங்களைக் கவனிக்காது விடலும் தொழிற்சங்கப் பணத் தைத் துஸ்பிரயோகம் செய்தலும் குற்ற மாகக் கருதப்படும்.

தொழிற்சங்கக் கட்டளைச் சட்ட மானது தொழிற்சங்கத்தையும், தொழிலா ளர்களையும் பின்வருமாறு செயற்படலா மென அதிகாரமளித்துள்ளது.

1. தொழிற்சங்கத்தின் சகல அங்கத்துவ ஊழியரும் ஆண்டு பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான வசதிகள், லீவுகள் பெற உரித்துடையவர்.
2. தொழிற்சங்க நிர்வாகிகள், கடமை லீவிற் செல்ல உரித்துடையவர்.
3. தொழிலாளருக்கு முக்கியமான விடயங் களை முகாமையானது தொழிற்சங்கத் திற்கறிவிக்க வேண்டும்.
4. தொழிற் பிணக்குக் காரணமாய் எழும் வெளிநடப்பு, வேலை நிறுத்தம், ஆறு தல் வேலை நிறுத்தம், சட்டப்படி வேலை செய்தல் என்பன ஏற்படும் போது அவை நிகழும் திகதி, காலம், என்பவற்றை முன்பே அறிவிக்க வேண் டும்.
5. வெவ்வேறு வகையான நிறுவனத்தில், தொழிலில் ஈடுபடும் தொழிலாளர் ஒரே வகையான தொழிலில் ஈடுபடின் விரும்பியபோது தொழிற்சங்கத்திற் சேர முடியும்.
6. ஊழியர் விரும்பின் முதலாளியூடாக வும், தொழிற்சங்கச் சந்தாவை செலுத்த முடியும்.
7. தொழிற்சங்கம் ஒன்று பதிவு செய்து தொழிற்பட ஆகக் குறைந்தது ஏழு ஊழியர் அவசியம்.
8. தொழிற்சங்கமொன்று தனது கிளை செயற்படக் கூடிய முறையில் அலுவ லகம் திறக்கவும், அலுவலக உபகரணம் பெறவும் உரித்துடையது.

என்பவற்றை முக்கிய அம்சமாக குறிப் பிடலாம். தொழிற்சங்கமானது 1956 ஆம் ஆண்டு தொழிற்சங்கச் சட்டம் என்பதன் கீழ்ச் செயற்பட்டு வரும்.

## தொழிற்சாலைக் கட்டளைச் சட்டம் (1942 ஆம் ஆண்டு 45 ஆம் இலக்கம்)

தொழிற்சாலை எவ்வாறமைய வேண் டும் என்பது பற்றிக் குறிப்பிடும் சட்டம்

இதுவாகும். இதன்படி தொழிற்சாலையானது ஊழியருக்கு அடிப்படைத்தேவைகளை வழங்கக் கூடிய வகையில் அமைய வேண்டும். ஊழியருக்குத் திருப்திகரமான வேலைச் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தலே இச்சட்டத்தினடிப்படை நோக்கமாகும். இச் சட்டப்படி தொழிற்திணைக்களத்தின் பிரதான பரிசோதனைப் பொறியியலாளரிடம் இருந்து சான்றிதழ் ஒன்றைப் பெற்ற பின்பே தொழிற்சாலை ஒன்றை அமைக்க முடியும். தொழிற்திணைக்களப் பிரதான பொறியியலாளர் தொழிற்சாலைக் கட்டடத் திட்டத்தை மாற்றியமைக்கும்படி கோரும் அதிகாரத்தைக் கொண்டவர்.

பிரதானமாக:-

1. சுகாதாரக் கேடான முறையில் தொழிற்சாலை அமைவதைத் தடுத்தல்.

1. காற்றோட்ட வசதியளித்தல்

3. ஊழியருக்கு வெளிச்சவசதியளித்தல்.

4. ஊழியருக்கு உத்தரவாதம் அளித்தல்.

5. உடைமாற்றும் அறை ஒழுங்குபடுத்தல்

6. ஓய்வறை ஒழுங்குபடுத்தல்.

7. குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுத்தல்.

போன்றவற்றை உள்ளடக்கியவாறு இக்கோரிக்கை அமையும். தொழிலாளர் எண்ணிக்கைக்கேற்ப தொழிற்சாலையின் அளவு அமைய வேண்டும். தொழிற்சாலையில் இயந்திரங்களுடன் வேலை செய்யும் ஊழியர்களது நலன் பேணுதல் பற்றியும், இச்சட்டம் கூறுகின்றது. குறிப்பாய் இயந்திரங்களில் வேலை செய்வோரது கவனம் வேறு பகுதிக்குச் செல்லாது அமைவதற்கு முகமறைப்பை ஏற்படுத்தல். விரைவாகச் சுழலும் பகுதிகளுக்கு மேலுறையிடுதல் என்பனவாகும். இச்சட்டம் கடைகாரியாலயச் சட்டத்தில் கூறப்பட்ட வேலை நேரம் பற்றியும் கட்டுப்படுத்துகின்றது.

## தொழிலாளர் நஸ்ட ஈட்டுக் கட்டளைச் சட்டம்

தொழிலாளர் தொழிற் சாலையில் வேலையில் ஈடுபடும் போது அவர்கள் விபத்துக்குள்ளாகின் நஸ்ட ஈடு வழங்க வேண்டும் என்பது பற்றிக் கூறும் சட்டமே இதுவாகும். இச்சட்டத்தில் அண்மையிற் கொண்டு வரப்பட்ட மாற்றத்தின் படி பொதுத்துறை நிறுவன ஊழியரும் நஸ்ட ஈடு கோரும் உரிமையைப் பெற்றுள்ளனர். மேலும் ஆகக்கூடிய நஸ்டஈட்டுத் தொகையாக 2,50,000/- பெறவும். இதற்குக் கீழ்ப்பட்ட தொகையானது நஸ்ட ஈட்டின் நன்மைக் கேற்ப வழங்கப்படும். இத்திருத்தத்திற்கு முன்னர் ஆகக்கூடிய நஸ்ட ஈடானது 13500/- வாகவே அமைந்ததோடு 500/-க்குக் குறைந்த மாதச் சம்பளமாய் பெறுபவரே கோரமுடியும். எனக் கூறப்பட்டது. இச் சட்டத்தின் பிந்திய திருத்தமானது நோய்களையும் வலியுறுத்தியுள்ளது. இதன் பிரகாரம் மூன்றாம் நபரினால் கூட தொழிலாளிக்கு நஸ்டம் ஏற்படின் நஸ்ட ஈடு பெறும் அதிகாரமுண்டு. மேலும் தொழில் செய்பவரின் கவனயீனத்தாலோ அல்லது தீங்கு செய்பவரினால் வேண்டுமென்றோ நிரூபிக்கத் தேவையில்லை. எனினும் எல்லா ஊழியரும் நஸ்ட ஈட்டுக்குட்படும் போது இதைப்பெற முடியாது. பதிலாய் ஏழு நாட்களுக்கு மேலாக இழப்பு நீடிக்குமாயின் நஸ்ட ஈட்டை பெற முடியும். □

ஒரு மாவட்டத்திலுள்ள கிராமிய வங்கிகளில் உள்ள வைப்புக்கள் அம் மாவட்டத்திலேயே பயன்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு ''மாவட்ட கூட்டுறவு வங்கி'' உருவாக்கப்பட்டுள்ளது.

# கைமாறும் கருவிகளும் வங்கி நடைமுறைகளும்

## கைமாறும் கருவிகள் என்றால் என்ன?

மனிதன் தன் வாழ்வின் தேவைகளை நிறைவு செய்ய தன் உற்பத்திகளை மற்றவனின் உற்பத்தியுடன் மாற்ற வேண்டிய தேவையேற்பட்டது. இவ்வாரம்பகால நடவடிக்கையே வாணிபத்தின் உதயம் எனக் கொள்ளலாம். நேரடிப் பண்டமாற்று முறையாக ஆரம்பிக்கப்பட்ட இவ்வாணிபம் காலத்தின் தேவைக்கேற்ப விரிவடைந்தது. இவ்வாணிப நடைமுறையின் வெற்றிக்கு ஒரு மாற்றூடகம் மட்டுமல்ல ஒரு இலகுவான கொடுக்கல் வாங்கல் முறையும் அவசியமாகியது.

ஆரம்பகாலத்தில் மாற்றூடகமாவும், கணக்களவையாகவும், எதிர்கால கொடுப்பனவுகளின் அளவு கோலாகவும் சிப்பிகள், தானியங்கள், பருத்தி, உலோகங்கள் போன்றவை பயன்படுத்தப்பட்டு வந்தன. இவை நாளடைவில் கையாள்வதற்கு சிரமங்களையுடையனவாக கருதப்பட்டன. இதன் காரணமாக சில ஆவணங்கள் கொடுக்கல் வாங்கல்களைப் பூரணப்படுத்த பின்னர் பயன்படுத்தப்பட்டன. இவ்வாவணங்கள் குறைந்தளவு நேரத்தில் எளிமையான நடைமுறையின் கீழ் ஒரு வலுவான உரித்து மாற்றத்தை சட்டத்தினால் அங்கீகரிக்காத காலத்திலேயே ஏற்படுத்தின. இவ்விதமான ஆவணங்களே கைமாறும் கருவிகள் அல்லது கைமாறும் சாதனங்கள் எனப்பட்டன.


**க. சுசிந்திரன், B. A.**
மக்கள்வங்கி, நவீன சந்தை,
யாழ் பல்கலைக்கழக வளாகம்,
யாழ்ப்பாணம்.


இவ்வாவணங்கள் 1882 இல் இங்கிலாந்தில் சட்டத்தினால் கட்டுப்படுத்தப்பட்டு ஒரு வலுவை பெற்றுக்கொண்டன. இலங்கையில் இச் சட்டக் கோவையை அடியொட்டி 1927 இல் மாற்றுண்டியல் கட்டளைச் சட்டம் கொண்டுவரப்பட்டு இவ்வாவணங்கள் சட்டவலுவைப் பெற்றன. இதனடிப்படையில் இம்மாற்றுண்டியல் கட்டளைச்சட்டம் கைமாறும் கருவிகளை

1. மாற்றுண்டியல்கள்
2. காசோலைகள்
3. வாக்குறுதிப் பத்திரங்கள் என வகைப் படுத்தியுள்ளது. வளர்ந்து வரும் வர்த்தக உலகில் இன்னும் பல ஆவணங்கள் இவையுடன் சேரும் வாய்ப்புக்களுண்டு.

## கைமாறும் கருவிகளின் தன்மையும் குணாம்சங்களும்

கைமாறும் கருவிகள் விசேட தன்மையுடனான குணாம்சங்களைக் கொண்டவை. கைமாறும் கருவி என்னும் போது அது கருவியின் செயலைக் குறிப்பிடவில்லை. கருவியினுடைய விசேட தன்மையையே இங்கு குறிப்பிடுகின்றது.

சாதாரணமாக கைமாறும் கருவிகள் யாவும் ( Negotiable Instruments) மாற்றப்படக்கூடியவை. ( Transferable ). ஆனால் மாற்றப்படக் கூடிய அனைத்துக் கருவிகளும் கைமாறும் கருவிகளாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இந்த அடிப்படையிலேயே '' கைமாறத்தகாதது '' ( Not Negotiable) என்னும் குறுக்குக் கோடுடைய கைமாறும் சாதனங்கள், அதன் விசேட தன்மையை இழந்தும் மாற்றத்துக்கு ( Transfer ) உள்ளாகின்றன.

கைமாறும் கருவிகளின் விசேட குணாம் சங்களாக பின்வருவன கூறப்படுகின்றன.

இக் கருவிகளின் உரித்து வழங்குதல் மூலம் அல்லது தேவைப்படுமிடத்து சாட்டு தல் செய்து வழங்குதல் மூலம் மாற்றப்பட லாம்.

இக் கருவியை வைத்திருப்பவர் தன் சொந்தப் பெயரிலேயே உரிமையாளர் என் றரீதியில் வழக்கைத் தொடுக்கலாம். இவர் தனது உரித்தினை நிறுவ அது தொடர் பாக முன்னையவருக்கு அறிவித்தல் கொடுக்கத் தேவையில்லை.

பெறுமதிக்காக இதனைப்பெறுபவர், முன்னர் அதனை வைத்திருந்தவர்களின் உரிமைக்குறையை அறியாது, நல்லெண்ணத் துடன் செயலாற்றுகையில் ஒரு நல்ல உரித்தை உடையவராகிறார்.

## குறுக்குக் கோடிடல்

ஒரு காசோலையை பொதுவாக வரைந் தவரோ அல்லது அதனை வைத்திருப்ப வரோ குறுக்கு கோடிடலாம். குறுக்குக் கோடுகள் இரு கோடுகளுடனோ அல்லது கைமாறத்தகாதது என்ற சொற்றொடரு டனோ அல்லது ஏதாவது வங்கியின் பெய ருடனோ அல்லது பெறுபவன் கணக்கிற்கு என்றோ இடப்படலாம். இங்கு இக்குறுக்குக் கோடுகள் கைமாறும் கருவியின் மாற்றத்தை தடை செய்யாது. ஆனால் மாற்றத்தைக் கட்டுப்படுத்தலாம். மாற்றத்தை தடை செய்யாத காரணத்தி னாலேயே வைத்திருப்பவர் குறுக்குக் கோடி டலாம் என்று மாற்றுண்டியல் கட்டளைச் சட்டம் இடம் கொடுக்கிறது. சாதாரண மாக சேகரிப்புக்கென்று வங்கிகளில் காசே லைகள் வைப்பிலிடும்போது வங்கிகள் குறுக் குக்கோடிடுவதை நாம் அவதானிக்கலாம். மோசடிகளைத் தடுக்கும் நோக்குடனோ அல்லது மோசடிகளை கண்டுபிடிக்க கால அவகாசத்தைப் பெறவோ இக்குறுக்குக் கோடுகள் உதவும் என்ற நோக்கிலேயே நடைமுறைப்படுத்தப் படுகின்றன.

## ''கைமாறத்தகாதது'' (Not Negotiable) என்றால் என்ன?

கைமாறும் கருவிகளில் பொதுவாக காசோலைகள் போன்றவற்றில் ''கைமாறத் தகாதது'' எனக்குறுக்குக் கோடிடப்பட்டுள் ளதை அவதானிக்கலாம். இது ஒரு பொது வான குறுக்குக்கோடு. இச்சொல்லானது உண்மையில் அவ்வாவணத்தைக் கையாளும் ஒவ்வொருவருக்கும் ஒரு அறிவுறுத்தலாக அமைகின்றது. இச்சொற்றொடர் ஏற்க னவே கூறியவாறு செயல்பாட்டை நிறுத் தாது. அக்கருவியின் தன்மையினை அழித்து விடுகிறது. அதாவது அதன் விசேடகுணாம் சங்கள் அழிந்து விடுகின்றன. எனவே இத் தகைய சொற்றொருடனான குறுக்குக் கோடுடைய கைமாறும் சாதனம் வைத் திருப்பவரை தன்னை முறையாக கையாளும் படி அறிவுறுத்துகிறது எனலாம்.

எந்த இடத்தில் ஒரு மோசடி நிலையேற் படுகிறதோ அதன்பின் அக்கருவியின் செயற் பாடு பெறுமதியற்றதாய் போய்விடுகிறது. தனக்கு இல்லாத ஒரு உரிமையை எக்கார ணம் கொண்டும் இத்தகைய சொற்றொடர் அடங்கிய குறுக்குக்கோடுடைய சாதனம் உடையவர், பிறருக்கு உரிமை கிடைக்கும் படி கொடுக்கமுடியாது. இங்குதான் கை மாறும் கருவியின் விசேட குணாம்சம் அழி கின்றது.

இதனால் காசோலைகள் வரைபவர்கள் இச்சொற்றொடரை பாவிப்பதன் மூலம் தமது உரிமையை மோசடிகள் நடைபெறு வதிலிருந்து பாதுகாத்துக் கொள்கின்றனர். அதே நேரம் வங்கிகளை இத்தகைய குறுக் குக் கோடுகள் கட்டுப்படுத்துவதுமில்லை. வங்கிகளினால் வரையப்படுகின்ற கொடுப் பனவுக் கட்டளைகள், வங்கி உண்டியல்கள் (Drafts) போன்றவற்றில் மோசடிகளைத்

தடுக்கும் வண்ணம் இக்குறுக்குக்கோடுகள் பாவிக்கப்படுவதை அவதானிக்கலாம்.

## பெறுபவன் கணக்கு (Account Payee)

"பெறுபவன் கணக்கு" என்று ஒரு சாதனம் குறுக்குக் கோடிடப்பட்டிருந்தால் இது உண்மையில் வங்கியானது எவ்விதம் நடக்கவேண்டும் என்பதனை நெறிப்படுத்த வரைபவனால் இடப்படுகிறது. இது குறித்த நபருடன் அச்சாதனத்தின் மாற்றத்தை மட்டுப்படுத்துகிறது. மீறி மாற்றப்பட்டாலும் வங்கிகள் பெறுபவன் கணக்கில் மட்டுமே சேகரிக்கும். இங்கு வங்கி உண்மை உரித்தாளியைவிட்டு இன்னொருவருக்கு சேகரித்துக் கொடுத்தால் வங்கி பொறுப்பாக வேண்டியேற்படும் இச்சொற்றொடர் கருவியின் கைமாறும் தன்மையை (Negotiability) பாதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வங்கிச் சேகரிப்பு

வங்கிகள் பொதுவாக குறுக்குக் கோடிட்ட கருவிகளை தனது பணக்கொடுப்பனவு கருமபீடங்களினூடாக மாற்றிக் கொடுப்பதில்லை. இத்தகைய கருவிகளை உடையவன் கணக்கிலோ அல்லது ஏதாவது கணக்கிலோ சேகரிக்கின்றன. ஏனெனில் குறுக்குக் கோடிடல் பல காரணங்களைக் கொண்டு இருக்கும். ஒரு மோசடியேற்படாது தடுக்கும் நோக்கமும், உண்மை உரித்தாளிக்கு பெறுமதி சென்றடைய வேண்டும். என்ற நோக்கமும் இதில் அடங்கும். இங்கு மோசடியை உடன்கண்டு பிடிப்பதோ, உண்மை உரித்தாளியை வங்கி கண்டுபிடிப்பதோ சிரமமான செயலாக இருக்கும். இந்நிலையில் வங்கிகள் பிழையான நடைமுறையால் பொறுப்பாக வேண்டியேற்படும். குறுக்குக் கோடுகளை சட்டம், மாற்றுண்டியல் கட்டளைச் சட்டமூலம் ஏற்றிருப்பதனால், சட்டத்தின் மூலம் வங்கிகள் பாதுகாப்பை தேட வேண்டிய நிலையேற்பட்டது மாற்றுண்டியல் கட்டளைச்சட்டம் குறுக்குக் கோடிட்ட கருவிகளை கணக்குகளினூடாக சேகரிக்கும் வங்கிக்கு பாதுகாப்பை கொடுக்கின்றன. இதனாலேயே வங்கிகள் கணக்கினூடாக இவற்றை சேகரிக்கின்றன. உண்மை உரித்தாளியை வங்கிகள் இனங்கண்டாலும், வரைந்தவனிடம் ஏதும் மோசடியினூடாக இது பெற்றிருந்தால் வங்கிக்கு வரும் விளைவுகளை தவிர்க்க வங்கிகள் அவதானமாகச் செயல்படுகின்றன. □

---

இலங்கை வங்கி அறிமுகப்படுத்திய "மகளிர் பொற்கணக்கு" போன்று மக்கள் வங்கி "வனித வாசனா" எனும் மகளிருக்கான சேமிப்புக் கணக்கை அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கு ஆரம்ப வைப்புப் பணம் 500/- என்பதுடன் கணக்கை வைத்திருப்பவர் அதிஸ்டசாலியாயின் பங்குகளையும் பெறமுடியும். அத்துடன் இத்திட்டத்தில் வெளிநாட்டில் வதியும் இலங்கைப் பெண்களும் சேர்ந்துகொள்ள முடியும் என்பது சிறப்பம்சமாகும்.

வாழ்த்துகிறோம்

**துரையப்பா பத்தர்**

**ராஜகோபால்**

**நகை வியாபாரம்**

123, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

வணிக மன்றத்தின்

வரவுக்கு வாழ்த்துகிறோம்.

நவநாகரீக ஆடைகளை

உங்கள் எண்ணம் போல்

தெரிவு செய்திட

**லிங்கம் சில்க் ஹவுஸ்**

18 நவீன சந்தை

யாழ்ப்பாணம்.

உங்கள்

மழலைச் செல்வங்களின்

உயிரோவியமான படங்களுக்கு

**பேபி போட்டோ**

படப்பிடிப்பாளர்கள்

பலாலி றோட்,

திருநெல்வேலி.

சலவைக்கு

**மில்க் வைற்**

சலவைத்தூள்

சிக்கனமானது, துரிதமானது
அழுக்கை அகற்றுவதுடன்
துணிக்கு பிரகாசத்தைந் தருவது

26, வெற்றுப் பக்கற்றுக்கள் தந்து
நீதிநூல் ஒன்றையும்
10 வெற்றுப் பால்மா பைகளைத் தந்து
ஒரு பயன் தரு மரக் கன்றையும்
பெற்றுக் கொள்ளுங்கள்.

**மில்க் வைற்**

வெளிநாட்டிலிருந்து
இறக்குமதி செய்யபட்ட

- சூட்டிங், சேட்டிங்

சாறி குயின்

- மிஸ் குயின்
- J B. குயின்

இந்தியன் சாறி வகைகளும்
ரெடிமேட் ஜீன்ஸ், பேபிசூட், சேட்
போன்றவற்றை மலிவாகப் பெற

**LALITHA TEXTILES**

No. 5, 6. NEW MARKET,

JAFFNA.

எமது பயிற்சி நெறிகள்

- C. I. M. A.
- NURSING
- A. A. T-
- SHORTHAND & TYPING
- I. A. B.
- COMPUTER
- RADIO T. V. & DECK

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14, ST. PETER'S LANE,

JAFFNA.

யாழ் இந்து வணிக மன்றத்தின் வரவிற்கு நல்லாசிகள்

ஜெகன் போட்டோ

399, மணிக்கூட்டு வீதி, — யாழ்ப்பாணம்.

அழகிய கலர்ப்படப் பிடிப்பிற்கும் கலர்படச் சுருளை
தரமாகவும் விரைவாகவும் பிரதி செய்து பெற்றுக்
கொள்ளவும் யாழ்நகரில் சிறந்த ஒரே இடம்

*Space Donated*

*by*

V

# CITY AGENCY

**158, STANLEY ROAD,**

**JAFFNA.**

வரவு சிறக்க நல்லாசிகள்

**C. M. சுகந்தினி**

- மாட்டுத்தீன்
- கோழித்தீன்
- பலசரக்குப் பொருட்கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.

புதிய இல: 309 கே. கே. எஸ். வீதி,
பழைய இல: 157 யாழ்ப்பாணம்.

வளர்ந்து வரும் வரவிற்கு
எமது நல்வாழ்த்துக்கள்

**குகன் ஸ்ரோர்ஸ்**

திருநெல்வேலிச் சந்தி,
யாழ்ப்பாணம்

வரவு சஞ்சிகையே
நீ நீடூழி வாழ்க

**ESTY MEDICALS**

450, HOSPITAL ROAD,
JAFFNA.

# இலங்கையில் ஆயுள் காப்பீடு

## அறிமுகமும் வளர்ச்சியும்

நிச்சயமற்ற எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய நட்டங்களில் இருந்து தன்னை மீட்பதற்கு மனிதன் மத்திய காலத்திற்கு முன்பிருந்தே சிந்தித்து செயல்பட்டு வந்திருக்கின்றான் என்பதனை அறிய முடிகின்றது. மத்திய காலத்தில் வர்த்தகத்தில் ஏற்படக் கூடிய நட்டத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வணிகர்கள் ''கப்பல் பிணைய கடன்'' (bottomry), ''பொருள் பதிலீட்டு கடன்'' (respondentia) போன்ற கடன்களைப் பயன்படுத்தியதாக சான்றுகள் தெரிவிக்கின்றன. ''பொட்டம்ரி'' வகை ஒப்பந்தங்களில் கடன் கொடுப்பவர் வியாபாரிக்கு சந்தை விகிதத்திலும் பார்க்க கூடிய வட்டி விகிதத்தில் கடன் வழங்குவார். இதற்காக வியாபாரி தனது சரக்கையும் வாகனத்தையும் ஈடு வைப்பார். வியாபாரச் சரக்கும் வாகனமும் அழிவடைந்தால் அந்நட்டத்தை கடன் கொடுத்தவரே ஏற்றுக் கொள்வார். எனவே இங்கு கடன் பட்டவருக்கு ஏற்படும் நட்டத்தை கடன் கொடுத்தவர் ஏற்பதனால் கடனாளிக்கு அவர் காப்புறுதி பாதுகாப்பை அளித்துள்ளார்.

ஆயுட் காப்புறுதி கருதுகோள் புரதான ரோமில் தோன்றியது. ''கூலித் தொழிலாளர்களுக்கும் அடிமைகளுக்குமான நிதியம்'' எனும் அமைப்பு உறுப்பினர்களுக்கு சவ அடக்கம் செய்வதற்கு நிதியுதவி அளித்தது. இதற்கான வருவாய், நிதியத்திற்கான தவணைப் பணத்தினூடாக கிடைத்தது. இந்தக் கழகமே ஆயுள் காப்பீட்டின் முன்னோடி நிறுவனமாகும்.

**பா. சிவஸ்கந்த சர்மா**
ஆண்டு 13F
வர்த்தகப்பிரிவு

இவ்வாறு ஆரம்பித்த காப்புறுதியானது காலத்திற்குகாலம் புதிய மாற்றங்களைப் பெற்று வந்துள்ளது.

1962 க்கு முன்னர் இலங்கையில் காப்புறுதி தொழிலில் தனியார் நிறுவனங்களே ஈடுபட்டு வந்தன. இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளும் ஆயுள் காப்பீட்டில் ஈடுபட அனுமதிக்கப்பட்டது. 1962 இல் காப்புறுதி தொழில் தேசிய மயமாக்கப்பட்டு இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் அமைக்கப்பட்டது. பின்னர் 1980 இல் போட்டியை ஏற்படுத்தவும் நல்ல சேவையினை வழங்கவுமென தேசிய காப்புறுதி கூட்டுத்தாபனம் உருவாக்கப்பட்டது. தேசிய காப்புறுதி கூட்டுத்தாபனம் தனது சேவையை எட்டு நிறுவனங்களுடாக மேற்கொண்டது. அவை:

1) அட்கின் ஸ்பென்ஸ் லிமிட்.
2) கார்சன் கம்பர்பச் லிமிட்.
3) லிட்டால் பவுஸ்டெட் லிமிட்.
4) மேர்கண்டைல் கிரடிட் லிமிட்.

[மேற்குறிப்பிட்ட நான்கும் இணைக்கப்பட்டு தற்போது ''யூனியன் அஷ்யூரன்ஸ் லிமிட்டெட்'' உருவாக்கப்பட்டுள்ளது.]

5) ஜேம்ஸ் பின்ளே லிமிட்.
6) பரொடெக்சன் அன்ட் இன்டெமினிடி லிமிட்.
7) அக்லாண்ட் பினான்ஸ் லிமிட்.

8) சிலிங்கோ லிமிட்.

என்பனவாகும்.

தனியார் துறையினரும் காப்புறுதி தொழிலில் ஈடுபட்டால் சேவையின் தரமும் திறமையும் அதிகரிக்கும் என நடைமுறை அரசாங்கம் கருதியமையினால் காப்புறுதி செய்யும் பாலிசி தாரரை பாதுகாக்கக்கூடிய கடுமையான நிபந்தனைகளைக் கொண்ட ''காப்புறுதி கட்டுப்பாட்டு (திருத்த)ச் சட்டம் 1987 இல் இயற்றப்பட்டது. இதற்காக மூன்று தனியார் கம்பனிகள் (யூனியன் அஷ்யூரன்ஸ் லிமிடெட், சி. ரீ. சீ. இன்சுரன்ஸ் லிமிட், சிலிங்கோ இன்சூரன்ஸ் லிமிட்டெட் என்பன) 1982 கம்பனிகள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டன.

யூனியன் அஷ்யூரன்ஸ் லிமிட்., அட்கின் ஸ்பென்ஸ், கார்சர்கம்பர்பச், மேர்கன்டைல் கிரடிட், விட்டால் பவுஸ்டெட் ஆகிய நிறுவனங்களால் அமைக்கப்பட்ட ஒரு கூட்டுக் கம்பனியாகும். இலங்கை வணிக வங்கி ஆசிய அபிவிருத்தி வங்கி, பொதுமக்கள் ஆகியோர் இதன் பங்குதாரர்களாவர். ஆயுள் காப்பீட்டுக்கென தொழில்நுட்ப கூட்டினை கொண்டிராத இக்கம்பனி ஜேர்மனின் மியூனிச் ரீ இன்சுரன்ஸ்சுடன் சேர்ந்து காப்புறுதியினை மேற்கொள்கிறது.

சி ரீ. சீ. ஈகிள் இன்சுரன்ஸ் லிமிடெட்டின் பங்குதாரர்கள் சிலோன்டுபாக்கோ கம்பனி, ஜேம்ஸ் பின்லே கம்பனி, பொது மக்கள் ஆவர். ஐக்கிய இராச்சியத்தின் ஈகிள் ஸ்டாரின் தொழில்நுட்ப உதவியைப் பெறும் இக் கம்பனி மீள்காப்புறுதியை ஐக்கிய இராச்சியத்தின் விக்டரி இன்டர் நஷனல் ரீ இன்சுரன்சில் வைத்துள்ளது.

சிலிங்கோ இன்சுரன்ஸ் கம்பனி, சிலிங்கோ தொகுதிக் கம்பனிகளின் ஓர் உறுப்பு நிறுவனமாகும். இலங்கையின் முதலாவது காப்புறுதி கம்பனியான இது முதலில் 1939 இல் உருவாக்கப்பட்டது. ஆயுள் காப்பீட்டுக்கென தொழில் நுட்ப கூட்டினைக் கொண்டிராத இக்கம்பனியின் மீள் காப்புறுதி ஐக்கிய ராச்சியத்தின் மேர்கண்டைல் அன்ட் ஜெனரல் மற்றும் சுவிட்ஸ்லாந்தின் பிராஸ் கோனா என்பவற்றில் வைக்கப்பட்டுள்ளது.

இம் மூன்று தனியார் நிறுவனங்களுடன் சுதந்திரமாக செயற்பட்டுவரும் அரசுக்கு சொந்தமான (தற்போது மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ள) தேசிய காப்புறுதி கூட்டுத்தாபனமும், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் காப்புறுதி தொழிலில் ஈடுபட்டுள்ளன. இதுவரையில் ஆயுள் காப்பீட்டிற்காக தொழில்நுட்ப கூட்டிணைப் பெதனையும்கொண்டிராத இவற்றில் தேசிய காப்புறுதி கூட்டுத்தாபனம் அதன் மீள் காப்புறுதியை இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திலும், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தனது மீள்காப்புறுதியை சுவிட்சலாந்தின் சுவிஸ் ரீ இன்சுரன்ஸ் கம்பனியிலும் வைத்துள்ளன.

## 2) ஆயுள்காப்பீட்டின் வரைவிலக்கணம்

''குறிப்பிட்ட ஒரு தொகைக்கு - அல்லது வயது, ஆரோக்கியம், தொழில் மற்றும் ஏனைய சூழ்நிலைகளுக்கேற்ப விகிதாசார முறையில் நிர்ணயிக்கப்பட்ட தவணைத் தொகைக்கு எவர் காப்புறுதி வழங்குகிறாரோ அந்த நபர் குறிப்பிட்ட காப்புறுதி ஒப்பந்தத்தில் குறித்துரைக்கப்பட்ட காலப்பிரிவிற்குள் இறக்குமிடத்து ஒப்பந்தத்தில் குறித்துள்ள தொகையை அதன் விதிமுறைகளுக்கு இணங்க, ஒப்பந்தத்தில் பெயர் குறிப்பிட்டுள்ள வருக்கு வழங்குவதற்கு காப்புறுதி செய்தவர் இணங்கும் ஓர் ஒப்பந்தமாகும்'' என்பது ஆயுள்காப்பீட்டிற்கான வரைவிலக்கணமாகும்.

எவ்வாறாயினும் ஏற்பட்டுள்ள போட்டித்தன்மைகளால் கவர்ச்சியுடையதாக மாற்றும் வகையில் பல் வேறுபட்ட மேலதிக அனுகூலங்கள் சேர்க்கப்பட்டு ஆயுட் காப்பீடு இன்று மரணத்துக்கு எதிரான ஆயுட்காப்பீடு தவிர உடல் ஊனம் போன்றவற்றிற்கும் பெற்றுக் கொள்ளமுடிகிறது.

## 3) ஆயுள் காப்பீட்டிற்கும் ஏனைய பொதுக் காப்புறுதிகளுக்கும் இடையிலான வேறுபாடுகள்

1) ஆயுள் காப்பீட்டில், காப்பீடு செய்பவர் குறித்த ஒரு தொகைப் பணத்தை குறித்த காலந்தோறும் (பொதுவாக மாதந்தோறும், காலாண்டு தோறும், வருடாந்தம்), ஏற்றுக் கொள்ளப்பட்ட காலப்பிரிவு ஒன்றிற்கு முதலீடு செய்ய இணங்குகிறார். இக்காலப் பகுதியில் காப்புறுதி செய்யப்பட்டவர் இறப்பாரேயானால் காப்புறுதி செய்யப்பட்டவரால் பெயர்குறித்து அமர்த்தப்பட்டவருக்கு உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை வழங்கப்படும். குறித்தகாலத்தில் மரணம் நிகழாவிடின் சர்தாரணமாக முதலீடு செய்யப்பட்ட பணம். வட்டியுடன் மீளளிக்கப் படுகிறது. ஆனால் பொது காப்புறுதி மரணத்தின் போது நட்டஈடு வழங்காததுடன், சில சந்தர்ப்பங்களில் அவ்வாறு செய்யப்பட்டாலும் கூட பாலிசியின் முதிர்வின் போது கட்டணம் மீளளிக்கப்படுவதில்லை.

2) ஆயுள்காப்பீட்டு பாலிசிகள் பொதுவாக ஒரு கலண்டர் வருடத்தைவிட கூடுதலான காலத்திற்கே ஏற்படுத்தப் படுகின்றன. (விதி விலக்குகள் இருப்பினும் பிரபல்யப்படவில்லை) ஆனால் பொது காப்பீட்டு திட்டங்கள் ஒரு வருடத்திற்கு உட்பட்டவையாகவே அமைகின்றன. அவை வருடந்தோறும் மீண்டும் புதுப்பிக்கப்படுதல் அவசியமாகும்.

3) ஆயுள் காப்பீட்டுத்தொகை ஒப்பந்தகாரராலேயே தீர்மானிக்கப்படும் (காப்புறுதி உச்சவரம்புகள் இருப்பின் அவற்றிற்குள் அடங்குதல் வேண்டும்) ஆனால் பொது காப்புறுதியில் நட்டவீடு சந்தை பெறுமதிக்கு அல்லது மீள உருவாக்கும் பெறுமதிக்கு வரையறுக்கப் பட்டிருக்கும்.

4) ஆயுள் காப்பீடு. ஒரு ஒப்பந்த அடிப்படையிலான பொறுப்பல்ல. அது மரணத்தின் போதே நட்டவீடு வழங்குகிறது. அதாவது இது அவசரநிலை பொறுப்பொன்றாகவே இருக்கிறது. எனவே ஆயுள்காப்புறுதி நட்டவீடு வழங்குவதற்கான ஒரு ஒப்பந்தமல்ல. மாறாக பொது காப்புறுதி நட்டவீடு வழங்குவதற்கான ஒப்பந்தமாக கருதப் படுகிறது.

## 4) ஆயுள் காப்பீட்டின் நடைமுறைகள்

ஆயுள் காப்பீட்டினை ஒருவர் எந்த வயதிலும் மேற்கொள்ள முடியும். திட்டங்கள் ஒவ்வொன்றும் தமக்குரிய விசேட பண்புகளைக் கொண்டுள்ளன. எனினும் பராயமடையாத ஒருவர் காப்புறுதி திட்டத்தில் பொதுவாக சேர்த்துக் கொள்ளப் படுவது இல்லை. அதேபோல் ஆகக்கூடிய வயதெல்லை திட்டத்திற்கு திட்டம் வேறுபடினும் அதுபொதுவாக 65 வயதிற்கு மேல் இருப்பதில்லை.

இயற்கை காரணங்களினால் மரணம் நிகழும் சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய தொகை ''காப்புறுதி செய்யப்பட்ட தொகை'' எனப்படுகிறது. எதிர்பாராத நேரத்தில் நிகழும் மரணம், விபத்து மர

ணம் எனவும் அது தவிர்ந்த எல்லாவகையான மரணமும் இயற்கை மரணம் எனவும் அழைக்கப்படுகிறது.

ஆயுள்காப்பீட்டு திட்ட மொன்றில் சேர விரும்பும் ஒருவர் ஒழுங்காக ஒரு தொகைப் பணத்தை முற்பணமாக முதலீடு செய்ய வேண்டும். ஒப்பந்தகாரர் முதலீடு செய்யும் இத் தொகை ''கட்டணம்'' (Premium) என அழைக்கப்படுகிறது. இந்தக் கட்டணம் மாதாந்தம், காலாண்டு தோறும், அரையாண்டு தோறும் அல்லது வருடம்தோறும் செலுத்தப்பட முடியும். முதலீடு செய்ய வேண்டிய கால அளவு 'முறை'' (Mode) என்றழைக்கப்படுகிறது. காப்பீடு செய்யப்பட்ட தொகை தேவையான தொகை தெரிவு செய்யப்பட்ட கால அளவு, வயது, சுகாதாரநிலை' திட்டத்தின் வகை என்டவற்றிற்கு ஏற்ப கட்டணத் தொகை வேறுபடுகிறது.

காப்புறுதி நிறுவனம் ஒன்று கையளிக்கும் ஒப்பந்த படிவத்தில் கையொப்பமிட்டு ஒருவர் காப்பீடு திட்டநிபந்தனைகள் பற்றி விரிவாக விளக்கும் ''பாலிசி'' எனப்படும் சான்றிதழைப பெறுவதனூடாக ''பாலிசிதாரர்'' ஆகிறார். பாலிசிதாரருக்கு பாலிசி வழங்கப்பட்டவுடன் இந்த ஒபபநதம அமுல் செய்யப்படுகிறது. அதன் மூலம் குறித்த நபரின் நட்டவச்ச பொறுப்பு காப்புறுதி நிறுவனத்தைச் சென்றடையும். இவ் வொப்பந்தமானது குறித்த காலத்தில் பாலிசிதாரர் மரணமடையும் போது அல்லது ஒபபந்தகாலம் முடிவடையும் போது அல்லது ஒப்பந்த காரர தமது கடமையை தட்டிக்கழிக்கும் போது என மூன்று சந்தர்ப்பங்களில் காலவதியாகின்றது.

பொரும்பாலான ஆயுள் காப்பீட்டு திட்டங்களில் ஒப்பந்தகாலம் முடிவடையும் போது பாலிசி தாரர் உயிருடனிருப்பின் முதலீடு செய்யப்பட்ட பணம் அதற்குரிய வட்டியுடன் மீளளிக்கப் படுகிறது. இது ''முதிர்ச்சிப் பெறுமதி'' என அழைக்கப்படுகிறது. சில திட்டங்களில் ஒப்பந்தகால எல்லையிலேயே வரையறுக்கப்பட்ட கால இடை வெளியில் முதலீட்டு பணம் மீளளிக்கப்படுகிறது.

பொதுவாக பாலிசிதாரரின் முதலீட்டையும் அதற்கான வட்டியையும் சேர்த்தே முதிர்ச்சிப் பெறுமதி தீர்மானிக்கப்படுகிறது. என்னும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம வழங்கும் மும்மடங்கு நலன் பெறும் திட்டம், தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வழங்கும் பல பயன் காப்பீட்டு திட்டம் சுலிங்கா இன்சுரன்சின் ஐந்து நலன் திட்டம் போன்ற திட்டங்களில் முதிர்ச்சிப் பெறுமதியிலும் பார்க்க அதிகமான தொகையினை வழங்குகின்றன. இது தவிர சில காப்பீட்டு திட்டங்களின் ''மிகை இலாபங்களும்'' முதிர்ச்சிப்பெறுமதியுடன் சேர்க்கபபடுகின்றன.

## 5) ஆயுள் காப்பீட்டின் மூலம் கிடைக்கும் பாதுகாபபு

(வழங்கபடும் பாதுகாப்புக்கள் திட்டத்திற்கு திட்டம் வேறுபடும்)

1) இயற்கை காரணங்களால் ஒப்பந்த காலத்தில் மரணம் ஏற்படின் காப்பீடு தொகை வழங்கப்படுகிறது.

2) சில காப்பீட்டுதிட்டங்களில் ஒப்பந்த காலத்தில் இயற்கை மரணம் எய்தினால் பெயர் குறித்து அமர்த்தப்பட்வர் காப்புறுதி செய்யப்பட்ட அடிப் படைத் தொகையிலும் அதிகமாக கோரி பெறமுடியும்.

3) எதிர்பாராத இடத்தில் எதிர்பாரத நேரத்தில் ஏற்படும் ஒரு விபத்தின் காரணமாக நிகழும் மரணம், அந்த

விபத்தின் விளைவாக மூன்று மாத காலத்தினுள் நிகழும் மரணம் விபத்து மரணம் எனப்படும். இச்சந்தாப்பத்தில் உயர் தொகைகளைக் கோரிப் பெற முடியும்.

4) பாலிசிதாரர் நோயின் காரணமாக வன்றி விபத்தின் காரணமாக நிகழும் முழு அளவு நிரந்தர ஊனத்தின் போது காப்புறுதி தொகையினைக் கோரிப் பெற முடியும்

5) முழு அளவிலான நிரந்தரமான ஊனம் ஏற்பட்டு உழைக்கமுடியாத சந்தாப் பத்தில் கட்டணம் செலுத்த முடியாமல் போகும். அப்போது குறித்த பாலிசியின் அனுகூலங்களை அனுபவிக்க முடியும்.

6) பாலிசிதாரர் விபத்தின் காரணமாக ஒரு பகுதி ஊனமடையின் காப்புறுதி தொகையைப் பெற முடியும் எனினும் காப்புறுதி ஒப்பந்த காலம் வரையும் கட்டணம் செலுத்தி வருதல் வேண்டும் இவ்வகை ஒப்பந்தங்களை சிலிங்கோ இன்சுரன்ஸ் லிமிட்மட்டுமே இலங்கையில் மேற்கொள்கிறது.

7) சில காப்புறுதிதிட்டங்கள் பாலிசிதாரர் ஒப்பந்த காலத்தில் இறந்த போது குடும்பத்தினருக்கு குறித்தகாலத்திற்கு ஒரு தொகை பணத்தை வழங்கி உதவுகின்றன.

## 6) ஆயுள் காப்பீட்டுத்திட்டமொன்றின் அனுகூலங்கள்

### 6.1 பாலிசிதாரருக்கு

1) பாலிசிதார் மரணமடையும் போது காப்பீட்டுத்தொகை தங்கியிருப்போருக்கு அல்லது பெயர் குறித்து அமர்த்தப்பட்டவருக்கு வழங்கப்படும். இது அடிப்படை அனுகூலமாகும்.

2) முழு அளவு மற்றும் நிரந்தர ஊனத்தின் போது பாலிசிதாரரால் உழைக்க முடியாமல் போகலாம். அத்துடன் வைத்தியச் செலவும் ஏற்படும். அதற்கு காப்பீட்டுத் தொகையை பயன்படுத்த முடியும்.

3) ஓரளவு ஊனத்தின் போதும் ஏற்படும் செலவுகளை சமாளிக்க கூடியதாக காப்பீட்டு தொகை பயன்படும்.

4) நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறும்போது பிணையாக பயன்படுத்த முடியும்.

5) நிலையான, சேமிப்பு திட்டங்கள் போல் தவணைக்கால முடிவில் அல்லது சில சந்தர்ப்பங்களில் இடைக் காலங்களில் முதலீடு செய்யப்பட்ட தொகை வட்டியுடன் மீளளிக்கப்படுவதால் இதனை ஒரு சேமிப்பாக கருதமுடியும்.

6) பாலிசிதாரர் விரும்பினால் இடையிலேயே திருப்பிக் கொடுத்து செலுத்திய முதலீட்டையும் அதற்குரிய வட்டியையும் பெறமுடியும்.

7) சில சந்தர்ப்பங்களில் தவணைப் பணத்தை செலுத்தமுடியாது போகலாம். அவ்வேளைகளில் கருணைக்காலமொன்றை கோரமுடியும் அக்காலப்பகுதியின் பின்னர் கட்டணம் செலுத்தி ஒப்பந்தத்தை தொடரமுடியும்.

8) வரிவிலக்கு பெறமுடியும்.

### 6.2. பொருளாதார ரீதியான அனுகூலம்:-

1) ஆயுள் காப்பீட்டு திட்டங்கள் உயிர் இழப்பின் போதும், உடல் ஊனத்

தின் போதும் காப்பீட்டு தொகையை வழங்குவதால் அவை ஒரு சமூக பாதுகாப்பு முறைகளாக உள்ளன.

2. பாலிசிதாரர் செலுத்தும் கட்டணத்தின் பெரும் பகுதி அரச பிணைகளிலும் ஒப்புதலளிக்கப்பட்ட முதலீடுகளிலும் முதலீடு செய்யப்படுகின்றன. இதன் மூலம் வேலைவாய்ப்புக்கள் உயர்ந்து அதன் மூலம் பொருட்கள் சேவைகளுக்கு கேள்வி கூடுவதன் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும்.

## 7) ஆயுட்காப்புறுதி திட்டங்களின் வகைகள்

மனிதனுடைய தேவைகள் நிறைவு செய்யப்பட முடியாதவை. எனினும் அவனுடைய செலவுகள் ஒவ்வொருவருக்கும் இடையில் வேறுபடும். எனவே மனிதனுடைய முதலீட்டினைக் கவர்ந்து கொள்ள ஒவ்வொரு காப்புறுதி நிறுவனமும் பல்வேறு கவர்ச்சிகரமான திட்டங்களை அறிமுகப்படுத்துகின்றன. இவை பெரும்பாலும் ஏனைய நிறுவனங்களின் திட்டங்களிலிருந்து சிறிய மாற்றங்களை கொண்ட திட்டங்களையே அறிமுகப்படுத்துகின்றன. இம் மாற்றங்கள் தவணைக்காலம், செலுத்த வேண்டிய கட்டணம் போன்றனவற்றிலேயே ஏற்படுகின்றது. மக்களின் மாறிவரும் தேவைகளை நிறைவு செய்வதனூடாக இலாபத்தை உழைக்கும் முயற்சியில் ஒவ்வொரு நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளன.

சில நிறுவனங்களின் திட்டங்கள் வெவ்வறு வகையாக உருவாக்க முடியும். அதாவது ஒரே திட்டத்தினையே சிறிய மாற்றங்களுடன் இன்னொரு திட்டமாக அறிவிக்க முடியும். இவற்றின் தவணைக்கட்டணங்கள் சலுகைகளுக்கேற்ப வேறுபட்டிருக்கும். ஒவ்வொருதிட்டமும் ஆகக்குறைந்த வயதையும் ஆகக்கூடிய வயதையும் நிர்ணயித்துள்ளது. இவ்வாறு காணப்படும் திட்டங்களில் சில வகைகள் கீழ்வருவனவாகும்.

### வகை (1)

இது குறித்தகாலப்பிரிவிற்கே கட்டணம் செலுத்தப்படவேண்டிய திட்டமாகும். எனவே குறித்தகாலப்பகுதிக்கே காப்பீட்டு பாதுகாப்பு கிடைக்கும். இத்திட்டத்தில் மரணம் ஏற்படும்வரை கட்டணம் செலுத்தப்படும். மரணத்தின்பின் செலுத்திய கட்டணம் மட்டுமே வழங்கப்படும்.

உ+ம் யூனியன் அஷ்யூரன்சின் யூனியன் குடும்ப நலத்திட்டம், சீ. ரி. சீ, நிறுவனத்தின் மாற்றத்தக்க தவணைக்கால பாலிசி.

### வகை (2)

இதில் பாலிசிதராரின் மரணம்வரை கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும். எனவே இதற்கு தவணைக்காலத்தை நிர்ணயிக்க முடிவதில்லை. காப்பீட்டு தொகை பாலிசிதாரரால் பெயர்குறித்து அமர்த்தப்பட்டவருக்கு மரணத்தின் பின்னர் வழங்கப்படும். இத்திட்டத்தில் விபத்து அனுகூலம், உடல் ஊன அனுகூலம், கட்டணம் செலுத்தாது இருக்கும் அனுகூலம், என்பவற்றை மேலதிக ஆதாயமாக தெரிவு செய்ய முடியும். மரணத்தின் பின்னரே பணம் செலுத்தப்படுவதால் இதற்கு முதிர்வு பெறுமதியில்லை.

உ+ம் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் மாற்றத்தக்க ஆயுள் காப்பீடு, முழு ஆயுள் காப்பீடு, தேசிய காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் முழு ஆயுள் காப்பீடு, சிலிங்கோ நிறுவனத்தின் முழு ஆயுள் வரையறுக்கப்படாத கொடுப்பனவு பாலிசி.

### வகை (3)

பாலிசிதாரர் குறித்த ஒரு காலப்பிரிவிற்கே கட்டணம் செலுத்தவேண்டியிருக்கும். அக்காலத்திற்கு மட்டுமே காப்பீட்டு பாதுகாப்பு கிடைக்கும். இத்திட்டத்திலும் மரணத்தின் பின்பே தங்கியிருப்போருக்கு அல்லது பெயர் குறித்து அமர்த்தப்பட்டவருக்கு வழங்கப்படும் என்பதால் பெரும்பாலும் தனிநபர்கள் இத் திட்டத்தை தெரிவு செய்வர்

உ+ம்: இ. கா. கூ. ன் வரையறுக்கப்பட்ட முழு ஆயுள்காப்பீடு

### வகை (4)

இந்த வகைத்திட்டங்களில் நிர்ணயிக்கப்பட்ட ஒரு தவணைக் காலத்தில் மரணம் ஏற்படின் முதலீட்டு தொகை வழங்கப்படும். மாறாக காலம் முடிந்த பின்னர் உயிருடன் இருப்பின் முதிர்வு தொகை திருப்பித் தரப்படும் இத் திட்டத்திற்கு வரிவிலக்கு இல்லை என்பதால் இது வரி செலுத்துவோரிடையே பிரபலம் பெறவில்லை

உ+ம்: தே. கா. கூ.ன் காலவரையறை பாலிசி

### வகை (5)

தெரிவு செய்யப்பட்ட கால அளவுக்கே கட்டணம் செலுத்தப்பட வேண்டும் அக்காலப்பகுதிக்கே காப்பீடு பாதுகாப்பும் காணப்படும். தவணைமுடிவில் முதிர்வு தொகை வழங்கப்படும், இன்று பெருமளவில் காணப்படும் இவ்வகைத் திட்டங்களே பிரபலம் பெற்றுள்ளன. இதற்கான கட்டணமும் சார்பு ரீதியில் குறைவு

உ+ம் இ. கா. கூ. ன் வரையறுக்கப்பட்ட கொடுப்பனவு ஆயுள் காப்பீடு

### வகை (6)

இவ்வகைத் திட்டங்களில் தவணைக் காலம் முடியும் வரையில் ஒவ்வொராண்டின் இறுதியிலும் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு 5% ஆல் அதிகரிக்கும், எனினும் முதிர்வுப் பெறுமதி தவணைமுடிவில் வழங்கப்படும். உச்சமட்ட அடிப்படை ஆயுள்காப்பீட்டிற்கு சமமாக காணப்படும். இதனை பின்வரும் சமன்பாட்டின் மூலம் அறியலாம். (முதிர்வு பெறுமதி = x எனவும், ஒரு வருடத்தில் காப்பீட்டு தொகை = n எனவும் கொள்க)

காப்பீடு செய்யப்பட்ட
அடிப்படைத் தொகை $= x^{o}(1+5\%)n$
$(1+5\%)m$

(m + தவணைக்காலம் வருடங்களில்,
n + நிகழ்வு இடம்பெறும் தவணை வருடம்)

உ+ம்: இ. கா. கூ.ன். ஜன செத காப்பீடு.

### வகை (7)

இதிலும் தெரிவு செய்யப்பட்ட காலத்திற்கே தவணைக்கட்டணம் செலுத்தவேண்டும், இக்காலப் பகுதிக்கே காப்பீடு பாதுகாப்பும் கிடைக்கும். எனினும் முதிர்வுப் பெறுமதி தவணைக்காலத்திலேயே கட்டம் கட்டமாக மீள பெறமுடியும். பாலிசிதாரர் மேலதிக நலன்களையும் தெரிவு செய்யமுடியும்.

உ+ம் இ. கா. கூ. ன் மூன்று கட்ட பாலிசி, சீ. ரீ சீ. நிறுவன அபேக்சாபாலிசி என்பனவாகும்.

மேலே வகைப்படுத்தப்பட்டவை மட்டுமல்லாமல் காப்புறுதி நிறுவனங்கள் தமது திறமைக்கேற்பவும் கிடைக்கும் இலாபத்திற்கேற்பவும் ஏனைய காப்புறுதி நிறுவனங்களுடனான போட்டியாலும் பல சிறப்புத் திட்டங்களை ஏற்படுத்தமுடியும். இவை புதிய வகைகளாக அறிமுகப்படுத்தப்பட முடியும். இந்த வகையில் ஆயுள் காப்பீடு என்பது நட்ட அச்சத்திலிருந்து பாதுகாப்பை வழங்குவதுடன் ஒரு முதலீட்டில் கிடைக்கக்கூடிய அனுகூலங்களையும் கொண்டிருப்பதனால் இது பொது மக்களிடையே நன்கு பிரபலம் பெறத் தொடங்கியுள்ளது.

உசாத்துணை:

பொருளியல் நோக்கு 1992

காப்புறுதி சம்பந்தமான அறிக்கைகள்.

□

# தேசிய சேமிப்பு வங்கி

# National Saving Bank

ஒரு நாட்டின் பொருளாதார அபி விருத்திக்கு நிதி அவசியம். இதனை பல் வேறு வழிகளில் திரட்டிக் கொள்ளலாம். இவற்றுள் சேமிப்பும் ஒரு வழியாகும். சேமிப்புக்களைப் பெருக்குவதன் மூலம் முதலீடுகளை அதிகரித்து அபிவிருத்திக்கு தேவையான நிதி வசதியில் ஒரு பகுதியைப் பூர்த்தி செய்யலாம். எனவே நாட்டில் சேமிப்பை பெருக்க வேண்டியது அவசியம். இதற்கு ஒரு பாதுகாப்பான நிதி நிறுவனம் அவசியம். இத்தேவை உணரப்பட்டு தேசிய சேமிப்பு வங்கி அமைக்கப்பட்டுள் ளது. இதற்கென 1971ம் ஆண்டு 30ம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் 1971 ஆகஸ்ட் 31ல் பிரகடனப்படுத்தப் பட்டது. இதற்கு அமைய தேசிய சேமிப்பு வங்கி 1971 செப்ரெம்பர் 29ல் அமைக்கப் பட்டது.

தேசிய சேமிப்பு வங்கியினை அமைக் கும் பொருட்டு பின்வரும் மூன்று நிறு வனங்கள் ஒன்றிணைக்கப்பட்டன.

- ☐ இலங்கை சேமிப்பு வங்கி
- ☐ தேசிய சேமிப்பு இயக்கம்
- ☐ அஞ்சல் அலுவலக சேமிப்பு வங்கி

இத் தேசிய சேமிப்பு வங்கி இலங்கை யில் சேமிப்பை ஊக்குவிக்கும் ஒரு பிரத் தியேக நிறுவனமாக உள்ளது. இதனுடைய கிளைகள் நாட்டின் கிராமப் பகுதிகளுக்கு போதிய அளவு பரப்பப்படவில்லை என்ப தனால் அது இலங்கையில் உள்ள அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் உப அஞ்சல் அலு வலகங்களுடன் இணைந்து சேமிப்பு வைப் புக்களை திரட்டுவதில் ஈடுபட்டுள்ளது.

ப. உதயணன்
ஆண்டு 13E
வர்த்தகம்

## தேசிய சேமிப்பு வங்கியின் குறிக்கோள்கள்

- ☐ மக்கள் மத்தியில் சேமிப்பு பழக்கத்தை அதிகரிக்கச் செய்தல்.
- ☐ வெவ்வேறு வகையான சேமிப்பு வைப் புக்களை மக்கள் மத்தியில் அறிமுகப் படுத்தி நடைமுறைப்படுத்தல்.
- ☐ தேவையான போட்டிகளை நடாத்தி வைப்புக்களை வங்கிக்கு வரவழைத் தல்.

## தேசிய சேமிப்பு வங்கி வர்த்தக வங்கியிலிருந்து வேறுபடும் வழிகள்

தேசிய சேமிப்பு வங்கி அரச நிறுவ னங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இது ஒரு வர்த்தக வங்கி அல்ல. வாடிக் கையாளரிடமிருந்து நடைமுறை வைப்புக் களை ஏற்று செயற்படும் வங்கிகளே வர்த் தக வங்கிகள் ஆகும். இவை அவ் வைப் பின் ஊடாக பண ஆக்க நடவடிக்கை களில் ஈடுபடும். ஆனால் தேசிய சேமிப்பு வங்கியைப் பொறுத்த வரையில் சேமிப்பு வைப்புக்களையே ஏற்கின்றது. இவை

நடைமுறை வைப்பை ஏற்பதில்லை. இதனால் இது ஒரு வர்த்தக வங்கியாகக் கருதப்படுவதில்லை.

### தேசிய சேமிப்பு வங்கியில் மக்கள் வைப்பை இட விரும்புவதற்கான காரணங்கள்

தேசிய சேமிப்பு வங்கியில் மக்கள் பணத்தை வைப்பில் இடுவதற்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. வைப்பாளர்களின் நோக்கத்தை பொறுத்து அவை வேறுபடினும் பின்வரும் காரணங்களை முன்வைக்கலாம்.

- இலங்கையில் காணப்படும் சகல அரச நிறுவனங்களையும் விட தேசிய சேமிப்பு வங்கி வைப்புகளுக்கு அதி கூடிய வட்டியை வழங்குதல்.
- நாட்டின் எப்பகுதியிலும் உள்ளவர்கள் அஞ்சல் அலுவலகங்கள், உப அஞ்சல் அலுவலகங்கள் என்பவற்றின் ஊடாகவும் இவ்வங்கியில் சேமிப்பு வைப்புக்களை உருவாக்கலாம்.
- இவ் வங்கியின் வைப்புகளுக்கு அரசின் பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்பட்டிருப்பதால் மக்களுக்கு அதிக நம்பிக்கை ஏற்பட்டிருத்தல்.
- எவரும் ஐந்து ரூபாவுடன் (5/-) இவ் வங்கியில் சாதாரண சேமிப்பு வைப்பை இகுலவாக ஆரம்பிக்க முடியும்.
- வர்த்தக வங்கிகள், நிதிக் கம்பனிகள் போல் அல்லாது எத்தொகை பணத்தினையும் மீளப் பெறும் போது முத்திரை வரியினை செலுத்த வேண்டியதில்லை.
- ஏனைய வங்கிகள், நிதிக் கம்பனிகளை விட இவ் வங்கியில் பலவகை சேமிப்பு திட்டங்கள் காணப்படுவதால் மக்கள் சேமிப்பு திட்டத்தை தெரிவு செய்யலாம்.

### தேசிய சேமிப்பு வங்கியில் தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்கள்

- சேமிப்பு கணக்கு திட்டம் —

  சிறுவர்கள், தனி ஆட்கள் மற்றும் பொது நிறுவனங்களும் இக் கணக்கை ஆரம்பிக்கலாம்,

- நிலையான வைப்புக் கணககு—

  இதனை 6, 12, 24 மாதங்களுக்கென குறிப்பிட்டு குறிப்பிட்ட அளவு தொகை பணத்தை இட்டு ஆரம்பிக்கலாம். இதற்கு வட்டி அதிகம். வட்டியினை மாதாந்தம் அல்லது வருட முடிவில் பெற்றுக் கொள்ளலாம்.

- ஓய்வூதிய திட்டம் —

  சுயதொழில் புரிவோருக்கு இது பெரிதும் உதவும். குறிப்பிட்ட தொகையை மாதாந்தம் எனும் அடிப்படையில் 53 மாதங்களுக்கு செலுத்தி 54வது மாதத்தில் இருந்து ஓய்வூதிய வசதியை பெறலாம்.

- அறக்கொடை திட்டம் —

  இது குழந்தைகளுக்கான ஒரு சேமிப்பு திட்டம் 10 வருடங்களின் பின் ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தை பெறுவதற்கான செயற்பாட்டை இது செய்கின்றது.

- உழைக்கும் போதே சேமிப்பு திட்டம் —

  இது ஊழியரின் எழுத்து மூலமான சம்மதக் கடிதத்திற்கமைய மாதாந்தம் குறிப்பிட்ட தொகை வீதம் ஊழியரின்

பெயரில் சேமிப்பு வைப்பிலிடும் ஒரு திட்டமாகும்.

☐ சேமிப்பு முறிகள் —

இது 10/- பெறுமானம் கொண்ட ஒரு சீட்டிழுப்பு திட்டமாகும். இது ஒரு மாதத்திற்கு ஒரு முறை குலுக்கப்படும், வெற்றி பெறுபவர் பெருந்தொகையான பணப்பரிசுகளைப் பெற்றுக் கொள்ள லாம்.

☐ நன்கொடைச் சீட்டு —

இவ் வங்கி திருமணம், பிறந்த தினம் என்பவற்றிற்கு வழங்குவதற்கான 25/-, 50/-, 100/- பெறுமதியான பெறுமானம் கொண்ட நன்கொடைச் சீட்டுக்களை விற்கின்றது. இவற்றை பரிசாகப் பெறுவோர் சேமிப்பு வைப்புக்களை உருவாக்கலாம்.

☐ நிலையான வைப்பிற்கு எதிரான கடன் —

நிலையான வைப்பை ஏற்படுத்தியவர் அதைப் பிணையாக வைத்து அதன் 90% அளவிற்கு கடன் பெறலாம்.

☐ வீட்டுக்கடன் —

வீட்டைக் கட்ட அலலது கொள்வனவு செய்ய 70,000/- வரை இக்கடன் வழங்கப்படும்.

☐ விவசாய சிறு கைத்தொழில் கடன் —

இது சில பகுதிகளில் விவசாய சிறு கைத்தொழில் என்பவற்றை அபிவிருத்தி செய்ய வழ்ங்கப்படுகின்றது.

☐ **திரட்டும் பணத்தை மேற்கூறிய கடன்களை விட அரசின் திறைசேரி உண்டியல், அரச பிணைப்பத்திரம் போன்றவற்றிலும் முதலீடு செய்கின்றது.**

### தேசிய சேமிப்பு வங்கியில் தற்போது நடைமுறையில் உள்ள வட்டி வீதங்கள்

| விபரம் | வீதம் |
|---|---|
| ☐ சேமிப்பு கணக்கு | 14% |
| ☐ நிலையான வைப்பு (1 வருடம்) | 16% |
| ☐ நிலையான வைப்பு (2 வருடம்) | 17% |
| ☐ நிலையான வைப்பு (மாதாந்தம்) | 15.3% |

தேசிய சேமிப்பு வங்கி அதன் மொத்த வைப்புக்களை 1991ம் ஆண்டு இறுதியில் ரூ. 2,78,150 இலட்சத்தில் இருந்து ரூ. 3,28,770 இலட்சத்திற்கு உயர்த்தியது. இவ் வங்கியின் செயற்பாடுகளை அவதானித்துவரும் பொழுது அது பெருமளவு உள்நாட்டு சேமிப்புக்களை ஊக்குவித்து திரட்டுகின்றது. எனவே அது தனது இலக்கை நோக்கிச் செல்லுவதைக் காணலாம், தொடர்ந்தும் இவ்வங்கியின் செயற்பாடுகள் வளர்ச்சியடையும் என எதிர்பார்ப்பது பொருத்தமானதாகும்.

உசாத்துணை நூல்கள்:

★ தேசிய சேமிப்பு வங்கியின் அறிக்கைகள்

★ நடைமுறை விடயங்கள் - தே. ஜெயராமன்

★ இலங்கை மத்திய வங்கி அறிக்கை - 1992

☐

வணிகக் கலையே வளர்க

வரவு மலரே வருக !

நியாயமான விலையில் தரமான அரிசியை

மொத்தமாகவும் சில்லறையாகவும்

பெற்றுக் கொள்ள நாடுங்கள்

## கு. சிவப்பிரகாசம் அன் சன்ஸ்

**312,** ஆஸ்பத்திரி வீதி, — யாழ்ப்பாணம்

யாழ்நகரில் சிறந்த புதிய
பழைய படங்களை வாடகைக்கு
பெற்றுக் கொள்ளவும்.
புதிய பழைய படங்களை
சிறந்த முறையில்
பதிவு செய்து கொள்ளவும்
எம்மை நாடுங்கள்.

## குணம் வீடியோ சென்ரர்

42 மணிக்கூட்டு கோபுர வீதி,

யாழ்ப்பாணம்.

T. P; **23665**

வரவு பல்கிப் பெருகி
வணிகத்தை வளம்படுத்த
எமது வாழ்த்துக்கள்

## V. S. B. GROUP

GENERAL MERCHANTS
AND TRANSPORTERS

266 A, STANLEY ROAD,
(Aruchuna Road),
JAFFNA.

அழகிற்கு அழகு செய்யும்

அழகிய

தங்கப்பவுண் நகைகளுக்கு

# சோபனா நகை மாளிகை

116, (V) கஸ்தூரியார் வீதி, — யாழ்ப்பாணம்.

இதயம் கனிந்த வாழ்த்துக்கள்

## சீமாட்டி

## ஜவுளி சமுத்திரம்

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

இந்துவின் வரவே,
இனிமையாய்
வாழ வாழ்த்துகிறோம்.

## V. M. P. MURUGESU
## & Bro.

*171, STANLEY ROAD,*
*JAFFNA.*

# இலங்கையின் பொருளாதாரம் இரட்டை பொருளாதார அமைப்பில் இருந்து மாறுபட்டுள்ளதா?

இரட்டை பொருளாதார அமைப்பு என்னும் பொழுது ஒரு குறிப்பிட்ட நாட்டின் பொருளாதார அமைப்பினுள் வேறுபட்ட மட்டங்களின் வளர்ச்சி அபிவிருத்தி என்பவற்றை அடைந்த இருதுறைகள் ஒன்றாக இணைந்திருக்கும் தன்மையை குறிக்கும். 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பெருந்தோட்ட பொருளாதாரத்தின் வளர்ச்சி நாட்டின் பொருளாதாரம் இவ்வாறான இரட்டைத் தன்மைகளை கொண்டதாக மாற வழிவகுத்தது விவசாயத்தையே மூலாதாரமாகக் கொண்ட இலங்கையின் பொருளாதாரத்தில் இரண்டு முக்கிய பிரிவுகளை அவதானிக்கலாம்.

1) நவீனதுறை என்றழைக்கப்பட்ட அன்னிய ஆதிக்கப் பொருளாதாரம் (பெருந்தோட்ட பொருளாதாரம்)

2) பாரம்பரியமிக்க கிராமியப் பொருளாதாரம்.

இன்றைய இலங்கையின் தேசிய உற்பத்தியில் விவசாயம் தவிர்ந்த கைத்தொழிற் சேவைகள் துறைகள் வளர்ச்சியடைந்து காணப்படும் நிலையிலும் பொருளாதாரத்தினை நிர்ணயிப்பதில் விவசாயமே முக்கிய பங்கினை வகிக்கின்றதெனலாம். விவசாயத்தில் வெளி உலகத்தோடு தொடர்பினை

வா. லோகேஸ்வரன்
ஆண்டு 13F
வர்த்தகப்பிரிவு

வைத்துக்கொண்ட பெருந்தோட்ட பொருளாதாரம் நவீன முறையில் வளர்த்தெடுக்கப்பட்ட ஓர் துறையாக காணப்படுகிறது. நாட்டின் வர்த்தகத்தின் பெரும் பகுதி இவ்வாறான பெருந்தோட்ட துறையிலேயே பெருமளவு தங்கி இருந்தது. அவற்றுடன் உருவாக்கப்பட்ட நகரங்களும் பட்டினங்களும் அவற்றின் அடிப்படை தேவைகளுக்கு ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்திலேயே அதிகளவு தங்கி இருந்தன. இவ் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் நவீன முறையில் வளர்த்தெடுக்கப்பட்ட பெருந்தோட்டப் பயிர்களிலேயே தங்கி இருந்தது. இதற்கிணங்க அரசாங்க தொடர்புகளும் நடவடிக்கைகளும் இத்துறையினூடாக அமைந்திருந்தன.

இவ்வாறு நவீன முறையில் வளர்த்தெடுக்கப்பட்ட துறை ஒரு பக்கம் அமைய குடித்தொகையில் 65 வீதத்தினரையும் ஊழியப் படையில் 50 சதவீதத்தினரையும் கொண்ட பாரம்பரிய விவசாயத்துறை காணப்பட்டது. பெருந்தொகை தொழிலாளர்களை உள்ளடக்கியதாக அமைந்த நிலையில் இதன் வளர்ச்சி பிழைப்பூதிய நிலையில் காணப்பட்டது. இப்பாரம்பரிய துறை வெளி உலகுடன் எத்தகைய தொடர்பினையும் வைத்துக் கொண்டிருக்கவில்லை. எனவே கிராமிய விவசாயத்துறை வளர்த்தெடுக்கப்படாத துறையாக அமைந்துள்ளதெனலாம். இவ்விரு தன்மைகளையும் ஒப்பிட்டு நோக்கியே இலங்கையின் பொருளாதாரம் இரட்டைப் பொருளாதாரம் என வரையறை செய்ய முடிகின்றது.

நவீனதுறை என அழைக்கப்படும் பெருந்தோட்டப் பொருளாதாரத்துறை அந்நியரால் வளர்த்தெடுக்கப்பட்ட ஒரு துறையாகும். அந்நிய ஆதிக்கமும் பொருளாதார துறையின் நிர்மாணமும் அதனது தொடர்ச்சியான பராமரிப்பும் அத்துறையோடு வளர்ந்த உள்ளூர் சமூகப் பொருளாதார அமைப்புக்களாலும் உதவப் பெற்றுள்ளன. இதற்கிணங்க சமூக கலாச்சார காரணிகளும் மாற்றமடைந்தன. பெருந்தோட்டத் துறையைச் சுற்றி வளர்ந்த சமூக முறைமை தானே தோன்றியதோடு அந்நிலையை ஏற்றுக் கொள்ளக்கூடிய அம்சங்களும் வளர்ச்சியடைந்தன. இக்காரணிகள் குறிப்பிட்ட ஒரு துறை நன்கு வளர்த்தெடுக்கப்பட வழிவகுத்தது. அதேசமயம் இலாபகரமற்ற கிராமிய விவசாயம் புறக்கணிக்கப்பட்டது. இப்புறக்கணிப்பு அத்துறையின் வளர்ச்சியின்மைக்கும் அத்துறையில் தங்கி இருப்போரின் பின்தங்கிய நிலைக்கும் காரணமாயிற்று. இவ்வாறான ஒரு சூழ்நிலை இலங்கையில் நீண்டகாலம் நிலவி வந்தமையே இலங்கையின் பொருளாதாரம் இரட்டை பொருளாதாரம் என அழைக்க காரணமாயிற்று.

நவீன இலங்கையின் பொருளாதார அம்சங்களைக், கொண்டு நோக்கும்போது பெருந்தோட்டப் பயிற்செய்கை, சுரங்கத் தொழில், கட்டிட ஆக்கம், போக்குவரத்து மொத்த – சில்லறை வர்த்தகம், வங்கித் தொழில் பொது நிர்வாகம் போன்றவை நவீன முறையில் வளர்த்தெடுக்கப்பட்ட துறைகளாகவும் பெருமளவு சந்தை நடவடிக்கைகளை உள்ளடக்கிய துறைகளாகவும் காணப்படுகின்றன. தேசிய உற்பத்தியில் பெருந்தோட்டப் பயிர்கள் 1978 ஆம் ஆண்டு புள்ளி விபரப்படி 10.6 வீதத்தினைக் கொண்டுள்ளன. கைத்தொழில் உற்பத்தியில் 20.1 வீதமும் ஆகும். இக்கைத்தொழில் துறை பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைகளை அடிப்படையாக கொண்டே பெருமளவு உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு மாறாக தேசிய உற்பத்தியில் 17.8 வீதத்தைக் கொண்டுள்ள கிராமிய விவசாய உற்பத்தியான நெல்லும் ஏனைய உப உணவு உற்பத்தியும் வளர்த்தெடுக்கப்படாத ஒரு துறையாகக் காணப்படுகின்றது. தொழில் நுட்பத்திலும் வளர்ச்சி வேகத்திலும் பின்தங்கிய துறையாக இக்கிராமிய விவசாயம் அமைந்துள்ளது. உற்பத்தி திறன் குறைந்த கிராமிய விவசாய துறையும் நவீன முறையில் வளர்த்தெடுக்கப்பட்ட பெருந்தோட்ட விவசாயம் கைத்தொழில் போன்றவையும் இலங்கையின் பொருளாதார அமைப்பில் இரு வேறுபட்ட துறைகள் ஒன்றாக இணைந்திருக்கும் தன்மையைக் காட்டுகிறது. இவ்வாறான தன்மை இலங்கையின் பொருளாதாரம் இரட்டை பொருளாதாம் என விபரிப்பதற்கு காரணமாயிற்று.

இரட்டைப் பொருளாதாரம் என வரையறை செய்யினும் முற்றாக இரட்டைத் தன்மைகளை இலங்கையின் பொருளாதாரத்தில் காண்பதரிது. சுதந்திரம் அடைந்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுள் இலங்கையின் பொருளாதாரத்தில் இரட்டைப் போக்கு நலிவடைய காரணமாயிற்று. காலத்திற்கு காலம் இறக்குமதிகள் பெருமளவு குறைக்கப்பட்டுத் தனியார் துறையிலும் அரசாங்கத்துறையிலும் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது. 1950 ஆம் ஆண்டின்பிற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கைத்தொழில் மயப்படுத்தும் முயற்சிகள் இலங்கையின் பாரிய தொழிற்சாலைகளின் தோற்றத்திற்கும் சிறுகைத் தொழிலிற்கும் வழி வகுத்தன. பாரம்பரிய மிக்க கிராமிய விவசாயதுறையை நவீன மயப்படுத்த பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அரசாங்கங்களின் பல்வேறு நடவடிக்கைகள் கிராமிய பொருளாதாரம் வளர்த்தெடுக்கப்பட காரணமாயிற்று. எனவே யதார்த்த இலங்கையின் பொருளாதாரத்தினை இரட்டை பொருளாதாரம் என வரையறை

செய்யினும் அது முற்றிலும் பொருத்தமான தொன்றல்ல.

19 ஆம் நூற்றாண்டில் வளர்ச்சியடையத் தொடங்கிய பெருந்தோட்டங்கள் உள்நாட்டு விவசாயத்தில் ஏற்படுத்திய தாக்கம் பாரதூரமானதாகும். இதுவரை காலமும் பிழைப்பூதிய விவசாயத்துறையில் வேரூன்றி இருந்த பொருளாதாரம் படிப்படியாக நவீன ஏற்றுமதிப் பொருளாதாரமாக உருமாறத் தொடங்கியது. ஐரோப்பியரின் வருகையால் பெருந்தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டமையும் அவை ஏற்றுமதி கருதி செயற்பட்டமையும் ஏனைய துறைகளில் முக்கியத்துவம் குறைய காரணமாயிற்று. இதன் காரணமாக இலங்கையின் பொருளாதாரத்தின் பெரும்பகுதி ஏற்றுமதி – இறக்குமதியை மையமாகக் கொண்டே செயற்படத் தொடங்கின. இதனடிப்படையில் இலங்கையின் பொருளாதாரத்தினை ஏற்றுமதி பொருளாதாரம் என வரையறை செய்யலாம்.

இலங்கையின் பெரும்பாலான தேவைகள் இறக்குமதி மூலமே பூர்த்தி செய்யப்படுகின்றன. அத்தியவசிய பண்டங்களான அரிசி, சீனி, மா புடவை போன்ற நுகர்வுப் பொருட்கள் மாத்திரயன்றி கைத்தொழில் வளர்ச்சிக்கு தேவையான மூலதனப் பொருட்களும், நடுத்தரப் பொருட்களும் இறக்குமதி மூலம் பெறப்பட்டன. இப்பொருட்களை இறக்குமதி செய்ய ஏற்றுமதி வருமானமே மூல காரணியாக அமைந்துள்ளது. எனவே நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகள் கைத்தொழில் வளர்ச்சி வேலைவாய்ப்புகள், வாழ்க்கைத்தரம் ஆகிய அனைத்தும் ஏற்றுமதி வருமானத்திலேயே தங்கி உள்ளது.

இலங்கையின் ஏற்றுமதித் துறையினை மரபு ரீதியான ஏற்றுமதிகள் மரபுரீதி அற்ற ஏற்றுமதிகள் என இரண்டு வகையாக வகுக்கலாம். பெருந்தோட்டப் பயிர்களான தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள் மரபுரீதியான ஏற்றுமதியில் அடங்கும் சிறு கைத்தொழில் பொருட்கள் மரபுரீதி அற்ற ஏற்றுமதியில் அடங்கும்.

## இரட்டை பொருளாதாரத்தை நீக்க அரசு எடுத்த நடவடிக்கைகள்:-

1) கிராமிய கொடுகடன் திட்டம்.

2) கிராமிய விவசாயத்தில் நவீன தொழில் நுட்பம் அறிமுகப்படுத்தியமை.

3) கிராமிய விவசாயத்திற்கு மானியம் வழங்கியமை.

4) மகாவலி அபிவிருத்தி திட்டம் உருவாக்கியமை.

5) ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி திட்டம் ஏற்படுற்றியமை.

6) மகாவலிக்கு உட்படாத நீர்ப்பான திட்டங்களை உருவாக்கியமை.

7) ஏற்றுமதி நோக்கிய கிராமிய விவசாய உற்பத்திகளை மேற்கொள்ள செய்தமை. உதாரணம் (லீக்ஸ், கரட்) ஆகியவற்றை குறிப்பிடலாம்.

மேலும் பெருந்தோட்ட விவசாய பொருட்களை மக்கள் அதிகளவு நுகர ஆரம்பித்து விட்டனர்.

(உ + ம்): தேயிலை. பெருந்தோட்ட விவசாயதுறையில் சிற்றுடமையாளர்களை அனுமதித்தனாலும், பொருளாதாரத்தின் இரட்டைத் தன்மை நீங்கி பெருந்தோட்ட விவசாயத்திற்கும் கிராமிய விவசாயத்திற்கும் நெருங்கிய தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவற்றை எல்லாம் தொகுத்து நோக்கி பார்க்கின்ற பொழுது பிரித்தானியர் வருகையின் பின்பு காணப்பட்ட இரட்டை பொருளாதாரம் இன்று மாற்றியமைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. □

# குத்தகையும் வாடகைக் கொள்வனவும்

# Leasing and Hire Purchase

குறித்த நிறுவனமொன்று நிலையான சொத்தொன்றை தனது பாவனைக்காக பல்வேறு முறைகளில் பெற்றுக்கொள்ள முடியும். குறிப்பாக,

1) காசுக்குக் கொள்வனவு செய்தல்.

2) கடன்பெற்று அக்காசுக்குச் சொத்தை வாங்குதல்.
(Outright Purchase using the proceeds of a loan)

3) வாடகைக் கொள்வனவு அல்லது குத்தகைக் கொள்வனவு.

4) நிதிக்குத்தகை (Finance Ieasing)

என்னும் முறைகளைக் குறிப்பிடலாம். இவற்றில் முதலிரு முறைகளிலும் சொத்தின் சட்டரீதியான உரிமை (legal title) கொள்வனவுத் திகதியிலேயே வாங்குபவருக்கு கிடைக்கிறது. வாடகைக் கொள்வனவு முறையிலோ இறுதித் தவணைப் பணம் செலுத்தப்படும் போதே உரிமை பெறப்படும். நிதிக்குத்தகை ஒன்றைப் பொறுத்தவரை சட்டரீதியாக சொத்தின் உரிமை மாற்றம் ஒருபோதும் நிகழ்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சொத்தொன்றை வாங்க உடனடியாகப் பணத்தைப் பெற இயலாத நிறுவனங்கள் வாடகைக்கொள்வனவு, குத்தகை முறைகளை விரும்பிப் பின்பற்றுகின்றன. இலங்கையில் வாடகைக் கொள்வனவு முறை விற்பனையில் பெருமளவான நிதிக்கம்பனிகள் ஈடுபட்டு வருகின்றன. எண்பதுகளின் பின்னரைப் பகுதியிலிருந்து குத்தகைக் கம்பனிகளும் இலங்கையில் நிறுவப்பட்டு வருகின்றன.

## வாடகைக் கொள்வனவு (Hire Purchas):

வாடகைக் கொள்வனவு ஒப்பந்தமொன்றின் கீழ் பெறப்படும் சொத்துக்களைப் பொறுத்தவரை சொத்தினைப் பெற்ற வாடகைக் கொள்வனவாளர் (Hiree) தனது ஏடுகளில் பதிவுகளை மேற்கொள்கின்றபோது ஐந்தொகையில் சொத்தின் காசு விலையில் (Cash Price) பதிவார். சொத்தின் பயன்தரும் பொருளாதார காலத்திற்கு (Useful Economic life) பெறுமானத் தேய்வும் செய்யப்படும். செலுத்தப்பட வேண்டிய மீதிக் கடன்தொகையும் வருடாந்த ஐந்தொகையில் காட்டப்படும். வருடாந்த கட்டணத் தொகையையும் வட்டியையும் கவனத்திற்கொண்டு வருடங்களிடையே பகிரப்படும். கொள்வனவாளரது கட்டணத்திலுள்ள மூலதனக்கூறு (Capital Part) ஐந்தொகையின் மீதியை குறைத்துச் செல்லும். வருமானக்கூறு (Income Part) அவரது இலாப நட்டக்கணக்கில் வரவு வைக்கப்படும்.

வை. சிவநேசன்
யாழ். பல்கலைக்கழகம்

கொள்வனவாளரது ஏட்டில் மேற்கொள்ளப்படும் கணக்கீட்டுப் பதிவுகளைப் பின்வருமாறு சுருக்கமாக கூறலாம்.

| | |
|---|---|
| சொத்தின் காசு விலை | சொத்துக் க/கு வரவு<br>விற்பனையாளன் க/கு செலவு. |
| செலுத்தும் வைப்புப் பணம், தவணைக் கட்டணங்கள் | விற்பனையாளன் க/கு வரவு<br>வங்கி / காசுக் க/கு செலவு. |
| வருடாந்த வட்டி | வாடகைக் கொள்வனவு வட்டி க/கு வரவு<br>விற்பனையாளன் க/கு செலவு. |

மேற்கூறியவாறான கணக்கியல் முறைமைக்கு ''சட்டவடிவை விட உள்ளுடனே முக்கியம்'' (Substance over form) என்ற கணக்கியல் கோட்பாடே காரணமாகும். இதன்படி கணக்கியல் நடவடிக்கைகளும் ஏனைய நிகழ்வுகளும் பதிவுகளில் அவற்றின் உள்ளுடனையும் நிதியியல் யதார்த்தத்தினையும் முதன்மைப் படுத்தக்கூடாது இந்தப் பின்னணியிலேயே வாடகைக் கொள்வனவு தொடர்பான பதிவுகள், சட்டரீதியாக உரிமை மாற்றம் நிகழாத நிலையிலும் உரிமை மாறியதாகக் கொண்டு மேற்கொள்ளப் படுகின்றன.

வாடகைக் கொள்வனவு முறையில் விற்பனையாளரது ஏட்டுப் பதிவுகள் இக் கட்டுரையில் விபரிக்கப்படவில்லை. பின்வரும் இரு முறைகளில் விற்பனையாளர் தம் பதிவுகளை பொதுவாக மேற்கொள்வதுண்டு.

1) வாடகையிலுள்ள இருப்பு முறை (Stock on hire method)

2) தேறாத லாப ஏற்பாட்டு முறை (Provision for Unrealised Profit method)

## குத்தகை (lease)

ஒரு சொத்தை குத்தகையில் வழங்கியவருக்கும் (leasor) குத்தகையில் அச் சொத்தை பெற்றவருக்கும் (leasee) இடையில் ஏற்படுகின்ற ஒரு ஒப்பந்தமே குத்தகை எனப்படும். வழக்கமாக குத்தகைக் கட்டணங்கள் வருடாந்தம் இலாபநட்டக் கணக்கில் வரவு வைக்கப்பட்டே அதற்கான கணக்கீட்டு அணுகுமுறை இருந்துவந்தது. இக் கணக்கியல் முறைமை செயற்பாட்டுக் குத்தகை (Operating lease) ஒன்றினைப் பொறுத்தவரை ஏற்புடையதாக இருப்பினும் நிதிக்குத்தகைகளுக்கு (Finance lease) இம்முறையில் கணக்குவைத்தல் பொருத்தமானதல்ல. இவ்விடத்தில் செயற்பாட்டு மற்றும் நிதிக் குத்தகைகளுக்கு இடையிலான வேறுபாட்டை நாம் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

செயற்பாட்டுக் குத்தகை என்பது ஒரு சொத்தை குத்தகையில் பெறுபவர் குறித்த சொத்தின் பயன்தரு பொருளாதார ஆயுட்காலத்தை விடக் குன்றவானதொரு காலப்பகுதிக்கு அதனைப் பெற்று கட்டணங்களைச் செலுத்தி வருவதனைக் குறிக்கும். இங்கு குத்தகை வழங்கியவரே பயன்களையும் (Rewards) அதிக ஆபத்

தையும் (Risk) கொண்டிருப்பார். செயற்பாட்டுக் குத்தகைகள் கணக்கு வைப்பில் அதிக சிக்கல்களைக் கொண்டிருப்பதில்லை. சொத்தை பெற்றவர் வருடாந்தம் கட்டணங்களைச் செலுத்தி அவற்றைத் தன் இலாபநட்டக் கணக்கில் சாட்டுதல் செய்வார். மறுபுறத்தில் வழங்கியவர் சொத்தை தனது நிலையான சொத்தாகப் பாவித்து பெறுமானத் தேய்வினைச் செய்து வருவதுடன் பெறுகின்ற கட்டணங்களை தன் ஏடுகளில் லாபநட்டக் கணக்கில் செலவு வைப்பார்.

நிதிக்குத்தகையல்லாத எல்லாக் குத்தகைகளும் செயற்பாட்டுக் குத்தகைகள் என்றே கொள்ளப்படும். செயற்பாட்டுக் குத்தகைகள் குறுங்காலத்திற்கு உரியவையாகும். எனவே, ஒரே சொத்து ஒன்றன் பின் ஒன்றாக பலருக்குக் குத்தகைக்கு விடப்படுவதாயும் அமையும். இங்கு சொத்தின் திருத்தம், பரிபாலிப்பு என்பவற்றிற்கு குத்தகை வழங்கியவரே பொறுப்பாக இருப்பார்.

மாறாக, நிதிக்குத்தகைகளைப் பொறுத்தவரை சொத்தைப் பெற்றவர் வழங்கியவருக்கு முழுக்கிரயத்தையும், நிதிப் படுத்தலுக்குரிய கட்டணத்தையும் செலுத்துவார். இங்கு சட்டரீதியான உரிமை மாற்றம் நிகழாவிடினும் குத்தகையில் பெற்றவருக்கே (Lessee) அதிக பயன்களும் அதேவேளை ஆபத்தும் காணப்படும். எனவே நிதிக்குத்தகை ஒன்றில் சொத்தைப் பெற்றவர் ஒருபோதும் சட்டஉரிமையை சொத்தின் மீது பெறாத போதிலும் அவரது உரிமைகளும் கடப்பாடுகளும் காசுக் கொள்வனவை மேற்கொண்ட ஒருவரைப் போன்று காணப்படும்.

பொதுவான கணக்கீட்டு முறைகள் நிதிக்குத்தகைக்கும் வாடகைக் கொள்வனவு முறைக்கும் ஒத்தவையாகக் காணப்படும். சிறியளவிலான வேறுபாட்டை மட்டுமே நாம் இவற்றிடையே அவதானிக்கமுடியும். இவற்றிடையேயான வேறுபாடு யாதெனில் சட்டப்பிரகாரம் வாடகைக் கொள்வனவு ஒப்பந்தத்தின் பிரகாரம் சொத்தினைப் பெற்றவர் இறுதிக்கட்டணத்தைச் செலுத்தியதும் சொத்தின் உடமையாளராகின்றார். ஆனால் நிதிக்குத்தகை ஒப்பந்தமொன்றின் பிரகாரம் உரிமை ஒருபோதும் கொள்வோனுக்கு கைமாறுவதில்லை.

நிதிக்குத்தகை யொன்றில் நாம் ஏலவே குறிப்பிட்டபடி எல்லா ஆபத்துக்களும் உடமையின் பயன்களும் (Risks and Rewards of Ownership) குத்தகையில் பெற்றவனையே சென்றடையும். அவர் சொத்தை கொள்வனவு செய்தவராகவும் அக் கொள்வனவை நிதிப்படுத்த குத்தகை வழங்கியோனிடமிருந்து கடன் பெற்றவனாகவும் கொள்ளப்படுவார்.

நிதிக்குத்தகை அல்லது வாடகை கொள்வனவு தொடர்பான கணக்கு வைத்தல் உண்மைத் தன்மையை புலப்படுத்துவதில்லை அல்லது வெளிப்படுத்துவதில்லை எனக் கூறுதலே சரியானதாகும். நிதிக்குத்தகையில் சொத்தொன்றை வழங்கியவரது கையில் குறித்த சொத்து இருப்பதில்லை. மாறாக அவரது வியாபாரத்தில் ஒரு சொத்தாக மீண்டும் பயன்படுத்தப்படவும் போவதில்லை. எனவே, குத்தகையில் சொத்தை வழங்கியவர் அதனைத்தன் சொத்தாக பதிதலும் பொருத்தமானதல்ல.

உண்மையில் தொடர்ச்சியான காசு உட்பாய்ச்சல்களையே அவர் குத்தகையில் பெற்றவரிடமிருந்து எதிர்பார்க்கமுடியும். எனவே, சொத்தானது ஒரு கடன்பட்

டோரே தவிர நிலையான சொத்தல்ல (A debtor rather than a Fixed asset) இவ்வாறே சொத்தை குத்தகையில் பெற்றவரும் நிதிக்குத்தகையை சொத்தொன்றை பெற பயன்படுத்த முடியும். இதனால் இந் நடவடிக்கையின் உள்ளுடன் (Substance) என்னவெனில் அவர் ஒரு நிலையான சொத்தை வாங்கியுள்ளார் என்பதே ஆகும். சட்டப்படி குறித்த சொத்தின் உடமையாளராக அவர் மாறாவிடினும் இதுவே உண்மையாகும். இதனடிப் படையிலேயே சொத்தொன்று நிதிக்குத்தகை அடிப்படையில் அல்லது வாடகைக் கொள்வனவு முறையில் கைமாறும்போது பின் வரும் பதிவுகளைத் தம் ஏடுகளில் தொடர்புபட்ட இரு சாராரும் மேற்கொள்கின் றனர்.

குத்தகைக்கு வழங்கியவனது ஏடுகளில் :

குத்தகைக்கு பெற்றவர் ( கடன்பட்டோன் ) க/கு வரவு
விற்பனைக் க/கு செலவு.

குத்தகைக்குப் பெற்றவனது ஏடுகளில் :

சொத்துக் க/கு வரவு
குத்தகைக்கு வழங்கியவன் க/கு செலவு (பொறுப்பு)

இங்கு பதிவு செய்யப் படவேண்டிய தொகை மூலதனக்கிரயம் (Capital cost) அல்லது சொத்தின் உண்மைப் பெறுமதி (fair value of the asset) ஆகும் - இத் தொகை குத்தகையில் பெற்றவன் காசு நடவடிக்கையொன்றில் செலுத்த வேண்டி யிருக்கும் தொகை எனக் கொள்ளப்படும்.

குத்தகையொன்றில் / வாடகைக்கொள்வனவு ஒன்றில் செலுத்தப்படும் தவணைக் கட்டணம் பின்வரும் இரு விடயங்களை உள்ளடக்கும்:-

a) நிதிப்படுத்தலுக்கான வட்டித்தொகை:
வருடாந்த கட்டணத்தில் உள்ள இக்கூறு கொடுக்க வேண்டிய வட்டி, பெற வேண்டிய வட்டி என இருசாராரா லும் தத்தமது லாபநட்ட க/கில் காட்டப் படும்.

b) மூலதனக் கிரயத்தில் மீளளிக்கப்படும் தொகை:
இக்கூறு குத்தகை பெற்றவரது ஏடுகளில் குத்தகை வழங்கியவனது க/கில் வரவு வைக்கப்படும். குத்தகையில் வழங்கியவரவு ஏடுகளில் இத்தொகை குத்தகை பெற்றவர் க/கில் செலவு வைக்கப்படும்.

## தவணைக்கட்டணங்களது பகிர்வு

வாடகைக் கொள்வனவு, குத்தகை தொடர்பிலான கணக்குப் பதிவுகள் தொடர் பில் அடுத்து நிர்ணயிக்கப்பட வேண்டிய விடயம் யாதெனில் குத்தகை பெற்றவர் செலுத்தும் ஒவ்வொரு தவணைக்கட்டணத்திலும் உள்ள வட்டி, மூலதன மீளளிப்பு தொகைகள் எவ்வளவு என்பதாகும்.

இதற்கென பின்வரும் 3 முறைகள் பின்பற்றப்படலாம்.

1) சமமாகப் பகிரும் முறை (The level Spread method)

2) ஆயுட் கணிப்பீட்டு முறை (The actuarial method)

3) தசமங்களது மொத்த முறை (The sum-of-the-digits method)

சமமாகப்பகிரும் முறையின்படி நிதிப்படுத்தல் தொடர்பான கட்டணங்கள் குத்தகைக்காலம் முழுவதும் சமமாக ஏற்படுகின்றன என்ற எடுகோள் கொள்ளப்படும்.

உதாரணமாக ஒரு சொத்து 30,000/- மெய்ப்பெறுமதி உடையது எனவும் 5 தவணைக்கட்டணங்கள் 7000/- வீதம் செலுத்தும் அடிப்படையில் வாடகைக் கொள்வனவில் அல்லது குத்தகையில் பெறப்படுவதாகவும் கொள்க.

இமமுறையில் மொத்த வட்டித் தொகையான 5000/- (ரூபா 35000 — ரூபா 30000) 5 வருடங்களுக்குப் பரந்து சமமாக ஏற்படுவதாகக் கொள்ளப்பட்டு வருடம் 1000/- வீதம் வருடாந்தக் கட்டணங்களில் உள்ளடங்குவதாக எடுக்கப்படும். எனவே, எஞ்சிய 6000/- வருடாந்தக் கட்டணமொன்றில் அடங்கும் மூலதன மீளளிப்புத் தொகை எனலாம். இம்முறை வியாபார நிலைமைகளை கவனத்திற் கொள்ளாமையால் மிகச் சிறந்ததாகக் கொள்ள முடியாது.

இரண்டாவதான actuarial முறை மிகச் சிறந்ததும் விஞ்ஞான ரீதியானதுமாகும். இம்முறை குத்தகையில் வழங்கிய நிறுவனம் அறவிடும் வட்டியானது அந்நிறுவனம் எதிர்பார்த்த வருமான வீதத்தை நிறுவனம் முதலிட்ட மூலதனத் தொகையால் பெருக்க வரும் தொகைக்குச் சமமானது என்ற எடுகோளின் அடிப்படையில் எழுந்ததாகும்.

ஆரம்ப நிலையில், குத்தகையில் ஈடுபடுத்தப்பட்ட மூலதனம் என்பது சொத்தின் மெய்ப்பெறுமதியிலிருந்து குத்தகை பெற்றவர் செலுத்திய ஆரம்ப வைப்புத் தொகையை கழிக்க வருவதாகும். தவணைக் கட்டணங்கள் செலுத்தப்பட இத்தொகை குறைந்து செல்லும். அதாவது குத்தகையின் ஆரம்ப காலத்தில் வட்டி அதிகமாயும் பின் குறைந்து செல்வதாயும் (மூலதனம் மீளளிக்கப்பட) அமையும் என்பதாகும்.

மூன்றாவது தசமங்களது மொத்த முறை இரண்டாவது முறையின் சராசரியாகும். இம் முறையில் வட்டி வீதத்தைக் கவனிக்காது மொத்த வட்டித் தொகை குத்தகையின் ஆரம்ப நாட்களில் அதிகமாயும் பின் குறைவாயும் பகிரப்படும். இம்முறையின் படி,

a ஒவ்வொரு தவணைக் கட்டணத்திற்கும் ஒரு தசமம் வழங்கப்படும். இறுதிக் கட்டணத்தின் தசமம் ஆக (digit) இருத்தல் வேண்டும்.

இவ்வாறே இறுதிக்கு முந்திய கட்டணத்திற்கு 2 என்றவாறு அமையும்.

மொத்த தசமங்களின் எண்ணிக்கையை கணிக்க $\frac{N(N+1)}{2}$ என்ற சமன்பாடும் பயன்படுத்தப் படலாம்.

இங்கு N = பகிர்வுக் காலங்களது எண்ணிக்கை ஆகும்.

b) அடுத்தது தசமங்கள் (digits) கூட்டப்படும்.

c) பின்னர் ஒவ்வொரு தவணைக் கட்டணத்திலும் அடங்கும் வட்டி கணிப்பிடப்படும்.

$$\frac{\text{குறித்த தவணைக்குரிய தசமம்}}{\text{தசமங்களது மொத்தம்}} \times \text{மொத்த வட்டித் தொகை}$$

என்ற சமன்பாட்டினூடாக இத்தொகை கணிப்பிடப்படலாம்.

உதாரணம்:

1993 ஜனவரி 1ந் திகதி B Ltd. என்ற மதுபானக் கம்பனி போத்தலில் அடைக்கும் யந்திரமொன்றை S Ltd. இடமிருந்து வாடகைக் கொள்வனவு அடிப்படையில் வாங்கியது. இப்பொறியின் காசுவிலை 7710/- ஆகும். வாடகைக் கொள்வனவு விலை 10000/-. ஆரம்ப வைப்பு 2000/-. 4 சமதவணைக் கட்டணங்களில் கடன் மீளளிக்கப்பட வேண்டும். 2290/- என்ற வாடகைக் கொள்வனவு அறவீடுகள் 15% வருடாந்த வட்டியையும் உள்ளடக்கும். பொறியின் பெறுமானத் தேய்வு நேர்கோட்டு முறையில் 20% ஆகும். பொறிக்கு இறுதிப் பெறுமதி இல்லை எனக் கொள்க.

நாம் மேலே நோக்கிய 3 பகிர்வு முறைகளையும் பயன்படுத்தினால் தவணைக் கட்டணத்தில் அடங்கும் வட்டி, மூலதன கூறுகள் எவ்வாறு பகிரப்படும் என்பதை இந்த உதாரணத்தினூடாக விளங்கிக் கொள்வோம்.

a) சமமாகப் பகிரும் முறை

வட்டித் தொகையான 2290/- குத்தகைக் காலம் முழுவதும் சமமாக எழுவதாகக் கொள்ளப்படும். எனவே,

ஒவ்வொரு கட்டணத்திலும் அடங்கும் வட்டித்தொகை

$$\frac{2290}{4} = 572.50 \text{ ஆகும்}$$

எனவே, பகிர்வுகள் பின்வருமாறு அமையும்:

| தவணைகள் | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| வட்டி | 572.50 | 572.50 | 572.50 | 582.50 |
| மூலதன மீளளிப்பு [மீதி] | 1427.50 | 1427.50 | 1427.50 | 1427.50 |
| | 2000.00 | 2000.00 | 2000.00 | 2000.00 |

b) தசமங்களது மொத்த முறையில் ஒவ்வொரு தவணைக்கும் ஒரு தசமம் ஒதுக்கப்படும்.

| தவணைகள் | தசமம் |
|---|---|
| முதலாவது | 4 |
| இரண்டாவது | 3 |
| மூன்றாவது | 2 |
| நான்காவது | 1 |
| | 10 |

அல்லது $\frac{N(N+1)}{2}$ என்ற

என்ற சமன்பாட்டைப் பயன்படுத்தின் இங்கு N = 4 என்பதால்

$$\frac{4(4+1)}{2} = 10$$

எனவே, 2290/- வட்டித்தொகை பின்வருமாறு பகிரப்படும்.

| | | |
|---|---|---|
| முதற் தவணை | 2290 × 4/10 | = 916 |
| இரண்டாம் தவணை | 2290 × 3/10 | = 687 |
| மூன்றாம் தவணை | 2290 × 2/10 | = 458 |
| நான்காம் தவணை | 2290 × 1/10 | = 229 |
| | | 2290 |

இந்த அடிப்படையில் மூலதன, வட்டி தொகையானது பகிர்வு வருமாறு:

| தவணைகள் | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| வட்டி | 916 | 687 | 458 | 229 |
| மூலதன மீளளிப்பு | 1084 | 1313 | 1542 | 1771 |
| | 2000 | 2000 | 2000 | 2000 |

c) Acturial method:

வட்டியானது இம்முறையில் 15% படி ஒவ்வொரு வருட ஆரம்பமீதியிலும் கணிப்பிடப்படும். இங்கு வருடாந்தம் மூலதன நிலுவையானது தவணைக்கட்டணத்திலுள்ள மூலதனக்கூறினால் குறைந்து செல்வதனைக் காணலாம்.

உதாரணத்தில் 1-1-93ல் செலுத்தவேண்டிய மூலதன மீதி 5710/- ஆகும்.

(7710 (மெய்ப் பெறுமதி) — 2000) ஆரம்பவைப்பு

இம்முறையில் பகிர்வுகள் பின்வருமாறு அமையும்.

(தவணைக்கட்டணம்)

| | மொத்தம் = | மூலதனம் + | வட்டி |
|---|---|---|---|
| 1.1.93 மூலதன மீதி | | 5710 | |
| முதல் தவணை [வட்டி 5710 × 15%] | 2000 | 1144 | 856 |
| | | 4566 | |
| இரண்டாம் தவணை [வட்டி 4566 × 15%] | 2000 | 1315 | 685 |
| | | 3251 | |
| மூன்றாந் தவணை [வட்டி 3251 × 15%] | 2000 | 1512 | 488 |
| | | 1739 | |
| நான்காம் தவணை [வட்டி 1739 × 15%] | 2000 | 1739 | 261 |
| 1.1.97ல் மூலதன மீதி | 8000 | — | 2280 |

நிறுவனங்கள் தமது வசதிக்கேற்ப மேற்கூறிய 3 முறைகளுள் ஏதோவொரு முறையில் வருடாந்தக் கட்டணத்தில் அடங்கும் மூலதன, வட்டிக் கூறுகளை பகிர்ந்து கொண்டு, பின்னர் அத்தொகைகளைத் தமது கணக்குகளில் பதிவு செய்கின்றன.

*References:*

1) C. I. M. A. Financial Accounting Pack, p. 292 Credit Sale, Hire-purchase and Leassng.

2) Spicer and pegler's Book keeping and Accounts, Paul Gee, Nineteenth Edition, Chapter 10: Leasing and Hire-purchase Accounting.

---

இலங்கை வங்கியானது தனது கடனட்டைப் பாவணையை [சீபாங்காட்] அதிகரிக்கும் நோக்குடன் அவ்வட்டைகளை வைத்திருப்பவர்கள் கணக்குகளை திருப்திகரமாக வைத்திருப் பினும், பயன்படுத்துபவர்களையும் சேர்த்து சீட்டிழுப்பின் மூலம் அதிஷ்டசாலிகளை தெரிவு செய்து வெகுமதிகளை வழங்கவுள்ளது.

# அறவிட முடியாக் கடனும் அறவிட முடியாக் கடன் ஒதுக்கலும் தொடர்பான செம்மையாக்கல்கள்

ஒரு நிறுவனம் இன்னோர் நிறுவனத்துக்கு கடனுக்கு பொருட்களை விற்பனை செய்யும்போது அந்நிறுவனத்துக்கு பொருட்களை கொள்வனவு செய்த நிறுவனம் வியாபாரக் கடன்பட்டோனாக கருதப்படும்.

உதாரணம்:- சாந்தி கம்பனி கவிதா கம்பனிக்கு பொருட்களை விற்பனை செய்தால் சாந்தி கம்பனிக்கு கவிதா கம்பனி கடன்பட்டோன் ஆகும்.

## கடன்பட்டோரும் அறவிடமுடியாக் கடனும்

வியாபார கடன்பட்டோரில் நிச்சயமாக பெற்றுக் கொள்ள முடியாத தொகையினையே அறவிடமுடியாக் கடன் என்பர். இதனை கெட்டகடன், மீளாக்கடன், வராக்கடன் எனவும் அழைப்பர். குறித்த கடன்பட்டோர் நிதியின் அடிப்படையில் முறிவுற்றவராகக் கருதப்படும் போதே அவரிடம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய தொகை நிச்சயமாக பெற்றுக் கொள்ள முடியாது. இந்நிலையிலேயே அக்கடன் நட்டக்கடனாக பதிவளிப்பர். இதன் போது நாட்குறிப்பு.

அறவிட முடியாக் கடன் கணக்கு – வரவு
கடன்பட்டோர் கணக்கு – செலவு

உதாரணம்:- புஸ்பா கம்பனி ராணி கம்பனியின் ஏட்டில் 30000 ரூபாவாக கடன்பட்டோர் மீதியாக காணப்பட்டது. இத்தொகையில் 2000 ரூபா அறவிடமுடியாக் கடனாக பதிவளிக்க,

அறவிடமுடியாக் கடன் கணக்கு வரவு – 2000 ரூபா
கடன்பட்டோர் கணக்கு செலவு – 2000 ரூபா

இதில் அறவிடமுடியாக் கடன் 2000/- இலாபநட்டக் கணக்கில் நட்டமாக பரிக்கப்படுவதுடன், கடன்பட்டோரிலிருந்து இத்தொகையை கழிக்க வேண்டும்.

## மீளப்பெற்ற அறவிடமுடியாக் கடன் தோன்றல்.

பா. இரவீந்திரன்

ஆண்டு 13F
வர்த்தகப் பிரிவு

அறவிட முடியாக்கடன் என பதிவளிக்கப்பட்ட ஒரு வியாபாரக் கடன் திருப்பி பெற்றுக் கொள்ளுதல் மீளப்பெற்ற அறவிட முடியாக் கடன் எனலாம். நிறுவனத்துக்கு மீளப்பெற்ற அறவிட முடியாக் கடன் ஓர் இயக்கா வருமானம் ஆகும். இதன் போது நாட்குறிப்பு,

A காசினை பெற்றுக் கொள்ளும்போது.

வங்கி அல்லது காசுக்கணக்கு – வரவு

கடன்பட்டோர் கணக்கு – செலவு

B மீளப்பெற்ற அறவிடமுடியாக் கடனாக பதியும் போது

கடன்பட்டோர் கணக்கு – வரவு

மீளப்பெற்ற அறவிடமுடியாக் கடன்கணக்கு – செலவு

C மீளப்பெற்ற அறவிடமுடியாக் கடனை இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றிய போது

மீளப்பெற்ற அறவிடமுடியாக் கடன்கணக்கு – வரவு

இலாபநட்டக் கணக்கு – செலவு

உதாரணம்:-

31-12-92 இல் உள்ளவாறான பரீட்சைமீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| கடன்பட்டோர் | 50 000 | |
| அறவிடமுடியாக் கடன் | 2 000 | |

செம்மையாக்கல்:-

நிறுவனத்தின் அறவிடமுடியாக் கடனில் 1000 ரூபா மீளப் பெறப்பட்டுள்ளது. இதனை பதிவளிக்க,

A காசினை பெற்றுக் கொள்ளும்போது

காசுக்கணக்கு வரவு – 1000 ரூபா

கடன்பட்டோர் கணக்கு செலவு – 1000 ரூபா

B மீளப்பெற்ற அறவிடமுடியாக் கடனாக பதியும் போது

கடன்பட்டோர் கணக்கு வரவு – 1000 ரூபா

மீளப்பெற்ற அறவிடமுடியாக் கடன் கணக்கு செலவு – 1000 ரூபா

C மீளப்பெற்ற அறவிட முடியாக் கடனை இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றிய போது

மீளப்பெற்ற அறவிடமுடியாக் கடன் கணக்கு வரவு – 1000 ரூபா

இலாப நட்டக் கணக்கு செலவு – 1000 ரூபா

இங்கு மீளப்பெற்ற அறவிடமுடியாக் கடன் 1000 ரூபா இலாப நட்டக் கணக்கில் இயக்கா வருமானமாக பதிவளிக்கப்படுவதுடன் காசுடன் இத்தொகையினை கூட்டி காட்டப்படுதல் வேண்டும்.

## ஐயக்கடன் ஏற்பாடு செய்தல்.

வியாபார கடன் பட்டவரிடமிருந்து பெறவேண்டிய பணத்தை பெறுவது குறித்து நோக்கும் போது அதைப் பெற்றுக்கொள்வது சந்தேகமாக இருப்பின் அதற்காக செய்யப்படும் ஒரு ஏற்பாடே ஐயக்கடன் ஏற்பாடு ஆகும். இதனை நிறுவனம் செய்வதற்கு இரு நோக்கம் உண்டு.

i) எதிர் காலத்தில் அறவிடமுடியாக் கடன் ஆகிய தொகையை முன்கூட்டியே நட்டமாக காட்டுதல். இதனை முன் எச்சரிக்கை கருதுகோள் வற்புறுத்துகிறது.

ii) வியாபார கடன்பட்டோரிடமிருந்து பெற வேண்டிய நிதியை சரியாக காட்டுதல்.

ஐயக்கடன் ஏற்பாடு செய்யும்போது கணக்கீட்டு பதிவு வருமாறு

முறை I நட்டக் கடன் கணக்கு – வரவு
ஐயக்கடன் ஏற்பாட்டு கணக்கு – செலவு

அல்லது

முறை II இலாப நட்டக் கணக்கு – வரவு
ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு – செலவு

உதாரணம்:- கௌரி கம்பனியின் பரீட்சை மீதி 20000 ரூபா கடன்பட்டோர் மீதியாக காட்டியது இக் கடன்பட்டோரில் 10% இனை ஐயக்கடன் ஏற்பாடு செய்க.

இலாப நட்டக் கணக்கு வரவு – 2000 ரூபா
ஐயக்கடன் ஏற்பாட்டு கணக்கு செலவு – 2000 ரூபா

இங்கு இத்தொகை இலாப நட்டக் கணக்கில் நட்டமாக பரிக்கப்படுவதுடன் ஐந்தொகையில் கடன்பட்டோரில் இருந்து கழித்துக் காட்டப்பட வேண்டும்.

## ஐயக்கடன் ஏற்பாட்டினை உயர்த்துதல் அல்லது அதிகரித்தல்.

வருட தொடக்கத்தில் இருக்கும் ஐயக்கடன் ஏற்பாடு மீதியிலும் பார்க்க வருட இறுதியில் உள்ள ஐயக்கடன் ஏற்பாட்டு மீதி உயர்வாக இருப்பின் அவ் வித்தியாசத்தால் ஐயக்கடன் ஏற்பாடு உயர்த்தப்படல் வேண்டும். இதன் போது நாட்குறிப்பு.

இலாபநட்டக் கணக்கு – வரவு
ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு – செலவு

உதாரணம்:-

31-12-92 இல் பரீட்சை மீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| கடன்பட்டோர் | 80 000 | |
| ஐயக்கடன் ஏற்பாடு (01-01-1992) | | 2 000 |



வரவு

### செம்மையாக்கல்:-

நிறுவனத்தின் கடன்பட்டோரில் ஐயக்கடன் ஏற்பாட்டை 5% ஆக சீராக்குக

இலாப நட்டக் கணக்கு வரவு – 2000 ரூபா

ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு செலவு - 2000 ரூபா

இங்கு பற்றாக்குறை ஐயக்கடன் ஏற்பாட்டுத் தொகையான 2000 ரூபா இலாப நட்டக் கணக்கில் நட்டமாக பரிக்கப்படுவதுடன், ஐயக்கடன் ஏற்பாட்டு மொத்த தொகை 4000 ரூபா ஐந்தொகையில் கடன்பட்டோரிலிருந்து கழித்துக் காட்டப்பட வேண்டும்.

### ஐயக்கடன் ஏற்பாட்டை குறைத்தல்.

வருட தொடக்கத்தில் இருக்கு ஐயக்கடன் ஏற்பாட்டு மீதியிலும் பார்க்க வருட இறுதியில் ஐயக்கடன் ஏற்பாட்டு மீதி குறைவாக இருப்பின் அவ்வித்தியாசத்தால் ஐயக்கடன் ஏற்பாடு குறைக்கப்பட வேண்டும். இதன்போது நாட்குறிப்பு.

ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு – வரவு

இலாப நட்டக் கணக்கு – செலவு

உதாரணம்:-

31-12-92 இல் உள்ளவாறான பரீட்சை மீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| கடன்பட்டோர் | 100 000 | |
| ஐயக்கடன் ஏற்பாடு (1-1-92) | | 5 000 |

### செம்மையாக்கல்.

கடன்பட்டோரில் ஐயக்கடன் ஏற்பாட்டை 3% வீதமாக சீராக்குக.

ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு வரவு – 2000 ரூபா

இலாப நட்டக் கணக்கு செலவு – 2000 ரூபா

இங்கு மிகை ஐயக்கடன் ஏற்பாட்டுத் தொகையான 2000 ரூபா இலாப நட்டக் கணக்கில் வருமானமாக பரிக்கப்படுவதுடன் ஐயக்கடன் ஏற்பாட்டு மொத்தத் தொகையான 3000 ரூபா ஐந்தொகையில் கடன்பட்டோரிலிருந்து கழித்துக் காட்டப்பட வேண்டும்.

### ஐயக்கடன் ஏற்பாட்டிலிருந்து அறவிடமுடியாக் கடனை பதிவளித்தல்.

ஐயக்கடன் ஏற்பாடாக கருதப்பட்டு வந்த கடன்பட்டோன் முறிந்தவன் என நிச்சயிக்கப்படும்போது அத் தொகையே அறவிடமுடியாக் கடனாக பதிவளிக்கப்படும். இதற்கான நாட்குறிப்பு பதிவு.

ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு – வரவு

கடன்பட்டோன் கணக்கு – செலவு

31-12-92 இல் உள்ளவாறான பரீட்சைமீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| கடன்பட்டோன் | 60 000 | |
| ஐயக்கடன் ஏற்பாடு (1-1-92) | 4 000 | |

செம்மையர்க்கல்.

ஐயக்கடன் ஏற்பாடாக கருதப்பட்டு வந்த ராஜினி முறிந்தவள் ஆக நிச்சயிக் கப்பட்டதால் அவளது தொகையான 500 ரூபா அறவிடமுடியாக் கடனாக பதியப் பட்டது.

ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு வரவு - 5000 ரூபா
கடன்பட்டோர் கணக்கு செலவு - 5000

இங்கு ராஜினியின் 500 ரூபா ஐயக்கடன் ஏற்பாட்டிலிருந்து கழிக்கப்படுவதுடன் கடன்பட்டோரிலிருந்தும் இத்தொகை கழிக்கப்பட வேண்டும்.

ஐயக்கடன் ஏற்பாட்டிலிருந்து காசினை பெறுதல்.

ஐயக்கடன் ஏற்பாடாக கருதப்பட்டு வந்த கடன்பட்டோன் அத்தொகையை மீள செலுத்தும்போது அதனை ஐயக்கடன் ஏற்பாட்டிலிருந்து காசினை பெறுதல் எனலாம். இதற்கான கணக்கீட்டு பதிவு

A கடன்பட்டோரிடமிருந்து காசினைப் பெறுதல்

காசு அல்லது வங்கிக் கணக்கு - வரவு
கடன்பட்டோர் கணக்கு - செலவு

B மீளப்பெற்ற ஐயக்கடன், ஐயக்கடன் ஏற்பாடாக பதிவளிக்கப்பட்டபோது

ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு - வரவு
மீளப்பெற்ற ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு - செலவு

C மீளப்பெற்ற ஐயக்கடன் ஏற்பாட்டை இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றும் போது

மீளப்பெற்ற ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு - வரவு
இலாப நட்டக் கணக்கு - செலவு

உதாரணம்:-

31-12-92 இல் உள்ளவாறான பரீட்சைமீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| கடன்பட்டோர் | 200 000 | |
| ஐயக்கடன் ஏற்பாடு (1-1-92) | | 10 000 |

செம்மையாக்கல்:-

ஐயக்கடன் ஏற்பாடாக கருதப்பட்டு வந்த சுகிர்தா தனது தொகையான 1500 ரூபாவை காசாக செலுத்தினார்.

A கடன்பட்டோரிடமிருந்து காசினை பெற்றுக் கொள்ளும்போது

காசு அல்லது வங்கிக் கணக்கு - வரவு, 1500 ரூபா

கடன்பட்டோர் கணக்கு - செலவு, 1500 ரூபா

B மீளப்பெற்ற ஐயக்கடன் ஏற்பாடாக பதிவளிக்கப்பட்டபோது

ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு - வரவு 1500 ரூபா

மீளப்பெற்ற ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு செலவு 1500 ரூபா

C மீளப்பெற்ற ஐயக்கடன் ஏற்பாட்டை இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றும் போது

மீளப்பெற்ற ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு - வரவு - 1500 ரூபா

இலாப நட்டக் கணக்கு - செலவு - 1500 ரூபா

இங்கு சுகிர்தாவிடமிருந்து பெறப்பட்ட தொகை 500 ரூபா காசுடன் கூட்டப்பட்டு கடன்பட்டோரிலிருந்து கழித்து காட்டப்படுவதுடன் இலாப நட்டக் கணக்கில் இலாபமாக பரிக்கப்படுவதுடன் ஐயக்கடன் ஏற்பாட்டிலிருந்து கழித்துக் காட்டப்பட வேண்டும்.

☐

பெல்வத்தை சீனித் தொழிற்சாலையின் நிர்வாகமானது சீனாவின் "டொங் இன்டர்நேஷனல் எக்கொனமிக்" நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலையின் முதலீட்டாளர்களாக இலங்கை அரசு (49%), பொது மக்கள் (15%), கெரி இஞ்சினியரிங் கம்பனி (15%), காமன்வெல்தி டிவலப்மென்ட் கம்பெனி (15%), பூக்கர் இன்டர்நேஷனல் எக்கொனமிக் (6%) உள்ளனர்.

# தென்னாசிய நாடுகளின் நகராக்கப் பிரச்சினைகள்

புவியியல் ரீதியாக ஏனைய ஆசியப் பிரதேசங்களிலிருந்து வேறுபடுத்தப்பட்டிருக்கும் தென்னாசியா பௌதீக பண்பாட்டு அம்சங்களில் வேற்றுமையில் ஒற்றுமைத் தன்மை கொண்டமைந்த பிரதேசமாகக் காணப்படுகின்றது. சார்க் அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் இந்தியா, வங்காள தேசம், பாகிஸ்தான், நேபாளம், இலங்கை, பூட்டான், மாலைதீவு ஆகிய ஏழு நாடுகள் தென்னாசியப் பிரதேசத்துள் அடங்கும் நாடுகளாகும். இந்நாடுகள் வரலாற்றுக் காலங்களில் அதிகரித்த குடித்தொகையினையும், நகராக்க வளர்ச்சியினையும் கொண்ட நாடுகளாகவிருந்துள்ளமைக்கு பல்வேறு வரலாற்று, அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. குறிப்பாக இந்தியாவில் மொகஞ்சதாரோ, ஹரப்பா பகுதிகளில் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலப்பகுதிகளில் நகராக்க வளர்ச்சி இருந்துள்ளமை பற்றி ஆய்வாளர்கள் தெளிவுபடத் தெரிவித்துள்ளனர். அதேபோலவே சிங்கள இதிகாசமான மகாவம்சத்தில் கி. மு. 400ஆம் ஆண்டில் அனுராதபுர நகரத்தினை துப்பரவு செய்வதற்கு 1000 தொழிலாளர்கள் காணப்பட்டனர் எனத் தெரிவிக்கின்றது. வரலாற்றுக் காலங்களில் முடியாட்சியினை உறுதிப்படுத்துவதற்கே இராணுவ மயப் படுத்தப்பட்ட மையங்களும் (Armed rule Centres) சமூக, பொருளாதாரப் பண்புகளை மையப்படுத்தப்பட்ட மையங்கள் குறிப்பாக வர்த்தக மையங்களும் ஆட்சிக்கான தலைமைத்துவத்தை கட்டியெழுப்பும் போது உருவான மையங்களும் நகரங்களாக விருத்தி பெற்றன எனலாம். குறிப்பாக அனுராதபுரம், மாகம, ஐதராபாத், தஞ்சாவூர், டில்லி போன்ற நகரங்களின் வரலாற்று விருத்தியினைக் கருத்திற் கொள்ளும்போது இதனை அறியமுடிகின்றது. தென்னாசிய நாடுகளின் முடியாட்சியின் விளைவாக வளர்ச்சியடைந்த நகரங்கள் மன்னனின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருந்துள்ளன என்பதை வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன. ஆனால் ஐரோப்பியர் வருகையினைத் தொடர்ந்து அவர்கள் தம் ஆட்சியினை நிலைநிறுத்தும் பொருட்டு துறைமுகங்கள் சார்ந்த கோட்டைகள் அமைக்கப்பட்டு பாதுகாப்பான நகரங்களை நிர்மாணித்தனர். இதற்கு கோவா, கள்ளிக்கோட்டை, யாழ்ப்பாணம், காலி, கோட்டை, போன்ற நகரங்களைக் குறிப்பிடலாம்,

**கலாநிதி கா. குகபாலன்**

சிரேஷ்ட விரிவுரையாளர்,
புவியியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்

ஆங்கிலேய வருகையுடன் அவர்கள் தம் பொருளாதார, பண்பாட்டு நோக்கங்களுக்கு ஏற்றவாறு செயற்பட்டதன் விளைவாக அவ்வப்பண்புகளூடாக நகரங்கள் அபிவிருத்தி பெற வாய்ப்பு ஏற்பட்டது. கைத்தொழில், வர்த்தக, விவசாயப் புரட்சிகள், போக்குவரத்து மற்றும் சாதனங்களின் முன்னேற்றமும் அதிகரிப்பும் தொடர்புச் சாதனங்களின் வளர்ச்சி, கல்வி மையங்களின் விருத்தி, அரசியல் காரணிகள், குடித்தொகை வளர்ச்சி, பாதுகாப்பு

போன்ற பல காரணிகள் நகராக்கத்தைத் தூண்டுவனவாக அமைந்திருந்தன. தென்னாசிய நாடுகளில் மேற்குறித்த பண்புகளைக் கொண்ட நகரங்கள் ஐரோப்பியர் ஆட்சிக்காலங்களில் இருந்துள்ளன. மேற்படி நாடுகள் சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து குடித்தொகை வளர்ச்சியினாலும் அதிகரித்த இடப்பெயர்வினாலும் நகரங்களின் தோற்றமும் வளர்ச்சியும் விரிவுபெற்று பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவித்து மக்களின் வாழ்வுகளும் சுற்றுப்புறச் சூழலை பராமரித்தலிலும் பலத்த சவாலாக விளங்கி வருவது தவிர்க்கமுடியாததாகிவிட்டது. புதிய நகரங்களின் வளர்ச்சிக்குரிய பண்புகளில் பொதுச் சேவைகளின் விருத்தி, பல்வேறு வகைப்பட்ட நடவடிக்கைகளின் அமைப்புக்கள், விசேடித்த தகைமைகள் ஆகியனவும் காரணங்களாக அமைந்துள்ளன.

பொதுவாக உலகில் நகரங்களுக்கான வரைவிலக்கணங்கள் நாடுகளுக்கு நாடு வேறுபட்டமைந்துள்ளது. இந்தியாவில் நகரம் என்றால் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். நகரமானது மாநகர பிரதேசமாக அல்லது பட்டினக் கமிட்டி அல்லது அடையாளம் காணக்கூடிய கமிட்டியாக அல்லது படையினர் வாழ்கின்ற பிரதேசமாக இருந்தால் அப்பிரதேசம் நகரமாகும் எனவும் அத்துடன் குடித்தொகை அடர்த்தி சதுரமைலுக்கு 1000க்கு குறையாமல் இருப்பதுடன் 5000 மக்களுக்கு அதிகமாக வாழுமிடமாகவும் 75 சதவீதத்துக்கு மேற்பட்டோர் விவசாயம் சாராத தொழில்களில் ஈடுபாடு கொண்டவர்களாக இருத்தல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் நகரங்களுக்கான வரைவிலக்கணம் காலத்துக்கு காலம் மாற்றமுற்று வந்துள்ளது. 1871—1901ம் ஆண்டுகளில் மாநகர, நகர சபைப் பிரதேசங்கள் நகரங்களாக கருதப்பட்டன. 1950களின் பின் மாநகர, நகர, பட்டின சபைப் பிரதேசங்கள் நகரங்களாக கணிக்கப்பட்டன. நேபாளத்தில் 10000க்கு மேற்பட்ட மக்கள் வாழ்வதுடன் நகரப்பண்புகளுடன் தொடர்புடைய மக்கள் வாழ்வார்களாயின் நகரப்பிரதேசமாகக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகின்றது. பாகிஸ்தான், வங்காள தேசம், நேபாளம் ஆகிய நாடுகள் பெரும்பாலும் இந்தியாவின் வரைவிலக்கணத்தை ஒத்துக் காணப்படுகின்றது. தொகுத்து நோக்கின் கிராமத்தில் இருந்து நகரத்தினை பிரித்தறிவதற்கு நிர்வாக அந்தஸ்து, குடித்தொகையளவு, உள்ளூராட்சியின் வடிவம், நகரப்பாங்கு, பொருளாதார நடவடிக்கைப் பாங்கு என்பனவே முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது.

## குடித்தொகைப் பண்புகளும் பொருளாதார நிலையும்

தென்னாசிய நாடுகள் பொருளாதார ரீதியில் வறிய நாடுகளாகக் காணப்படுகின்றன. இத்தகைய வறிய நிலைக்கு இந்நாடுகளின் பொருளாதார, சமூக, பண்பாட்டு நிலைமைகளே காரணங்களாக அமைந்துள்ளன. இப் பிரதேச மக்களின் பொருளாதார வளமானது பெருமளவிற்கு விவசாயத்தின் மூலமே கிடைக்கப்பெறுவதுடன் மக்களில் பெரும்பாலானோர் பாரம்பரிய விவசாயத்திலும் அதனோடிணைந்த தொழில்களிலுமே ஈடுபாடு கொண்டுள்ளனர். கைத்தொழிற் துறையானது மிகவும் நலிவுற்றதாக காணப்படுகின்றது. எனவே பொருளாதார ரீதியில் நச்சுவட்டத்துள் உழலும் நாடுகளாகவிருக்கின்றன. குடித்தொகைப் பண்புகளில் காணப்படுகின்ற பாதக நிலையே பொருளாதார, சமூக, பண்பாட்டுப் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன என்றால் மிகையாகாது. இதனை அட்டவணை 1 தெளிவுபடுத்துகின்றது. பொதுவாக தென்னாசிய நாடுகளில் அதிகரித்த குடித்தொகை வளர்ச்சிக்கு பிறப்பு வீதத்துக்கும் இறப்பு வீதத்துக்கும்

அட்டவணை 1

தென் ஆசியாவின் குடித்தொகைப் பண்புகள்

| நாடுகள் | நிலப்பரப்பு (000) ச. கி. மீ. | குடித்தொகை (மில்.) (1987) | அடர்த்தி (ச. கி. மீ.) | பிறப்பு வீதம் (1000) | இறப்பு வீதம் (1000) | வாழ்க்கை எதிர்பார்ப்பு | தங்கி வாழ்வோர் வீதம் | தலைக்குரிய வருமானம் டொலர் | குடித்தொகை எதிர்வுகூறல் (மில்லியன்) (2000 ஆண்டில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இந்தியா | 3288 | 783.1 | 247 | 29.6 | 11.5 | 56 | 43.6 | 260 (1983) | 941.0 |
| வங்காளதேசம் | 144 | 105.3 | 731 | 42.7 | 16.3 | 50 | 49.6 | 140 (1986) | 139.7 |
| பாகிஸ்தான் | 804 | 103.2 | 133 | 41.4 | 14.8 | 52 | 51.9 | 390 (1983) | 137.7 |
| நேபாளம் | 141 | 17.6 | 119 | 42.2 | 16.0 | 53 | 47.1 | 170 (1983) | 23.2 |
| இலங்கை | 66 | 16.4 | 249 | 23.9 | 6.2 | 70 | 41.9 | 361 (1984) | 19.8 |
| பூட்டான் | 47 | 1.4 | 284 | 37.8 | 17.3 | 47 | 45.3 | 140 (1984) | 1.7 |
| மாலைதீவு | 0.3 | 0.2 | 654 | 49.5 | 8.8 | 58 | 48.3 | 470 (1985) | 0.28 |

*Source:* State Man's Year Book, 1988/89.

இடையில் காணப்படுகின்ற வேறுபாடேயாகும். மருத்துவ, சுகாதார வசதிகளின் விரிவாக்கத்தினால் இறப்புக்களைக் கட்டுப்படுத்தும் அதே வேளை பிறப்புக்கள் தொடர்ச்சியாக ஏற்ற இறக்கத்துடன் காணப்படுகின்றது. அதேவேளை இலங்கை தவிர்ந்த ஏனைய நாடுகளின் வாழ்க்கை எதிர்பார்ப்பு 60 வயதிற்கு குறைவாகவேயுள்ளது. தங்கி வாழ்வோர் வீதமும் ஏறத்தாழ அரைப்பங்கினராகவிருக்கின்றனர். அத்துடன் குடித்தொகையின் இரட்டிப்பாக்கம் 25–30 வருடங்களாகும். எனவே பொருளாதார ரீதியில் நலிவுற்ற மக்களிடையே விரைவாக வளர்ச்சியடைந்து வரும் குடித்தொகையானது பல்வேறு பொருளாதார, சமூகப் பிரச்சினைகளை உருவாக்குவதுடன் பெருமளவிற்கு சேவை மையங்களாகக் காணப்படும் நகரங்களிலும் பிரச்சனைகளை தோற்றுவித்து புவியியற் சமபலமின்மையை உருவாக்கி வருவதைக் காண முடிகின்றது.

### தென்னாசியாவில் நகரங்கள்:

விவசாயப் பொருளாதாரத்தினை முதன்மைப்படுத்துகின்ற தென்னாசியாவில் பல்வேறு செயற்பாடுகளுடன் கூடிய நகரங்கள் காணப்படுகின்றன. மொத்தக் குடித்தொகையில் 21.0 சதவீதமான மக்கள் நகரங்களில் வாழ்ந்து வருகின்றனர். 1980ம் ஆண்டுக் கணிப்பீட்டின்படி 185 மில்லியன் மக்கள் நகரவாசிகளாவர். அரைமில்லியனுக்கு மேல் மக்கள் வாழும் நகரங்களைப் பொறுத்தவரை பாகிஸ்தான், வங்காள தேசம், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் முறையே 52, 51 47 16 சதவீதமாகவுள்ளது. அரை மில்லியனுக்குமதிகமான நகரங்கள் இந்தியாவில் 36ம், பாகிஸ்தானில் 7ம், வங்காள தேசத்தில் 3ம், இலங்கையில் ஒன்றுமாகவுள்ளது. நகரக் குடித்தொகை வளர்ச்சி வீதமானது வங்காள தேசத்தில் 6 சதவீதமாகவும், பாகிஸ்தான், நேபாளம், பூட்டானில் 4 சதவீதமாகவும், இலங்கை இந்தியாவில் 3 சதவீதமாகவும் காணப்படுகின்றது. நகரக்குடித்தொகை வளர்ச்சி வீதம் அதிகரிப்பதற்கு இயற்கை அதிகரிப்புடன் உள் இடப்பெயர்களின் அதிகரிப்பும் இணைந்துள்ளது.

கமிலிறொசியர் என்பவரின் பாகுபாட்டின்படி தென்னாசியாவில் நுகர்வு நகரங்கள், உற்பத்தி நகரங்கள், பல்வகைப்பட்ட நடவடிக்கைகள் கொண்ட நகரங்கள், களஞ்சியப்படுத்தலுக்கும் விநியோகத்திற்குமான நகரங்கள், நிதியுடன் கூடிய நகரங்கள், இராணுவத்திற்குரிய நகரங்கள், பாதை நகரங்கள், உவப்பான காலநிலை கொண்ட நகரங்கள், நூதனசாலை நகரங்கள், பல்கலைக்கழக நகரங்கள் எனப் பிரித்துள்ளனர். எல். ஏ. ஹெல்பேட் என்பவர் உற்பத்தி மையங்கள், வர்த்தக மையங்கள், அரசியல் தலைநகரங்கள், கலாச்சார மையங்கள், பன்முகப்படுத்தப்பட்ட மையங்கள், புகலிட நகரங்கள் என வகுத்துள்ளார். மேற்குறித்த நகரங்களை தென்னாசியாவில் அடையாளம் காண முற்படின் பின்வரும் நகரங்களைக் கூறலாம்

நுகர்வு நகரங்கள்:

கொழும்பு, திருச்சி, லாகூர், லலித்பூர், ராஜ்சாகி.

உற்பத்தி நகரங்கள்:

காங்கேசன்துறை, தஞ்சாவூர், ஜாம்செட்பூர், பெற்சலாபாட், நாராயணகஞ்.

பல்வகைப்பட்ட நடவடிக்கைகளைக் கொண்ட நகரங்கள்.

பம்பாய், கராச்சி, சிட்டாக்கொங், திருகோணமலை.

களஞ்சியப்படுத்தலுக்கும் விநியோகத்திற்குமான நகரங்கள்:

கல்கத்தா, விசாகப்பட்டினம், கராச்சி, கொழும்பு.

நிதியுடன் கூடிய நகரங்கள்:

தலைநகரங்கள்.

இராணுவத்திற்குரிய நகரங்கள்:

விசாகப்பட்டினம், கோவா.

பாதை நகரங்கள்:

விழுப்புரம், ராகம, திருச்சி,

உவப்பான காலநிலை நகரங்கள்:

சிம்லா, காஷ்மீர், நுவரெலியா,

மேலும் தென்னாசிய நாடுகளின் நகராக்கப்பண்புகளை நாடுகளடிப்படையில் நோக்குதல் சிறப்புடைத்து.

இந்தியா:

நகரத்துக்கான வரைவிலக்கணத்தினடிப்படையில் இந்தியாவில் 1987ம் ஆண்டில் 3949 நகரங்கள் காணப்பட்டிருந்தன. மாநிலங்கள் ரீதியாக நோக்கும்போது உத்தரப்பிரதேசம் (704) தமிழ்நாடு (434) மத்திய பிரதேசம் (327) மகாராஷ்டிரா (307) இல் அதிக நகரங்களும் நாகலாந்து (7) சிக்கிம் (8) திரிபுரா (10)இல் குறைவான நகரங்களும் அமைந்துள்ளன. நாட்டின் மொத்தக் குடித்தொகையில் 25.5 சதவீதத்தினர் நகர மக்களாவர். அத்துடன் 12 நகரங்களில் ஒரு மில்லியனுக்கதிகமான மக்கள் வாழ்ந்து வருகின்றனர். கல்கத்தா, பம்பாய், டெல்லி, சென்னை, பெங்களூர், ஹைதராபாத், அகமதபாத், கான்பூர், பூனா, நாக்பூர், லக்னோ, ஜெய்பூர் ஆகிய நகரங்களே அவையாகும். கல்கத்தா (9166000) பம்பாய் (8243000) ஆகிய இரு நகரங்கள் மிகவிரைவில் ஒரு கோடி மக்களே வாழும் நகரங்களாக வளர்ச்சி பெறவிருக்கின்றன. அத்துடன் நாட்டின் பெரும்பாலான சிறிய, நடுத்தர நகரங்கள் சேவை மையங்களாக விருத்தி பெற்று வளர்ச்சியடைந்துள்ளன எனலாம்.

வங்காள தேசம்:

1987ம் ஆண்டில் வங்காள தேசத்தின் குடித்தொகையில் 20.9 சதவீதமான மக்கள் நகரங்களில் வாழ்ந்துள்ளனர். டாக்கா, சிட்டாகொங், குல்னா ஆகிய நகரங்களில் 500000ற்குமதிகமான மக்கள் வாழ்கின்றனர். தலைநகரமான டாக்கா (4470000) மிகவிரைவில் ஐந்து மில்லியன் மக்கள் வாழும் நகரமாக வளர்ச்சி பெறவுள்ளது. மேற்குறித்த மூன்று நகரங்களுடன் ராஜ்சாகி நகரமும் குடித்தொகையைப் பொறுத்தவரை வளர்ச்சி பெற்றதாகும்.

பாகிஸ்தான்:

1987ம் ஆண்டில் நாட்டின் மொத்தக் குடித்தொகையில் 29.8 சதவீதமானவர்கள் நகரங்களில் வாழ்ந்துள்ளனர். இந்தியா, பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்னர் 1941 ஆம் ஆண்டில் 12.8 சதவீதத்தினரே நகரவாசிகள், அதாவது பொருளாதார விருத்திக் குறைவு, மிகக்குறைந்தளவிலான கைத்தொழிலாக்கம் போன்றனவே நகராக்க வளர்ச்சியின்மைக்குரிய காரணிகளில் முக்கியமானதாகும். பிரிவினையின் போது இரு நாடுகளில் வாழ்ந்த மக்கள் தமது சேரிடத் தெரிவினை மேற்கொண்ட போது இருநாடுகளிலும் நகர மக்களின் வளர்ச்சி அதிகரித்தது. 1951/61ஆம் ஆண்டுகளில் நகராக்க வளர்ச்சி வீதமானது 57.4 ஆக காணப்பட்டது. 1987இல் 12 பெரிய நகரங்கள் காணப்பட்ட போதிலும் ஒரு மில்லியன் மக்களுக்கு மேலதிகமாக வாழும் நகரங்கள் மூன்றாகும்.

கராச்சி (5103000)

லாகூர் (2922000)

பைசாலாபாட் (1092000)

ஆகியனவே அவையாகும்.

இலங்கை:

1981ஆம் ஆண்டுக் கணிப்பீட்டின்படி நாட்டில் 135 நகரங்களும், பட்டினங்களும் காணப்பட்டன, மொத்தக் குடித்தொகையில் 21.1 சதவீதமானவர்கள் நகரவாசிகள். பிரதேச சபைகள் அறிமுகப்படுத்தப்பட முன்னர் பட்டின சபை அந்தஸ்து கொண்ட பிரதேச மக்களும் நகர மக்களாகக் கருதப்பட்டனர், பின்வரும் அட்டவணை 2இல் குடித்தொகை அடிப்படையின் நகரங்களில் எண்ணிக்கை தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2

இலங்கையின் நகரங்கள்

| குடித்தொகை | நகரங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 5000க்கு கீழ் | 30 |
| 5001 — 10000 | 30 |
| 10001 — 20000 | 35 |
| 20001 — 50000 | 30 |
| 50001 — 100000 | 05 |
| 100000க்கு மேல் | 05 |
| மொத்தம் | 135 |

**Source:** Census of Population and Housing 1981.

ஒருலட்சத்திற்கு மேற்பட்ட நகரங்களாக கொழும்பு, தெகிவளை – கல்கிசை மொறட்டுவை, யாழ்ப்பாணம், கோட்டை என்பனவுள்ளன. கண்டி நகரம் (97872) மேற்படி வரையறைக்குள் விரைவில் இணைந்து கொள்ளும் எனலாம். கொழும்பு நகரத்தில் 1987 இல் 587647 மக்கள் வாழ்ந்துள்ளனர்.

நேபாளம்:-

1987 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்தக் குடித்தொகையில் 8.0 வீதத்தினரே நகரவாசிகளாவர். இவர்களில் 27.0 சதவீதத்தினர் பெரிய நகரங்களில் வாழ்கின்றனர். பொருளாதார ரீதியாக நலிவுற்ற நாடாகவிருப்பதுடன் 90.0 சதவீதத்திற்கு

மேற்பட்டோர் விவசாயத்துடன் தொடர்புடையவர்களாகவிருக்கின்றனர். தலைநகரமான காட்மண்ட்டில் 235160 மக்கள் வாழ்கின்றனர். இதற்கடுத்ததாக பிராட்நகர் (93544) லலிற்பூர் (79875) ஆகிய நகரங்களே பெரிது.

*மாலைதீவு, பூட்டான்:-*

1987 ஆம் ஆண்டில் மாலைதீவின் மொத்தக் குடித்தொகையில் 25.5 சதவீதத்தினர் நகரவாசிகளாவர். பல்வேறு வழிகளில் விருத்தி பெற்ற நகரம் மாலியாகும். இங்கு 46334 மக்கள் வாழ்கின்றனர். ஏனைய தீவுகளில் மிகக்குறைந்தளவில் சிறிய சேவை மையங்கள் விருத்தி பெற்றுள்ளன.

பூட்டானில் திம்பு (15000) மட்டுமே ஓரளவுக்கு விருத்தி பெற்ற நகரமாகும். மொத்தக் குடித்தொகையில் 13.1 சதவீதத்தினரே நகரவாசிகளாவர்.

*நகராக்கப் பிரச்சனைகள்:-*

தென்னாசியா உட்பட்ட வளர்முக நாடுகளின் நகராக்கப் பிரச்சனைகளை பின்வரும் தலைப்புகளில் அணுகுதல் சிறப்பானது.

1. குடிப்புள்ளியியல் பரிமாணம் (Demographic Dimension)
2. உருவவியல் பரிமாணம் (Morphological Dimension)
3. தொழில் சம்பந்தமான பரிமாணம் (Occupational Dimension)
4. கைத்தொழிலாக்கப் பரிமாணம் (Industrial Dymension)
5. சமூக பண்பாட்டுப் பரிமாணம் (Socio-Cultural Dymension)

*குடிப்புள்ளியியல் பரிமாணம்:-*

குடித்தொகை வேறுபாடு, குடித்தொகை கூட்டு, குடித்தொகை இயக்கம் ஆகிய மூன்று பண்புகளுடன் கூடியதே குடிப்புள்ளியியல் பரிமாணம் எனலாம். பொதுவாக தென்னாசியா உட்பட வளர்முகநாடுகளின் நகரங்களில் இயற்கை அதிகரிப்பும் நகரம் நோக்கிய உள்வரவு ஆகிய இரண்டும் நகரக்குடித்தொகை அதிகரிப்புக்கு காரணிகளாக விருக்கின்றன. பேராசிரியர் ஆத்துர் ரமேஷ் என்பவர் இந்தியாவில் நகர, கிராம பிறப்பு, இறப்பு வீதங்களை பொறுத்தவரை வேறுபாட்டைக் காண்பது அரிது என்கின்றார். இந்தியாவில் கடந்த மூன்று தசாப்தங்களாக நகரக் குடித்தொகை 3 4 — 3.8 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருக்கின்றது. மேலும் இந்தியாவில் எழுத வாசிக்கத் தெரியாதவர்கள் 34.0 சதவீதத்தினர். நகரங்களில் 58.0 சதவீதத்தினரே எழுத வாசிக்கத் தெரியாதவர்கள். அத்துடன் கிராமங்களில் காணப்படுகின்ற வேலைவாய்ப்பின்மையைக் கருத்திற் கொண்டு நகரம் நோக்கிய இடப்பெயர்வாளரில் மூவரில் ஒருவருக்கு தொழில் வாய்ப்புக் கிடைக்கின்றது. ஏனையோர் தற்காலிகமாக தொழில்களில் ஈடுபடுபவர்களாகவோ அன்றில் ஏமாற்றிப் பிழைப்பவர்களாகவோ மாறுகின்றனர். இவர்கள் சேரிக்குடித்தொகையுடன் இணைந்து விடுகின்றனர். பொதுவாக இந்நாடுகளில் சிறிய, நடுத்தர நகரங்களுக்கான இடப்பெயர்விலும் பார்க்க பெரிய நகரங்களுக்கே அதிகளவில் செல்கின்றனர். பம்பாய், கல்கத்தா, டக்கா, கராச்சி, சென்னை போன்ற நகரங்களில் சேரிக்குடியிருப்புக்கள் அதிகரிப்பதற்கு இதுவே முதன்மைக் காரணியாகவிருக்கின்றது. ஜோன்கிளாக்கின் கருத்துப்படி பம்பாய் நகரில் வாழும் மக்களின் 70.0 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் உள்இடப்பெயர்வாளராவர். அத்துடன் கிராமங்களிலிருந்து நகரத்திற்கு உள்வரவை மேற்

வரவு

கொண்டோரில் 68.0 சதவீதத்தினர் நகர வாழ்வை நன்கு அறிந்தவர்களாகவும் பொருளாதார ரீதியில் நலிவுற்றவர்களாகவும் உள்ளனர். மேலும் தென்னாசிய நாடுகளின் நடுத்தர நகரங்களில் பத்து ஆண்டுகளில் மக்கள் இரட்டிப்பாகும் நிலை அதிகரித்து வருகின்றது. இந்நகரங்கள் மேற்குலக நாடுகளுக்கு மாறான நிலப்பயன் பாட்டினைக் கொண்டிருக்கின்றது. இந் நாடுகளில் 47.0 சதவீதமான நிலப்பயன் பாடானது குடியிருப்புக்களாகவும் கைத் தொழில் (10.0%) வர்த்தகம் (3.0%) திறந்த வெளிகள் பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல்கள் (4.0%) பொது இடங்கள் (12.0%) ஏனையன (11.0%) வாகவு மிருக்கின்றன. அதாவது நகரத்தின் அரைப்பங்கு குடியிருப்புக்களாகவமைந்துள்ளன எனலாம். பல வீனமான பொருளாதாரத்தினைக் கொண்ட மக்கள் சேரிகள், சிறுகுடிசைகள், வீதியோரக்குடியிருப்புக்களில் வாழ்ந்து வருகின்றனர். கல்கத்தா நகரில் 10.0 சதவீத மக்கள் சேரிகளிலும், வீதிகளிலும் குடியிருக்கின்றனர். தமிழ் நாட்டில் சட்டசபைக்கு முன்னால் 5000 க்கு மேற்பட்ட சேரிக்குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். அரசியல் லாபத்தினை கருத்திற் கொண்டு இவற்றினை அகற்றிச் சுற்றுப்புறச் சூழலை வளம் படுத்தாதுள்ளனர். அத்துடன் இவர்கள் சைக்கிள்றிக்சோ மற்றும் கூலிவேலை செய்பவர்கள். பொதுவாக வேலைவாய்ப்பின்மை, குற்றச்செயல்களில் ஈடுபடல், வறுமையால் வாடுதல், போசாக்கற்ற நிலை காணப்படல், கருவளவாக்க அதிகரிப்பு, ஆண், பெண் இருபாலிடையே மலிவான மதுபான மதுப்பழக்கங்கள், சூதாட்டம், களவெடுத்தல், விபச்சாரம், ஊழல், தொழிலாளர் பிரச்சனைகள் போதைவஸ்தினைப் பயன்படுத்தல் மற்றும் குடியிருப்புப் பிரச்சனைகள் அதிகரிக்கக் காரணமாயுள்ளன. பொதுவாக 100,000 மக்களுக்கு அதிகமாக வாழும் நகரங்களில் பெண்களிலும் பார்க்க ஆண்களே அதிகமாகவிருக்கின்றனர். அதிகமான குடித்தொகை காணப்படுவதால் சுற்றுப்புறச்சூழல் மாசுபடுத்தப்படுகின்றது. உதாரணமாக சென்னை நகரத்தில் ஆங்காங்கே வீதியோரக் குடியிருப்பாளர் வீதியின் ஒரு பக்கத்தில் குடியிருப்பினையும் மறுபக்கத்தில் கழிப்பிடத்தினையும் கொண்டிருப்பதை காணமுடிகின்றது. அத்துடன் இந்நாடுகளின் பெரிய நகரங்களில் பல குடியிருப்புப் பிரதேசங்களில் சதுரமைலுக்கு 400,000 மக்கள் வாழ்கின்றனர்.

## உருவவியல் பரிமாணம்:-

தென்னாசியாவில் அண்மைக்காலங்களில் மிகச்சிறிய எண்ணிக்கையிலான திட்டமிட்டு உருவாக்கப்படும் நகரங்களைவிட பெரும்பாலான நகரங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட நகர உருவவியற்பண்புகளைக் கொண்டு காணப்படவில்லை. இந்நாடுகளில் காணப்படும் பெரிய நகரங்களின் உருவவியல், செயற்பாடுகள் ஆரம்ப காலங்களில் ஐரோப்பிய நகரங்களை ஒத்ததாகக் காணப்பட்ட போதிலும் குடித்தொகைப் பெருக்கம், செயற்பாடுகளின் விருத்தி காரணமாக உருவவியலில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு பல்வேறு பிரச்சனைகளைத் தோற்றுவித்துள்ளன. அத்துடன் பல நகரங்கள் திட்டமிடப்படாத சேவைமையங்களாகவிருந்து விருத்தி பெற்றமையால் நெருக்கடிகளுடன் கூடிய வசதியீனத்தினைக் தோற்றுவித்துள்ளது. பெரும்பாலான நகரங்களின் வீதிகள் ஒடுங்கியதாகக் காணப்படுவதால் நகரம் விருத்தியடையும்போது பல்வேறு அசௌகரியங்களைத் தோற்றுவித்துள்ளது. உதாரணமாக கொழும்பு நகரிலும் சென்னை நகரில் பாரிமுனை, மண்ணடிப் பகுதிகளின் ஒடுங்கிய வீதிகள் நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளது. இதேபோவே பெரும்பாலான தென்னாசிய நாடுகளிலும் காணமுடிகின்றது. இதனால் டக்கா, கல்கத்தா, பம்பாய், பழைய டெல்லி, சென்னை நகரங்க

ளில் சைக்கிள் றிக்சோ ஓட்டுனரினால் நக ரம் அவதிப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. திட்டமிட்டு உருவாக்கப்பட்ட புது டில்லியில் கூட அதிகரித்த குடித்தொகையினால் உருவவியல் மாற்றம் பெற்று வருகின்றது. மேலும் தென்னாசிய நகரங்களில் அரசியல்வாதிகளினதும், நிர்வாக உத்தியோகத்தினரதும் தகாத செயல்களினால் உருவவியல் பண்புகளை மாற்றக்கூடிய வகையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்குகின்றனர். அத்துடன் இந்நகரங்களில் காணப்படும் குறைபாடுகளில் வடிகால் பிரச்சனையால் சூழல் பாதிக்கப்படுகின்றது. உதாரணமாக சென்னை நகரில் கூவம் ஆற்றில் கழிவு நீரைக்கலக்க விடுவதால் துர்நாற்றம் தொடர்ச்சியாக வீசுவதைக் காணலாம். திட்டமிடப்படாது வளர்ந்து வரும் தென்னாசிய நகரங்களில் மக்களுக்குத் தேவையான நீரினைப்பெற முடியாதுள்ளது. குறிப்பாக சென்னை, கல்கத்தா, டக்கா, கராச்சி, கொழும்பு போன்ற நகரங்களிலே வருடத்தில் வரட்சி மாதங்களில் நீர்வெட்டினை அமுல் செய்வதைக் காணமுடிகின்றது. இதனால் சென்னை நகருககு கிருஷ்ணா நதியிலிருந்து நீரைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தொழிற் பரிமாணம்:-

தென்னாசியாவின் நகரங்களில் குறிப்பாக மெற்றப்போலற்றன் நகரங்களில் தொழிலாளர் சம்பந்தமான பிரச்சனைகள் அதிகரித்து வருகின்றது. பொதுவாக இந்தியாவின் நகரங்களில் முதலாந்துறைகளில் (Primary Sector) 72.0 சதவீதமானோரும் இரண்டாந்தர மூன்றாந்தரத் துறைகளில் முறையே 11.0, 17.0 சதவீதத்தினரும் ஈடுபாடு கொண்டுள்ளனர். இதிலிருந்து இந்நகரங்களின் செயற்பாடுகளைப் புரிந்து கொள்ளலாம். இதன் விளைவாக இந்நகரங்களில் பருவகால வேலையின்மை, மீண்டும் மீண்டும் தொடர்ந்து வருகின்ற வேலையின்மை, வர்த்தக ஏற்றத் தாழ்வுகளினால் ஏற்படும் வேலையின்மை, தொழில் நுட்ப ரீதியான வேலையின்மை, சாதாரண வேலையின்மை, விவசாயம் மற்றும் கைத்தொழிலுடன் தொடர்புடைய வேலையின்மை போன்ற பல்வேறு மட்டத்தில் வேலையின்மை அதிகரித்து வருகின்றது. உதாரணமாக கல்கத்தா, டக்கா, பம்பாய், சென்னை ஆகிய நகரங்களில் வேலையற்றோரின் பங்கு முறையே 37.4, 34.0, 32.7, 10.2 சதவீதமாகவிருக்கின்றது. அத்துடன் தொழிலாளருக்கு அதிகரித்துவரும் விலைவாசிகளுக்கு ஏற்ப ஊதியம் மற்றும் சலுகைகள் வழங்கப்படாதபடியால் அடிக்கடி வேலைநிறுத்தங்கள் நிகழ்ந்து வருகின்றன. மேலும் மக்களிடையே குறைவான சேமிப்பினால் கிராமியப் பண்புகளுடன் கூடிய சிறிய கைத்தொழில்கள் விருத்தி பெறுவதுடன் பொருளாதார ரீதியில் நலிவுற்றிருப்பதால் பல்வேறு சமூகப்பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பளித்துள்ளது.

## கைத்தொழிற் பரிமாணம்

பொதுவாக நகரங்களில் கைத்தொழில்களை அமைத்தல் கைத்தொழில் ஓரிடப்படுத்தும் காரணிகளில் கணிசமானவை சாதகமாகவிருந்தபோதிலும் அவ்வவ் நகரங்களில் பல்வேறு பிரச்சனைகள் உருவாவது தவிர்க்கமுடியாதுள்ளது. தென்னாசிய நகரங்களில் காணப்படும் தொழிற்சாலைகளின் கழிவுப் பொருட்களை அகற்றுவதில் காணப்படுகின்ற இடர்ப்பாடுகள் நகரசூற்றுப்புறச் சூழலை பாதிப்படையச் செய்கின்றன. உதாரணமாக சென்னை நகர தொழிற்சாலைகளின் கழிவுகளை கூவம் வடிகாலில் கலக்கவிடுவதும், களனி ரயர் தொழிற்சாலைக் கழிவுகள் களனி கங்கையில் ஊடுவடிவதாலும் இந்தியாவின் வடகிழக்குக் கைத்தொழில் வலயக் கழிவுகளை தாமோதர ஆற்றில் வடியவிடுவதாலும்

தூயநீரைப் பெறமுடியாதது மட்டுமல்லாது உயிரினங்கள் அழிவதுடன் மக்களது சுகாதார வாழ்வும் பாதிக்கப்படுகின்றது.

மேலும் குடி நெருக்கமான நகரங்களில் நச்சுத்தன்மையைப் பரப்பக்கூடிய கைத்தொழில்களை அமைப்பதால் மக்களது உயிருக்கும் சுகாதார வாழ்வுக்கும் அச்சுறுத்தலாக அமைகின்றது. குறிப்பாக மத்திய பிரதேச தலைநகரமான போபாலில் அமெரிக்க நிறுவனம் ஒன்றினால் அமைக்கப்பட்ட தொழிற்சாலையில் இருந்து நச்சு வாயு வெளியேறியபோது 3000க்கு அதிகமானவர்கள் மாண்டதும் 30000க்கு அதிகமானோர் ஊனமுற்றதும் அண்மைய நிகழ்வாகும். நகரங்களை சார்ந்து அமைக்கப்படும் அணுசக்தியினால் இயங்கும் ஆலைகள் நகர மக்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளன. தென்னாசிய நாடுகளில் ஆட்சியினைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கம் கொண்ட கட்சிகள் கைத்தொழிற் கொள்கைகளுக்கு எதிராகச் செயற்படுவதும் நகரங்களில் சூழல் மாசடையும் காரணிகளில் ஒன்றாகும்.

## சமூக பண்பாட்டு பரிமாணம்

தென்னாசிய நாடுகளில் சமூக, இன, மத, மொழி பேசும் மக்கள் வாழ்கின்றனர். இதனால் குடிப்புள்ளியல், உருவவியல், தொழில்களில் ஈடுபாடு கொள்ளல் போன்றவற்றில் பல்வேறு பிரச்சனைகள் காணப்படுகின்றன. உதாரணமாக இந்தியாவில் அசாம் மானிலத்தில் வங்காள தேசத்தவர்களினதும் இந்தியாவின் நேபாள எல்லைகளில் நேபாளியர்களினதும், வங்காள தேசத்தில் பர்மியர்களினதும், இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களவர்களினதும், பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தவர்களதும், காஷ்மீரில் பாகிஸ்தானியர்களதும் ஊடுருவல் பல்வேறு சமூக, பொருளாதார, பண்பாட்டுச் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் இந்திய உபகண்டத்தில் இந்து – முஸ்லீம்களின் முரண்பட்ட நிலையினால் நகரங்களில் வன்முறைகள் வெடித்து உயிர், உடமைகளில் சேதத்தை ஏற்படுத்தி வருவதைக் காணமுடிகின்றது. குறிப்பாக அயோத்தியில் இராமர் கோவில்-பாபர் மசூதி பிணக்கானது உபகண்டத்தில் பிரச்சனைகளைத் தோற்றுவித்துள்ளதுடன் சர்வதேச ரீதியிலும் பிரச்சனைக்குரிய விடயமாக மாறிவிட்டது. இவை தவிர பெங்களூரில் கன்னட–தமிழர் பிரச்சனை, டெல்லியில் சீக்கியர்-இந்தி மக்களின் பிரச்சனை போன்றன நகரங்களில் பல்வேறு பிரச்சனைகளை ஏற்படுத்தி வருகின்றது. பொதுவாக இன ரீதியிலான வன்முறைகள் இந்நாடுகளின் நகரங்களிலேயே உருப்பெற்று வருவதைக் காணமுடிகின்றது

மேலும் தென்னாசிய நகரங்களில் காணப்படுகின்ற முக்கியமான பிரச்சனை குடியிருப்புப் பற்றாக்குறையேயாகும். அதிகரித்த குடித்தொகை, திட்டமிடப்படாத கைத்தொழிலாக்கம், குடித்தொகைக்கும் குடியிருப்புகளின் அமைப்புக்குமிடையே காணப்படும் வேறுபாடுகள், லாப நோக்கம் போன்ற பல காரணிகள் பிரச்சனைகளைத் தோற்றுவித்து வருகின்றன. இத்தகைய பண்புகள் தென்னாசிய நாடுகளின் பெரிய நகரங்களிலே தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. இதனால் சேரிக் குடியிருப்புக்கள், வீதியோரக் குடியிருப்புக்கள், சிறிய குடிசைக் குடியிருப்புகள் என்பன அதிகரித்து சமூகத்திலும் பண்பாட்டிலும் பல்வேறு சிக்கல்களை உருவாக்கி வருகின்றன. உதாரணமாக கூவம் வடிகால் கரையோரங்களில் காணப்படும் சேரிக்குடியிருப்பினால் சுற்றுப்புறச் சூழல் பெருமளவிற்கு பாதிப்பினை ஏற்படுத்தி அழுக்கடைந்த நகரப்பகுதிகளாக மாறிவருகின்றது. இந்நாடுகளின் அரசுகள், தனியார் நிறுவனங்

கள் மானிய முறையிலமைந்த கைத்தொழில் வீட்டுத்திட்டம், வருமானம் குறைந்த மக்களின் வீட்டுத் திட்டம், சேரிகளை அகற்றலும் முன்னேற்றத்துக்கான திட்டம், மத்தியதர வர்க்கத்தினரின் வீட்டுத்திட்டம், வாடகைக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம், நிலத்தினை சுவீகரித்தலுடன் அபிவிருத்தி செய்யும் திட்டம் போன்ற பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படினும் அதிகரித்துவரும் குடித்தொகைக்கு ஈடு கொடுக்கக் கூடியதாகவில்லை. மேலும் கொழும்பு நகரத்தில் 1972ஆம் ஆண்டு 25000 குடிசைகளும் 156750 குடிசை வாழ் மக்களும் சராசரி குடிசைவாழ் மக்கள் 6.27 ஆகவிருந்துள்ளனர். இந்நிலை படிப்படியாக அதிகரித்து வருவதை பஞ்சிகாவத்தை, மாளிகாவத்தை, மருதானை, புறக்கோட்டை, கிராண்ட்பாஸ் வட்டாரங்களில் காணமுடிகின்றது.

மேலும் சேரிக்குடியிருப்புக்கள் பாடசாலைக்கு செல்லாத நிலை அல்லது இடைவிலகல் பண்புகள் பொதுவாக எல்லா நாடுகளின் நகரங்களில் காணப்படுகின்றன. இதன் விளைவாக கல்வியறிவற்ற வர்க்கம் நகரங்கனில் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. அத்துடன் நகரங்களில் சினிமா மற்றும் கேளிக்கைகள் கல்வியறிவு குறைந்த மக்களின் பண்பாட்டு நிலைகளின் தாக்கத்தினை ஏற்படுத்தி வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும் குடித்தொகை அதிகரித்த பெரிய நகரங்களில் பெருமளவிற்கு முதலீடு செய்ய வேண்டியிருப்பதால் நாட்டில் விருத்தியடையாத பகுதிகள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன.

## முடிவுரை

தென்னாசியாவில் நகர மக்களின் குறிப்பாக மத்தியதர, தாழ்தர மக்கள் அனுபவிக்கும் பிரச்சனைகள் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கின்றன. எனவே பெரிய நகரங்களிலே வாழும் மக்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு அரசுகள் பாடுபடல் வேண்டும். குறிப்பாக சிறிய, நடுத்தர நகரங்களை திட்டமிட்ட அடிப்படையில் உருவாக்குவதுடன் நகர மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் அவசியமாகின்றது. அத்துடன் பின்தங்கிய சமூக பண்பாட்டு நிலைகளை உயர்த்துதல் அவசியமாகும். குறிப்பாக நாட்டின் பொருளாதார விருத்தியினை முன்னெடுத்துச் செல்லின் நகரப்பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் எனலாம்.

*References:*

1. Demographic Training and Research Unit; *Population Problems of Sri Lanka*, Colombo 1976.
2. John I Clarke: *Population Geography*, Pergamon Press, 1987.
3. ........ *Population Geography and the Developing Countries*, Pergamon Press 1977.
4. Kalyan Dutt: *Bangaladesh Economy*, Peoples Publishing house, New Delhi, 1973.
5. Qureshi. M. L., *Survey of Economy Resources and Prospects of South Asia*, Marga Institute, Colombo, 1981.
6. Singh, K., *Urban Sociology*, prakashan Kendra, Lucknow - 1986.
7. Srivastava. S. C : *Studies in Demography*, Jai Prakash Nath & Co., Meerut, 1989.
8. Statemens Year Book, 1988/89.
9. Yadav. C. S., *Comparative Urbanization: City Crowth and Change*, Concept Publishing Company, New Delhi, 1986.

## மங்கள வைபவங்களுக்கேற்ற

- கூறைச் சேலைகள்,
- காஞ்சிபுரம்,
- பட்டுவேட்டி,
- கோவில் பட்டுக் குடைகள்,

மற்றும் பல புடவைத் தினுசுகளையும்
உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய
ஏற்றதோர் எழிற் கூடம்.

## அஜந்தாஸ் பிடவை மாளிகை

கிளை: 25, 4 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

54, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

## சத்தியா வீடியோ மூவீஸ்

தமிழ், ஹிந்தி, சைனிஸ், ஆங்கிலம் புதிய பழைய வீடியோ பிரதிகளை வாடகைக்கு பெற்றுக் கொள்ளவும் ஒலிப்பதிவு நாடா பதிவு செய்வதற்கும் மங்கள நிகழ்வுகளை வீடியோ படம் பிடிப்பதற்கும் புகைப்படங்களை எடுப்பதற்கும் மற்றும் ஜெனரேட்டர், ரிவி, டெக் ஆகியவற்றை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்கும் நாடவேண்டிய ஒரே இடம்

சத்தியா வீடியோ மூவிஸ்,
இல 315, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

## வாழ்த்துகிறோம்

# மதி ஜுவல்லறி

226, கஸ்தூரியார் வீதி, — யாழ்ப்பாணம்.

BEST WISHES TO

VARAVU

**LEYDON TEXTILE CENTRE**

*249, Power House Road,*

*Jaffna.*

வாழ்த்துக்கள்

நவநாகரிகத்துக்கேற்ப

ஆடைகளை தைத்துப் பெற்றுக்

கொள்ள

நீங்கள் நாடவேண்டிய தையலகம்

**சிற்றி போய் ரெயிலர்ஸ்**

181, சிவன் பண்ணை வீதி,

கொட்டடி — யாழ்ப்பாணம்.

Prop: **R. BALA**

கற்பக விநாயகர் துணை

வாழ்த்துக்கள்

**E. S. PERAMPALAM & Co.**

General Merchant Commission Agents & Importers

*Dealers in:* Cycles, Cycle Accessories

*Sole Agents & Distributors For:*

Lotus Cycle, Tyres, & Tubes

**50, Kasturiar Road,**
**JAFFNA.**

Estd in: **1953** Phone: **021-22324**

வரவை

மனமுவந்து வாழ்த்துகிறோம்

- ☐ கோவில் அபிஷேகத் திரவியங்கள்
- ☐ அத்தியாவசிய சாமான்கள்
- ☐ சித்த ஆயுள்வேத மூலிகைகளை மலிவாகப் பெற்றுக்கொள்ள

நாடுங்கள் !

**ஆ. இராசையா அன் சன்ஸ்**

மருந்துச் சரக்கு வியாபாரம்

209, கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம்.

# சிந்தனை விதிகள்

# LAWS OF THOUGHT

பகுத்தறிவின் அடிப்படையில் உள்ள சில இன்றியமையாத தத்துவங்களே எண்ண விதிகள் / சிந்தனை **விதிகள்** என வரையறுக்கப்படுகின்றது. சித்தனை விதிகள் ஏனைய விதிகளிலிருந்து வேறுபட்டவை. எனவே இவற்றை மூலதத்துவங்கள் (First Principales) அல்லது நியதிகள் (Axioms) எனவும் அழைக்கப்படுகின்றன.

யதார்த்த உலகில் இடம்பெறுகின்ற ஒவ்வொரு பகுத்தறிதலையும் அவதானிக்கின்ற போது அவை உட்கிடையாக அமைந்திருக்கின்றன. எனவே பகுத்தறிதலுக்கு எண்ண விதிகள் அடிப்படையானவையாகவும் இன்றியமையாதனவாகவும் அமைகின்றன. அதாவது சகல நியம ரீதியான அனுமானங்களுக்கும் அடிப்படையாக உள்ளன. விழிப்புணர்ச்சி உள்ள நிலையில் இவற்றை மீறவோ இவற்றுக்கு மாறான தத்துவங்களை இயற்றவோ கற்பனை செய்யவோ முடியாது.

சிந்தனை விதிகள் விழிப்புணர்ச்சி அற்ற நிலையில் மீறப்படுபவனவாக உள்ளன. எண்ண விதிகள் பின்வரும் பண்புகளைப் பெற்றுள்ளன.

1) இவை அனுபவத்தின் அடிப்படையில் பெறப்பட்டவை அல்ல. ஆகையால் அறிவு வளர்ச்சிக்கு ஏற்ப இவை மாற்றமடைவதில்லை.

2) இவை வெளிப்படை உண்மைகளாக விளங்குகின்றன.

அரிஸ்டோட்டிலின் காலத்திலிருந்து சித்தனை விதிகள் ஒருமைத் தத்துவம், எதிர்மறைத் தத்துவம், விலக்கிய நடுத்தத்துவம் என மூன்றாக எடுத்துக்காட்டப்படுகின்றன. தற்போது இரட்டைமறுப்பு விதியினையும் எண்ண விதிகளுக்குள் உள்ளடக்கியுள்ளனர்.

## ஒருமைத் தத்துவம்

## (Law of Identity)

இதன் எளிமையான குறியீட்டு சூத்திரம் "A, A" ஆகும். ஒருமைத் தத்துவம் பன்மை என்ற கருத்தை உட்கிடையாகக் கொண்டது. இதன் விளைவாகவே இச் சூத்திரம் பொருளுடையதாக அமைகின்றது. இங்கு பன்மை என்பது சந்தர்ப்பங்களை குறிப்பதாக கருதப்படும். அதாவது ஒரே பொருள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தனது தன்மையை மாறாது பெற்றிருக்கும் என்பதே அதன் பொருளாகும்.

இத்தத்துவம் வேறுபாடுகளுக்கிடையே காணப்படும் ஒருமைப்பாட்டை வற்புறுத்துகின்றது.

உதாரணமாக:- ஒரு பெண் ஏழு பருவங்களாக மாறுதல் அடைகிறாள். ஒவ்வொரு பருவமும் மற்றைய பருவங்களிலிருந்து வேறுபடுகின்றது. ஆனால் இவ்வேறுபாடுகளை அடைந்தவர் ஒருவரே. அவரது அடிப்படைத் தன்மை ஏழு பருவங்களிலும் மாற்றமின்றி அமைந்திருக்கின்றது.

**ச. ஜெயசீலன்**

ஆண்டு 13F
வர்த்தகப்பிரிவு

இத்தத்துவத்தின் முக்கியமான உப யோகம் பதங்கள் ஒரே கருத்துடையனவாக பிரயோகிக்கப்பட வேண்டும் என்பதேயா கும்.

*எதிர்மறை தத்துவம்*

(Law of Non-Contradiction)

இதன் எளிமையான குறியீட்டுச் சூத் திரம் ''AB ஆகவும், B அல்லாததாகவும் இருக்க முடியாது என்பதேயாகும். இதன் அர்த்தம் ஒரு பொருள் ஒரே நேரத்தில் ஓர் பணியை உடையதாகவும் அப்பண்பை அற்றதாகவும் இருக்க முடியாது என்பதே ஆகும். இவற்றுள் ஒன்று கட்டாயம் பொய் யாக இருக்கவேண்டும்.

உதாரணம்; ஒருவர் ஒரே நேரத்தில் பலமானவராயும் பலமற்றவராயும் இருக்க முடியாது.

இத்தத்துவம் எண்ணம் அல்லது சிந் தனை இசைவுடையதாக இருக்கவேண்டு மாயின் கற்பனை, கனவு என்பவற்றிலும் ஒரு பொருளின் ஒரு பண்பை உடையதா யும் அப்பண்பை அற்றதாயும் இருக்க முடி யாது என வற்புறுத்துகின்றது. இவ்விதம் சிந்தனையில் முரண்பாட்டைத் தவிர்த்து இசைவு தன்மையை ஏற்படுதுகின்றது.

*விலக்கிய நடுத்தத்துவம்*

(Law of Exclademiddle)

இதன் எளிமையான குறியீட்டு சூத்தி ரம் ''A ஒன்றில் B அல்லது B'' அல்லாத தாகும். இதன் அர்த்தம் உண்மையான எதிர்மறைகளுக்கிடையே இடையினம் எச்ச மாக அமையவில்லை. ஆகையால் ஒரு எழு வாயைப் பொறுத்து எதிர்மறைகள் ஒருங்கே பொய்யாக இருக்கமுடியாது. அவற்றுள் ஒன்று கட்டாயம் உண்மையாக இருக்கும்.

*உதாரணம்:-* அவன் திறமையானவன் அல்லது திறமையற்றவன்.

இங்கு தரப்பட்டுள்ள திறமை, திறமை யற்ற என்பவற்றுள் இடையினம் எச்சமாக அமையவில்லை. ஆகையால் அவன் என்ற எழுவாயைப் பொறுத்து திறமை என்பதும் திறமை அற்றது என்பதும் பொருந்த வில்லை எனக் கொண்டால் இன்னொன்று பொருந்துவதாக இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு ஒன்று இல்லை. எனவே அவன் என்ற எழுவாயைப் பொறுத்து ஒருங்கே பொய்யாக இருக்கமுடியாது. இவற்றுள் ஒன்று கட்டாயம் அவன் என்ற எழுவா யைப் பொறுத்து உண்மையாக இருக்கும்.

விலக்கிய நடுத்தத்துவம் உண்மையான எடுப்புக்களில் ஒன்றை கட்டாயம் உண்மை என ஏற்றுக்கொள்ள வேண்டும் என வற் புறுத்துவதன் மூலம் எமது சிந்தனை கட் டுப்பாட்டுக்குட்பட்டது என்பது புலப்படு கின்றது.

எதிர்மறைகளில் எது உண்மை என் பதை இத்தத்துவம் குறிப்பிடவில்லை.

*எதிர்மறை தத்துவம்*
*விலக்கிய நடுத்தத்துவம் ஒப்பீடு.*

இரு தத்துவங்களும் ஒரே பொருள், ஒரே நேரம் என்ற நிபந்தனைக்கு உட்படு கின்றன. எதிர்மறை தத்துவம் எதிர்மறை கள் இரண்டும் ஒரு எழுவாயைப் பொறுத்து ஒருங்கே உண்மையாக இருக்கும் என கருது வது தவறு என குறிப்பிடுகின்றது. இதன் அர்த்தம் ஒன்று பொய்யாக இருக்கும் என்ப தாகும்.

விலக்கிய நடுத்தத்துவம் எதிர்மறைகள் இரண்டும் ஒரு எழுவாயைப் பொறுத்து ஒருங்கே பொய்யாக இருக்கும் எனக் கருது வது தவறு எனக்குறிப்பிடுகின்றது. இதன்

அர்த்தம் ஒன்று கட்டாயம் உண்மையாக இருக்கும் என்பதாகும்.

## இரட்டை மறுப்பு விதி

இதன் குறியீட்டு அமைப்பு பின்வருமாறு அமைந்திருக்கும்.

$$\frac{\phi \therefore}{\phi \sim\sim} \qquad \frac{\phi \sim\sim \therefore}{\phi}$$

இதன் அர்த்தம் ɸ ஒரு வரியாக தரப்படின் ~~ɸ ஐ பெறலாம் எனவும் ~~ɸ ஒரு வரியாக தரப்படின் ɸ ஐ பெறலாம் எனவும் குறிப்பிடுகின்றது.

உதாரணம்:- அவள் அழகானவள்

அவள் அழகற்றவள் அல்ல

:- அவள் திறமையற்றவள் அல்ல

;- அவள் திறமையானவள்

## போதிய நியாய தத்துவம் (Law of Sufficientreason)

இத்தத்துவத்தினை இலைபினிற்சு என்பவர் அறிமுகப்படுத்தினார். இவர் கணிதவியலாளராயும், அளவையியலாளராயும் மெய்யியலாளராயும் விளங்கினார்.

இவரது வார்த்தையில் இத்தத்துவத்தை பின்வருமாறு வரையறுத்துக் கூறலாம். ''உண்மையாக இருப்பது எதுவும் அல்லது உண்மையான எடுப்பெதுவும் வேறு எவ்வகையாலும் அமையாது தான் உள்ளவாறு இருப்பதற்கு போதிய நியாயமுடையதாக இருக்க வேண்டும் என்பதே ஆகும்.''

இதன் அர்த்தம் ஏதாவது ஒன்றை அதற்குரிய காரணங்களின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே ஆகும். ஆகையால் இத்தத்துவம் அனுபவத்துடன் தொடர்புடையதாக அமைகின்றது. இதன் விளைவாக இதனை எண்ண விதிகளில் ஒன்றாக கணிப்பதில்லை. எண்ண விதிகள் அனுபவம் சாராத தன்மையை பெறும்.

உசாவியவை:-

இடைநிலை அளவையியல்

□

CEY BANK UNIT TRUST

இது 1992ல் ஆரம்பிக்கப்பட்டது. இதன் முகாமைக் கம்பனி UNIT TRUST MANAGEMENT (PVT) LTD. ஆகும். இதன் நம்பிக்கைப் பொறுப்பாளர் இலங்கை வங்கியாகும்.

# வரைவிலக்கணம்

# DEFINITION

தெளிவான சிந்தனைக்கும் அதன் விளைவுகளின் வெளிப்பாட்டிற்கும் வரைவிலக்கணம் அவசியமாக காணப்படுகின்றது. நாம் எதைப்பற்றி சிந்திக்கிறோம் என்ற தெளிவு எமக்கு ஏற்படாதிருக்குமாயின் எமது சிந்தனையில் குழப்பம் ஏற்படலாம். இவ்வாறான தெளிவான அறிவு இல்லாமையால் எமக்கு குழப்பம் ஏற்படுமாயின் எமது சிந்தனையை வெளிப்படுத்த பயன்படுத்தும் பதங்களுக்கு வரைவிலக்கணம் காண்பதன் மூலம் எமது சிந்தனையில் தெளிவு காணலாம். அதாவது எமது சிந்தனையை வெளிப்படுத்த பயன்படுத்தும் பதங்களின் கருத்துக் குறிப்பை நிர்ணயித்து அவற்றை உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறு பதங்களின் கருத்துக் குறிப்பினை நிர்ணயிக்கின்ற முறையே வரைவிலக்கணம் எனப்படும். எனவே வரைவிலக்கணம் தெளிவான சித்தனைக்கும் அதன் தெளிவான வெளிப்பாட்டிற்கும் வழி கோலுவதால் அளவையியலில் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது.

அளவையியலில் காணப்படுகின்ற வரைவிலக்கணங்களை பின்வருமாறு பட்டியற்படுத்தலாம்.

1) சுட்டு முறை வரைவிலக்கணம்

2) சமபத விரைவிலக்கணம்

3) விரித்தன் முறை வரைவிலக்கணம்

4) விபரண வரைவிலக்கணம்

5) வகு முறை வரைவிலக்கணம்

6) பிறப்பு முறை வரைவிலக்கணம்

7) ஒழுங்கமைப்பு வரைவிலக்கணம்

## சுட்டுமுறை வரைவிலக்கணம்

நாம் பொருளறியாத பதத்திற்கு மிக இலகுவில் தரக்கூடிய வரைவிலக்கணம் இதுவாகும். இலக்கணம் வரையப்படும் பதத்தினால் குறிக்கப்படும் பொருளைச் சுட்டிக் காட்டி இலக்கணம் வரையவேண்டிய பெயரால் அதனை அழைப்பதே சுட்டுமுறை வரைவிலக்கணம் ஆகும்.

உதாரணம் பேனாவைச் சுட்டிக்காட்டி இதுதான் பேனா எனச் சுட்டி அழைத்தல்.

இவ் வரைவிலக்கண முறையின் குறைபாடுகள்:

1) இம்முறை பொருளைச் சுட்டிக்காட்டுகின்றதே தவிர பதத்தின் பிரயோக இயல்பை எடுத்துக் காட்டவில்லை.

2) சுட்டு முறை வரைவிலக்கணத்தை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பிரயோகிக்க முடியாது.

3) பொருட் குறிப்பற்ற பதங்களுக்கு இம் முறையைப் பிரயோகிக்க முடியாது.

**ச. பாலமனோகரன்**

ஆண்டு 13F
வர்த்தகப்பிரிவு

## சமபத வரைவிலக்கணம்

இலக்கணம் வரையப்படுகின்ற பதத்திற்கு சமகருத்துடைய பிறிதொரு பதத்தை அல்லது பதங்களை எடுத்துக் காட்டுவதன் மூலம், இலக்கணம் வரையப்படும் பதம் பற்றிய தெளிவை ஏற்படுத்த முயலும் வரைவிலக்கணம் சம பத வரைவிலக்கணம் எனப்படும். மொழிபெயர்ப்பு முறை இவ் வரைவிலக்கணத்தின் ஒரு விசேட வகையாகும்.

உதாரணம்:

அளித்தல் — கொடுத்தல்

துயிலுதல் — நித்திரை செய்தல்

இவ் வரைவிலக்கண முறையின் குறைபாடுகள்:

1) இம் முறையானது கூறியது கூறலாக அமைகிறதே தவிர பதங்களின் பிரயோக இயல்பை தெளிவுபடுத்தவில்லை.

2) சம பதம் அற்ற பதங்களுக்கு இம் முறையைப் பிரயோகிக்க முடியாது.

## விரித்தன் முறை வரைவிலக்கணம்

இலக்கணம் வரையப்படும் பொருளின் பண்புகளையுடைய வேறு பல பொருட்களை எடுத்துக்காட்டுக்களாகக் கூறி அதன் மூலம், குறித்த பொருள் பற்றிய தெளிவை ஏற்படுத்த முயலும் முறை விரித்தன் முறை வரைவிலக்கணம் எனப்படும்.

உதாரணம்: வாசனைச் சவர்க்காரத்தை விளக்குவதற்கு 'லக்ஸ்', 'ராணி', கோம்பர், ரெக்சோனா போன்றவற்றை உதாரணம் காட்டுவதன் மூலம் அப் பொருளை தெளிவுபடுத்த முயலுதல்

இதுவரை பார்த்த சமபத வரைவிலக்கணம் சுட்டு முறை வரைவிலக்கணம் என்பனவற்றை விட இவ் விரித்தன் முறை வரைவிலக்கணம் பதங்களின் கருத்துக் குறிப்பு அகலக் குறிப்பு என்பவற்றைப் பொறுத்து ஓரளவு தெளிவைத் தருகின்றது. எனவே மேற்கூறிய இரண்டு வரைவிலக்கண முறைகளை விட விரித்தன் முறை வரைவிலக்கணம் சிறப்பானதாகும்.

இவ் வரைவிலக்கண முறையின் குறைபாடுகள்:

1) பதங்களின் பிரயோக இயல்பை வெளிப்படுத்தாமை இதன் முக்கிய குறைபாடாகும்.

## விபரண வரைவிலக்கணம்

இலக்கணம் வரையப்படும் பொருள் அல்லது வகுப்பு தொடர்பாக அறிந்த தகவல்கள் அனைத்தையும் கூறி அதன் மூலம் இலக்கணம் வரையப்படும் பொருள் பற்றிய தெளிவை ஏற்படுத்தும் முறை விபரண வரைவிலக்கணம் எனப்படும்.

உதாரணம்: மனிதன் எனும் போது ஆசை, மோகம் என்பவைகளிற்கு உட்பட்டு அதனால் எழும் தேவைகளை போட்டி, பொறாமை, ஏமாற்றல், வஞ்சித்தல் ஆகிய வழிகளில் பூர்த்தி செய்யும் விலங்கு என வரையறுத்தல்.

இவ் வரைவிலக்கண முறையின் குறைபாடுகள்:

குறித்த பதம் பற்றிய தெளிவைத் தருகின்ற போதிலும் பதத்தின் பிரயோக இயல்பைத் தெளிவுபடுத்தவில்லை.

## வகு முறை வரைவிலக்கணம்

இலக்கணம் வரையப்பட வேண்டிய பொருளின் சாதியையும், இனத்தையும், தனி வேற்றுமையையும் கூறுவதன் மூலம் அப் பொருளின் இயல்பை வெளிப்படுத்துவதே வகு முறை வரைவிலக்கணம் ஆகும்

வரைவிலக்கண வகைகள் யாவற்றுள்ளும் முக்கியமானது இதுவே. ஏனெனில் இது சிந்தனைத் தெளிவு ஏற்படுத்த உதவுகின்றது. மேலும் இவ் வரைவிலக்கணம் அமைத்தற்கு மிகவும் அரிதானதாகும். ஏனெனில் அதனை அமைப்பதற்கு செம்மையான நோக்கல், ஒப்பீடு, நோக்கற் பேறுகளின் வகையீடு, வேற்றுமைகளைப் பிரித்தல், பொதுமையாக்கம் ஆகியவை யாவும் நிறைவேற்றப்பட வேண்டும்.

*உதாரணம்:* முக்கோணம் என்பது மூன்று கோடுகளால் அடைக்கப்பட்ட நேர் கோட்டுத் தளவுரு ஆகும். இங்கு நேர் கோட்டுத் தளவுரு சாதியாகவும், முக்கோணம் இனமாகவும் மூன்று நேர்கோடுகளால் அடைக்கப்பட்ட தன்மை தனி வேற்றுமையாகவும் உள்ளன.

வகு முறை வரைவிலக்கணம் பதங்களில் பிரயோக இயல்பை நிர்ணயித்து அவற்றை ஒரே கருத்தில் பிரயோகிக்கும் தன்மையை ஏற்படுத்துகின்றது. எனவே தான் இவ் வரைவிலக்கணத்தை பூரண வரைவிலக்கணம் என ஏற்றுக் கொள்கின்றோம்.

*இவ் வரைவிலக்கண முறையின் - குறைபாடுகள்:*

சாதிக்குள் அடக்க முடியாத பதங்களுக்கு இம் முறை மூலம் வரைவிலக்கணம் கூற முடியாது.

*உதாரணம்:* காலம், வெளி போன்ற சாதிக்குள் அடக்கமுடியாத பதங்களுக்கு இம் முறை மூலம் வரைவிலக்கணம் கூற முடியாது.

## *பிறப்பு முறை வரைவிலக்கணம்*

இது நவீன வரைவிலக்கண முறையாகக் காணப்படுகின்றது. இலக்கணம் வரையப்படும் பதம் குறிக்கின்ற பொருள் தனது தற்போதைய நிலையை எவ்வாறு அடைந்தது என்பதனைக் காரண, காரிய தொடர்பு அடிப்படையில் கூறும் வரைவிலக்கணம் பிறப்புமுறை வரைவிலக்கணம் எனப்படும். அதாவது காரண காரிய தொடர்பை அடிப்படையாகக் கொண்டமைந்த வரைவிலக்கணமாக இது காணப்படுகின்றது.

*உதாரணம்:* செயற்கை முறையில் ஐதரசன் வாயு இரண்டு பங்கையும் ஒட்சிசன் வாயு ஒரு பங்கையும் விஞ்ஞான முறைப்படி இணைப்பதன் மூலம் நீரைப் பெற்றுக் கொள்ளலாம்.

## *ஒழுங்கமைப்பு வரைவிலக்கணம்*

இதுவும் நவீன வரைவிலக்கண முறையாகக் கருதப்படுகின்றது. நவீன விஞ்ஞானமானது பிரபஞ்சம் ஒழுங்கமைப்பு உடையது என்பதனை ஏற்றுக் கொள்கிறது. இவ் ஒழுங்கமைப்பினுள் அனேக சிறு ஒழுங்கமைப்புக்கள் உள்ளன என்பதனையும் ஏற்கின்றது. எனவே ஒழுங்கமைப்பு வரைவிலக்கணம் என்பது இலக்கணம் வரையப்படும் பதம் குறிக்கும் பொருள் எவ் ஒழுங்கமைப்பினுள் அடங்குகிறது என்பதைக் காட்டுவதைக் குறிக்கும்.

*உதாரணம்:* சிவப்பு என்பது நிறமாலையின் ஓர் இறுதியாகும்.

## *வரைவிலக்கண விதிகள்*

செம்மையானதொரு வரைவிலக்கணம் பின்வரும் விதிகளுக்கு அமைவாகக் காணப்படவேண்டும்.

*விதி (1)* இலக்கணம் வரையப்படும் பதத்தின் கருத்துக் குறிப்பிற்கு கூடுதலாகவோ, குறைவாகவோ வரைவிலக்கணம் கூறுதலாகாது. அதாவது இலக்கணம் வரையப்படும் பதத்தின் கருத்துக்குறிப்பு அதன்

வரைவிலக்கணத்திற்கு சமமாகக் காணப் பட வேண்டும்.

*உதாரணம்:* முக்காலி என்பது மூன்று கால்களை உடையது எனக் கூறுதல்.

*விதி (2)* செய்மையானதொரு வரை விலக்கணம் கூறியது கூறலாக இருத்தல் ஆகாது. அதாவது வரைவிலக்கணம் கூறும் பொழுது இலக்கணம் வரையபபடும் பதத் தையோ அல்லது அதற்குச் சமமான பதத் தையோ உபயோகிக்கக் கூடாது.

*உதாரணம்:* காதலர் என்பது காத லர்க்குரிய கடமைகளைச் செய்பவர்கள் ஆவர். இவ்வாறு கூறுவது கூறியது கூறலா கும். எனவே ஒரு நல்ல வரைவிலக்கணம் இவ்விதம் அமைதல் ஆகாது.

*விதி (3)* நல்ல வரைவிலக்கணம் தெளி வாகக் கூறப்பட்டிருத்தல் வேண்டும். அதா வது நல்ல வரைவிலக்கணம் தெளிவற்ற அல்லது அலங்கார மொழிகளைக் கூறுத லாகாது.

*உதாரணம்:* உணவு உயிரின் ஊன்று கோள் இவ்விதம் ஒரு நல்ல வரைவிலக்க ணம் அமைதல் கூடாது.

*விதி (4)* நல்ல வரைவிலக்கணத்தில் விதிப்பதத்திற்கு மறைப்பதத்தினால் வரை விலக்கணம் கூறுதலாகாது. ஆனால் மறைக் கருத்துள்ள பதங்களுக்கு மறைக் கருத்தி னால் வரைவிலக்கணம் கூறலாம்.

*உதாரணம்:* ஆண் என்பது பெண் அல்ல, இங்கு ஆண் என்பது பெண் அல்ல என்ற மறைப் பதத்தினால் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. இவ்விதம் ஒரு நல்ல வரை விலக்கணம் அமைதல் ஆகாது. ஆனால் குருடன் என்ற மறைக் கருத்துடைய பதம் பற்றிக் கூறும் பொழுது பார்வையற்ற மனி தன் என மறைப்பதத்தினால் வரைவிலக் கணம் கூறலாம். இவை நான்குமே வரை விலக்கண விதிகளாகும்.

உசாத்துணை நூல்:

இடைநிலை அளவையியல்

☐


## COMFRONT TRUST FUND

இது 1992ல் உருவாக்கப்பட்டது. இதன் முகாமைக் கம் பனி வர்த்தக நிதிக் கம்பனியாகும். இவ் வரையறுத்த இலங்கை வர்த்தக வங்கி, அவுஸ்திரேலிய GROWTH FUND, சிங்கர் கம்பனி ஆகியன முதலீடு செய்துள்ளன.

# வினையின் காலங்காட்டும் தன்மை

(தொல்காப்பியமும் நன்னூலும் கூறுவனவும்
அவற்றின் தற்காலப் பொருத்தப்பாடும்)

சொல்லாவது ஒருவர் தங்கருத்தின் நிகழ்பொருளைப் பிறர்க்கு அறிவித்தற்கும், பிறர் கருத்தின் நிகழ்பொருளைத் தாம் அறிதற்குங் கருவியாகிய ஒலியாம். அத்தகைய சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நால் வகைப்படும். அவற்றுள் ஒன்றாகிய வினைச்சொல், பொருளினது புடைபெயர்ச்சியை அதாவது வினைநிகழ்ச்சியை உணர்த்தும் சொல்லாகும். இவ்வாறான வினை காலங் காட்டுவது பற்றிப் பழந்தமிழ் இலக்கண நூல்களாகிய தொல்காப்பியமும் நன்னூலும் கூறும் செய்திகளை அறிமுகப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

''பெரும்பாலான மொழிகளிலே வினைவடிவங்களாலேயே காலம் உணர்த்தப் படுகின்றது. இதனாற் பெரும்பாலான இலக்கணகாரர் வினையின் முக்கிய பண்பாகக் காலமுணர்த்துதலைக் கொண்டுள்ளனர். ஆனால் கால வேறுபாட்டினை உணர்த்தாத வினைவடிவங்களையுடைய மொழிகளும் உலகிலே காணப்படுகின்றன என்பதனை நாம் மனங்கொள்ள வேண்டும்'' என்பர் கலாநிதி அ. சண்முகதாஸ்.

தொல்காப்பியர் வினைகாலம் காட்டுவது பற்றித் தெளிவாக எதுவும் கூற வில்லை. நன்னூலாரும் வினையியலில் வினைகாலங் காட்டுவது பற்றித் தெளிவாகக் கூறாது பதவியலிலே கூறுவார். தொல்காப்பியர் வினைச்சொற்கள் எல்லாம் வெளிப் படையாகக் காலத்தையுணர்த்தும் எனக் கூறவில்லை.

''வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்'' (198) என்றுதான்

கூறுகின்றார். இச்சூத்திரத்திற்குப் பொருள் கூறும் சேனாவரையர்

''வினையென்று சொல்லப்படுவது வேற்றுமையோடு பொருந்தாது ஆராயுங் கால் காலத்தொடு புலப்படும் என்றவாறு'' எனக் கூறுவர்.

ஆனால் 'நினையுங் காலை' என்பதற்கு விளக்கவுரை கூறுமிடத்து ''வினைச்சொல் லுள் வெளிப்படக் காலம் விளக்காதனவும் உள. அவையும் ஆராயுங்காற் கால முடையவென்றார்க்கு, 'நினையுங் காலை' என்றார்'' எனக் கூறுகின்றார்.

**பொ. செங்கதிர்ச்செல்வன்**
B. A. Hons.

விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

'நினையுங் காலை' என்பது தொல்காப் பியரின்படி எல்லா வினைச்சொற்களுக் கும் பொருந்துவதாகவே அமைக்கப்பட் டிருக்க வேண்டும். சேனாவரையர் விரை கின்ற விளக்கவுரை பிற்கால வினைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண் டமைகின்றதெனவே கூறலாம். தொல் காப்பியருடைய காலத்துக்கு முன்னர்

வினைச்சொற்கள் காலம் உணர்த்தாமல் அமைந்திருக்கலாம். தொல்காப்பியருடைய காலத்திலேயே அவை காலமுணர்த்தும் பண்பினைப் பெற்றிருக்க வேண்டும். இதனாலே தான் 'நினையுங் காலைக் காலமொடு தோன்றும்' என அவர் கூறவேண்டி ஏற்பட்டதெனலாம் என்பர் கலாநிதி அ. சண்முகதாஸ். இவ்வாறு வினைக்குப் பொதுவிலக்கணங் கூறிய தொல்காப்பியர் அடுத்துவரும் மூன்று சூத்திரங்களில்,

''காலந் தாமே மூன்றென மொழிப'' (200)
''இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா
அம் முக்காலமுங் குறிப்பொடுங் கொள்ளும்
மெய்நிலையுடைய தோன்றலாறே'' (201)

''குறிப்பினும் வினையினும் நெறிப்படத்தோன்றிக்
காலமொடு வருஉம் வினைச்சொல் எல்லாம்
உயர்திணைக்குரிமையும் அஃறிணைக்குரிமையும்
ஆயிரு திணைக்குமோரன்ன உரிமையும்
அம் மூவுருபின தோன்றலாறே'' (202) என்று கூறிச்

சென்றுள்ளார். இம்மூன்று சூத்திரங்கள் மூலமாக இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்றும் 3 காலங்களையும் குறிப்பாகவே வினையுணர்த்தும் எனக் கொள்ள வேண்டியுள்ளது. எப்படியிருப்பினும் வினை காலம் உணர்த்தும் என்பதை மூன்றாவது சூத்திரத்திலே தொல்காப்பியர் அழுத்தமாகக் கூறியுள்ளார். ஆனால் காலத்தினை உணர்த்துதற்கு இடைநிலைகளையோ விகுதிகளையோ எங்கேனும் கூறினாரில்லை. வெளிப்படையாகக் காலத்தை உணர்த்துகின்ற குறியீடுகள் எவையுமே அவருடைய காலத்து வினைச்சொற்களிலே இல்லாமலிருக்க வேண்டும். அதனாலே தான் ''அம்முக் காலமும் குறிப்பொடு கொள்ளும்'' என அவர் கூறியுள்ளார். ஆனால் நன்னூலார்

''செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
செய்பொருளாறும் தருவது வினையே'' (ந 320) என்பதால் வினை
வெளிப்படையாகக் காலங் காட்டும் என்கிறார்.

தொல்காப்பியர் குறிப்பு வினை, தெரிநிலைவினை என்னும் பாகுபாட்டுக்குக் காலத்தை அடிப்படையாகக் கொள்ளவில்லை என்றே கூறலாம்.

உயர்திணைக் குறிப்பு வினை பற்றிக் கூறும் பொழுதும்
''அதுச்சொல் வேற்றுமையுடைமையானும்
கண்ணென் வேற்றுமை நிலத்தினாலும்
ஒப்பினானும் பண்பினானுமென்று
அப்பாற் காலம் குறிப்பொடு தோன்றும்'' (213

''அன்மையின் இன்மையின் உன்மையின் வன்மையின்
அன்னபிறவுங் குறிப்பொடு கொள்ளும்
என்ன கிளவியும் குறிப்பே காலம்'' (214)
இதனையும் குறிப்பொடு வருஉம் காலக்கிளவி என்றே கூறுகின்றார்.

மூன்று காலமுங் குறிப்பொடு கொள்ளும் எனத் தொல்காப்பியர் கூறுவதால் தெரிநிலை வினை தெளிவாகக் காலங்காட்டும் குறிப்பு வினை குறிப்பாகக் காலங்காட்

டும் என்ற பிற்கால இலக்கணகாரரின் கோட்பாட்டினைத் தொல்காப்பியர் கொண்டிருக்கவில்லை என்பதும் தெரிகின்றது. வெளிப்படக் காலம் விளக்குவனவற்றைத் தெரிநிலை வினையெனவும் வெளிப்படக் காலம் விளக்காதனவற்றைக் குறிப்பு வினையெனவும் கொள்ளும் மரபு தொல்காப்பிய உரைகாரர் எல்லோரிடமும் காணப்படுகின்றது. தொல்காப்பியர் குறிப்புக்கும் வினைக்குமுள்ள வேறுபாட்டினை ஏற்படுத்துவதற்குக் காலத்தைக் கொள்ளாது தொழில் நிகழ்ச்சியையே கொண்டுள்ளார். நன்னூலாரும் வினையியலில் தெரிநிலைவினை பற்றிக் கூறும் பொழுதும் குறிப்பு வினை பற்றிக் கூறும் பொழுதும் தொல்காப்பியரின் கருத்தையே பின்பற்றுகின்றார்.

''செய்பவன் கருவி நிலஞ் செயல் காலம்
செய்பொருளாறும் தருவது வினையே'' (ந 320)

''பொருண் முதலாறினும் தோற்றி முன் ஆறனுள்
வினை முதல் மாத்திரை விளக்கல் வினைக் குறிப்பே'' (ந 321)

அத்துடன் முற்று வினைபற்றி இலக்கணம் கூறுமிடத்து,

''பொதுவியல்பு ஆறையும் தோற்றிப் பொருட்பெயர்
முதல் அறு பெயரவது ஏற்பில முற்றே'' (ந 323) என்றே கூறியுள்ளார்.

இங்கு அவர் தெரிநிலை குறிப்பு எனும் பாகுபாட்டை வலியுறுத்தவில்லை. அப்படி வலியுறுத்தாவிடில் தொல்காப்பியர் கூறியது போல இரண்டுமே காலங்காட்டுவன. ஆனால் அவற்றுடைய வேறுபாடு தொழில் நிகழ்ச்சியே என உய்த்துணர வைக்கின்றார். பிற்கால இலக்கணகாரர் யாவருமே தெரிநிலை – குறிப்பு என்பன காலத்தைக் காட்டும் பண்பினாலேயே வேறுபடுகின்றது என்பர். இத்தகையோருடைய கோட்பாட்டை ஆறுமுகநாவலர் இலக்கணச் சுருக்கத்திற் கொடுத்துள்ள வரைவிலக்கணங்கள் நன்கு விளக்குவனவாக அமைகின்றன.

''தெரிநிலை வினையாவது காலங் காட்டும் உறுப்புண்மையாலே
காலம் வெளிப்படத் தெரியும்படி நிற்கும் வினையாம்;
குறிப்பு வினையாவது காலங் காட்டும் உறுப்பின்மையாலே காலம்
வெளிப்படத் தெரிதலின்றிச் சொல்வோனது குறிப்பினாலே தோன்றும்படி
நிற்கும் வினையாம்''

ஆறுமுகநாவலரின் இக்கருத்து இன்றைய மொழி வழக்குப் பொருந்துவதாகவேயுள்ளது. இன்று தெரிநிலை வினைகள் காலங் காட்டும் இடைநிலைகள் தோன்ற வெளிப்படையாகவும் குறிப்பு வினைகள் அவை இல்லாமல் குறிப்பாகவும் காலத்தைக் காட்டுகின்றன. காலங் காட்டும் விகுதிகள் இடைநிலைகள் பற்றி நன்னூலார் பதவியலிற் கூறுவார்; தொல்காப்பியர் கூறவில்லை என்பதனை மேலே காட்டினோம்.

நன்னூலார், ''தடற ஒற்று இன்னே ஐம்பால் மூவிடத்து
இறந்த காலம் தரும் தொழில் இடைநிலை'' (ந 142)

என்பதன் மூலம் இறந்தகால இடைநிலைகளையும்

''ஆநின்று கின்று கிறு மூவிடத்தின் ஐம்பால்
நிகழ் பொழுதறை வினையிடை நிலை'' (ந 143)

என்பதன் மூலம் நிகழ்கால இடைநிலைகளையும்

''பவ்வமூவிடத்து ஐம்பால் எதிர்பொழுது
இசைவினை இடைநிலையாமிவை சில இல'' (ந 144)

என்பதன் மூலம் எதிர்கால இடைநிலைகளையும் தருகின்றார்.

விகுதிகள் காலங்காட்டுவது பற்றித் தொல்காப்பியர் கூறாவிட்டாலும் வினையியலுக்கு வரைந்த உரையில் விகுதிகள் காலங்காட்டுவது பற்றித் தொல்காப்பிய உரையாசிரியர்களான இளம்பூரணர், சேனாவரையர் முதலியோர் குறித்துள்ளனர். அவையும் இங்கு குறிப்பிடத்தக்கன.

1. உயர்திணைத் தன்மைப் பன்மை வினைமுற்று
   - அம், ஆம், எம், ஏம் – மூன்று காலமும் காட்டும்
   - கும், டும், தும், றும் – எதிர்காலம்

2. உயர்திணைத் தன்மை ஒருமை வினைமுற்று
   - கு, டு, து, று
   என், ஏன் – மூன்று காலமுங் காட்டும்
   அல் – எதிர்காலம்

3. உயர்திணைப் படர்க்கை ஒருமை வினைமுற்று
   - அன், ஆன், அள், ஆள் – மூன்று காலமுங் காட்டும்

4. உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினைமுற்று
   - அர், ஆர் – மூன்று காலமுங் காட்டும்
   - ப எதிர்காலம்

5. அஃறிணை ஒருமைத் தெரிநிலை வினைமுற்று
   - து – மூன்று காலமுங் காட்டும்
   று – இறந்த காலம்
   டு – குறிப்பு

6. அஃறிணைப் பன்மைத் தெரிநிலை வினைமுற்று
   - அ – மூன்று காலமுங் காட்டும்
   ஆ – மூன்று காலத்திற்குமுரித்தாயினும்
   எதிர்மறையாக வரும்
   வ – எதிர்காலம்

7. விரவு வினை – முன்னிலை ஒருமைத் தெரிநிலை வினைமுற்று
   - இ – எதிர்காலம்
   - ஐ, ஆய் – மூன்று காலமுங் காட்டும்

8. விரவு வினை – முன்னிலைப் பன்மை வினைமுற்று
   - இர், ஈர் – மூன்று காலமுங் காட்டும்
   மின் – எதிர்காலம்

நன்னூலார், 144 ஆம் சூத்திரத்தில் 'சிலவில' என்று குறிப்பிடுவதனால் பகுதி, விகுதி காலம் காட்டும் என்பதனை உணர்த்துகின்றார்.

''றவ்வொடு உகர உம்மை நிகழ்வு அல்லவும்
தவ்வொடு இறப்பும் எதிர்வும் டவ்வொடு
கழிவும் கவ்வொடு எதிர்வும் மின்னேவல்
வியங்கோள் இம்மார் எதிர்வும் ப அந்தம்
செலவொடு வரவும் செய்யும் நிகழ்பும் எதிர்வும்
எதிர்மறை மும்மையும் ஏற்கும் ஈங்கே'' (ந 145)

உதாரணம்

சென்று, சென்றும், சேறு, சேறும்
வந்து, வந்தும், வருது, வருதும்
உண்டு, உண்டும், உண்கு, உண்கும்
உண்மின், உண்ப, உண்ணும், உண்ணாய்
உண்க, வாழிய, வாழியர், உண்மார்

தொடு - தொட்டான், விடு - விட்டான், புகு - புக்கான், நடு - நட்டான், உறு உற்றான், பெறு - பெற்றான் எனப் பகுதியிரட்டித்தும் காலங் காட்டும்.

தொகுத்து நோக்கும் பொழுது, தொல்காப்பியர் வினையானது காலங்காட்டும் எனத் தெளிவாகக் கூறாது 'நினையுங் காலைக்' காலமொடு தோன்றும் என ஆரம்பத்திற் கூறிப்பின் அடுத்த மூன்று சூத்திரங்களாலும் எச்சவியலில் வரும்.

''இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றச்
சிறப்புடை மரபின் அம்முக்காலமும் ...'' என்ற சூத்திரத்தாலும்

வினை காலம் காட்டும் என்பதனை உணர்த்துகின்றார். காலங் காட்டுவற்குரிய விகுதிகளையோ இடைநிலைகளையோ சுட்டவில்லை. நன்னூலாரும் தொல்காப்பியர் போலத் தொழிலை அடிப்படையாகக் கொண்டு வினையைப் பாகுபடுத்தியிருந்தாலும் வினைகாலங் காட்டுவது பற்றி உறுதியாகக் கூறியுள்ளார். பதவியியலிற் காலங் காட்டும் இடைநிலைகள் விகுதிகள் என்பனவற்றை வெளிப்படையாகக் கூறியுள்ளார். இக்கால வழக்கில் தெரிநிலைவினை, குறிப்புவினை காலத்தை அடிப்படையாகக் கொண்டே பகுக்கப்படுகின்றன. நன்னூலார் கூறும் இலக்கணம் ஆறுமுகநர்வலர் முதலியோரின் கூற்றால் இக்கால வழக்கிற்குப் பொருந்துவதாகின்றது.

(இக்கட்டுரை கலாநிதி அ. சண்முகதாஸ் எழுதிய ''தமிழ்மொழி இலக்கண இயல்புகள்'' என்ற நூலை ஆதாரமாக வைத்து எழுதப்பட்டது.) □

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
வர்த்தக மாணவர் ஒன்றியத்தின்
வரவு மலர் சிறப்புற
வாழ்த்துகிறோம்.

**K. K. A.**
**KANDIAHPILLAI.**

316. HOSPITAL ROAD,
JAFFNA.

**வரவு செழிப்புடன்**
**விருட்சம் போல் வளர**
**வாழ்த்துகிறோம்**

- விவசாயக் கிருமி நாசினி
- களை நாசினி
- உர வகைகள்

**"LANKEM"**

AREA DEALER DEPOT
219, 221 POWER HOUSE ROAD,
JAFFNA.




வெலிங்டன் சந்திக்கருகில்

# UNIKCO COMPUTER CENTRE

**கம்பியூட்டர் பயிற்சி நெறிகள்**
**நடைபெறுகின்றன**

- Basic Language, (Including Graphics Sound and Fills)
- PASCAL Language
- d. BASE III PLUS and MS – DOS
- LOTUS 1-2-3 and MS – DOS
- WORD PROCESSING (Word Star Rel 5.5) and MS – DOS)

*Equipment Used:* ACER, ARC Computers (IBM Compatibles)

மேலதிக விபரங்களுக்கு

**37, CLOCK TOWER ROAD, — JAFFNA.**

வரவே நீ வாழி!

**CITY MEDICALS**

487, HOSPITAL ROAD,

JAFFNA.

**கயல்விழி**

**நகைப் பூங்கா**

தங்கப் பவுண் நகை வியாபாரம்

ஆடர் நகைகள் 22 கரட் தங்கத்தில்

சிறந்த முறையில் செய்து

கொடுக்கப்படும்.

224/B, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

எண்ணற்ற ரகங்களில்

இணையற்ற டிசைன்களில்

திருமணம் மற்றும் முகூர்த்தப் பட்டுப் பிடவைகளை

உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய

ஏற்றதோர் எழிற்கூடம்

**நம்பிக்கை, நாணயம், கைராசி!**

இன்றே விஜயம் செய்யுங்கள்

**இளவரசி ரெக்ஸ்ரைல்ஸ்**

57 நவீன சந்தை (உட்புறம்) — யாழ்ப்பாணம்.

# "இந்து சமயப் பரம்பல் — அன்றும் இன்றும்"

இந்தியப் பண்பாட்டம்சங்கள் புராதன காலத்திலும் மத்திய காலப்பகுதிகளிலும் குறிப்பாகத் தென்கிழக்காசிய நாடுகளிலும், அண்மைக்காலங்களாக மேற்குலக நாடுகளிலும் நன்கு பரவிவருவதை அவதானிக்க முடிகின்றது. இது பற்றி அறிந்து கொள்வதற்கு எமக்கு தொல்பொருட்களான கட்டிட இடிபாடுகள், பல்வேறு திருவுருவங்கள், தமிழ்மொழி வடமொழிகளிலான சாசனங்கள், முத்திரைகள் என்பனவும், இலக்கியச் சான்றுகளான ஆகமங்கள், தர்மசாஸ்திரங்கள், இதிகாச புராணங்களின் செல்வாக்குகள், வெளிநாட்டு யாத்திரீகர்களான பாஹியான், யுவான் சுவாங், இத்சிங், ஹிரோதோதஸ், தீசியஸ், பிளினி, தாலமி, ஸ்ராபோ ஆகியோர்களின் குறிப்புக்களும் மற்றும் இப் பிராந்தியத்திலுள்ள பல்வேறு பழக்க வழக்க நடைமுறைகளும் பெரும் துணை புரிகின்றன.

இந்துப் பண்பாடானது கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்பத்தில் இருந்தே இந்தியாவுக்கு வெளியே செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியிருந்தது எனப் பொதுவாக இந்திய வரலாற்றாசிரியர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்தியப் பண்பாட்டுக் கூறுகள் உலகின் பல இடங்களிலே பரவுவதற்கு அரசர்கள், அந்தணர்கள், பௌத்த குருமார்கள், குடியேற்றவாதிகள், வணிகப் பெருமக்கள், அரசியல் சூழ்நிலைகள் ஆகியன பிரதான காரணிகளாக அமைந்துள்ளதை இது தொடர்பாக எழுதப்பட்ட நூல்களில் நன்கு எடுத்துக்காட்டப்பட்டதிலிருந்து நாம் அறியமுடிகின்றது. இந்தியா மேற்கே மேற்காசிய நாடுகளுடனும், வடக்கே திபெத்துக்கு அப்பாலும், கிழக்கே சீனம், தைவான், ஜப்பான் முதலிய நாடுகளுடனும் தென்கிழக்கிலே ஈழத்துடனும், தென்கிழக்காசிய நாடுகளான பர்மா, தாய்லாந்து, லாவோஸ், கம்போடியா, வியட்நாம், சுமாத்திரா, மலேசியா, சிங்கப்பூர், போர்ணியோ, ஜாவா, செலிபஸ், பிலிப்பைன்ஸ் முதலிய நாடுகளுடனும் தொடர்பு கொண்டு அங்கெல்லாம் இந்தியப் பண்பாட்டினை பரப்பியதன் விளைவாக, இந்தியாவுக்கு அப்பாலே "ஒரு பேரிந்தியா" (Greater India) திகழ்ந்ததை அறிய முடிகின்றது. இந்நாடுகளின் பண்பாட்டம்சங்களுடன் சிறப்பாக இந்துப்பண்பாட்டம்சங்கள் நன்கு விரவிப்பரவியிருந்தன.

உலகிலே வாழ்ந்த, தற்பொழுது வாழ்ந்து வருகின்ற மக்கள் பல இனத்தவராகவும், பல மொழிகளைப் பேசுகின்றவர்களாகவும் பல்வேறு வகையான பழக்க வழக்கங்களையுடையவர்களாகவும் பல்வேறு மத அனுஷ்டானங்களை மேற்கொள்பவர்களாகவும் பல்வேறு நம்பிக்கைக்ளைப் பேணி வருபவர்களாகவும் பல்வேறு நாகரிகங்களையுடையவர்களாகவும் காணப்படுகின்றார்கள். மக்கள் தமக்கு அப்பாற்பட்ட சக்தியொன்று உண்டு, அச்சக்தியினை இறைவன் என்றும், இவ்விறைவனுக்கு பல்வேறு நாமங்கள் சூட்டியும், வழி

திரு. ப. கணேசலிங்கம்
விரிவுரையாளர்,
இந்துநாகரீகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பாட்டு நெறிமுறைகளையும் வகுத்து வழி பாடியற்றி வருவதைக் கண்கூடாகவே காணலாம். ''உள்பொருள் ஒன்று அதனை அறிஞர்கள் பல பெயர் இட்டு அழைப்பார் கள்'' என்ற இருக்குவேத மொழிக்கேற்ப, நமது மக்கள் இயற்கையின் ஒவ்வொரு கூறு களையும், இறந்த மூதாதையர்கள், போர் வீரர்கள், சமூக நலனுக்காக உழைத்து உயிர்துறந்தவர்கள். தேவராசா வழிபாடு மற்றும் மரங்கள், பாம்பு, சூரியன், அக்கினி போன்ற இயற்கைக் கூறுகள் ஒவ்வொன் றையும் நன்கு போற்றித் துதிக்கின்றார்கள். இத்தகைய வணக்கமுறைகள் இந்தியமக்க ளிடம் மட்டுமல்லாது ஏனைய நாட்டு மக் களிடமும் நன்கு பேணப்பட்டிருந்ததையும், தற்பொழுதுகூட நன்கு பேணப்பட்டு வரு வதையும் அறியமுடிகின்றது. இத்தகைய வணக்க முறைகளில் சில எல்லா நாட்டவர் களுக்கும் எல்லா மதத்தவர்களுக்கும் பொது வானவையாக விளங்குகின்றன. இவ் வணக்க முறைகள் இந்தியாவிலிருந்துதான் சிறப்பாக இந்து சமயத்திலிருந்துதான் ஏனைய நாட்டு மக்களிடையே பரவினவா? அல்லது உலக மக்களிடமிருந்து இந்திய மக்களிடம் பரவினவா? அல்லது உலகிலே வாழ்ந்த மக்களிடையே காணப்பட்ட பொதுவான வணக்கமுறையா? என்பது நன்கு ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.

உலகிலே சிறப்புற்று விளங்கிய நாகரி கங்களுள், சுமேரிய நாகரிகம், எகிப்திய நாகரிகம், சிந்துவெளி நாகரிகம், பாரசீக நாகரிகம், சீன நாகரிகம், மைனோவன் நாகரிகம், கிரேக்க நாகரிகம் போன்றன விளங்குகின்றன. இந்துநாகரிக மக்கள் இந்தியர்களின் சிறப்பாக தமிழர்களின் பல் வேறு பழக்கவழக்கங்களை தத்தமது வாழ்க்கை நெறிகளில் கைக்கொண்டு வந்த தாக அறியமுடிகின்றது. ஆதிகாலத்தில் பல்வேறு நாட்டு இனமக்களும் இயற்கை யின் பல்வேறு கூறுகளையும் கடவுளர்களா கவும், தேவதைளாகவும் தேவனாகவும் போற்றி வழிபட்டிருக்கின்றார்கள்.

இந்தியாவுக்கு அப்பால் இந்துப்பண் பாட்டம்சங்கள் நன்கு பரவுவதற்கு காரணி களாக வியாபாரமும் அரசியல் ஆதிக்க முமே முக்கியமானவையாக விளங்கின எனக் கூறப்படுகின்றது. தொன்று தொட்டே இந்தியவணிகர்கள் கடல்கடந்து மேலை நாடுகளுக்கும், தென்கிழக்காசிய நாடுகளுக்கும் சென்று, அங்கெல்லாம் தங் கள் வணிகக் குடியேற்றங்களை அமைத் துக் கொண்டு, இந்தியப் பொருட்களை அங்கு விற்று அவ்வந்நாட்டுப் பொருட் களை இங்கு கொணர்ந்து, பண்டமாற்றுச் செய்ததோடு பண்பாட்டுப் பரிமாற்றம் செய்தார்கள் என்பதும் வரலாற்றில் தெளி வாகும விடயமாகும்.

தென்கிழக்காசிய நாடுகளில் புராதன காலங்கள் முதல் தற்காலம் வரையிலும் பல்வேறு நிலைகளிலான இந்துப்பண்பாட்டு மரபுகள் பேணப்பட்டு வருவதாக அறியக் கூடியதாகவுள்ளது. இந்தியப் பண்பாட்டம் சங்கள் இந்தியாவுக்கு வெளியே பரவிய முறையினை வரலாற்றாசிரியர்கள் சுட்டும் பொழுது ''கடல் கடந்த நாடுகளில் இந்தி யப் பண்பாடு'', ''அயல்நாடுகளில் இந்துப் பண்பாடு'', ''தென்கிழக்காசிய நாடுகளில் இந்துப் பண்பாடு'', ''இந்தியப் பண்பாட்டு அலைகள்'', ''இந்திய மயமாக்கம்'', ''இந் தியா ஒரு பேரிந்தியா'', ''பரந்த இந்தியா அல்லது அகன்ற இந்தியா'' போன்ற பெயர்களில் சுட்டுவதை அறியமுடிகின்றது. இந்தியாவில் வாழ்ந்த, தற்பொழுது வாழ்ந்து வருகின்ற மக்களிடமும் சிறப்பாக இந்துக்கள் வணங்கும் தெய்வங்கள், அவர் கள் மத்தியிலே நிலவும் வழிபாட்டு முறை கள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், நடையுடை பாவனைகள், கலைமரபுகள், திருக்கோயில் வழிபாட்டு மரபுகள், வட்

மொழி தமிழ்மொழிகளிலான தெய்வீக நூல்களைப் போற்றும் மரபு போன்ற இன்னோரன்ன மரபுகளை தங்களது நாளாந்த வாழ்க்கையில் நன்கு பேணி வளர்ப்பவர்களாக தென்கிழக்காசிய நாட்டு மக்கள் ஓர் காலப்பகுதிவரை விளங்கினர். அவர்களில் ஒரு சாரார் இன்று வரையிலும் சில நாடுகளில் இத்தகைய பண்பாட்டம்சங்களை கைக்கொண்டு வருவதையும் அவதானிக்கலாம்.

இந்தியப் பண்பாட்டு வளர்ச்சியில் சிறப்பாக இந்துப் பண்பாட்டம்சங்களின் வளர்ச்சிக்கு இந்தியாவைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாது வெளிநாட்டவர்களும் பெரும்பங்காற்றியுள்ளார்கள். இந்தியாவைப் பொறுத்தவரையில் இத்தகைய நடவடிக்கைகளுக்கு அரசர்கள் குறிப்பாக பல்லவ மன்னர்களும் சோழமன்னர்கள், அந்தணப் பெருமக்கள், பௌத்த குருமார்கள், வணிகப் பெருமக்கள் போன்றோர்கள் முன்னின்றுழைத்திருக்கின்றார்கள். இந்திபப் பண்பாட்டு மரபில் காணப்பட்ட இந்துப் பண்பாட்டம்சங்கள் வெளிநாட்டவர்களைப் பெரிதும் கவர்ந்திருக்கின்றன. அண்மைக் காலத்திலே வெளிநாட்டறிஞர்கள் இந்துப் பண்பாட்டம்சங்களின் தொன்மையினை ஆராய்ந்து அறிந்து நயத்தலில் அதிக ஆர்வம் காட்டியுள்ளார்கள். இவ்விடயம் தொடர்பான பல தரவுகளை கலாநிதி ப.கோபாலகிருஷ்ணன் அவர்கள் தனது, ''கிழக்கிலும் மேற்கிலும் இந்துப் பண்பாடு – சில அண்மைக்காலப் போக்குகள்'' என்ற கட்டுரையில் பின்வரும் தலைப்புக்களில் எடுத்துக்காட்டியுள்ளார். ''மேற்குலக அறிஞர்கள் உவந்து நயந்த இந்து சமயம், இந்துப் பண்பாடு தொடர்பான மேற்குலக அறிஞரின் ஆய்வுப்பணிகள், மேற்குலகில் பகவத்கீதை, சைவசித்தாந்தம் பெற்ற மேன்மை, மேற்குலகப் பண்பாட்டுப் பணியில் கிழக்குலகச் சான்றோர்'' ஆகிய முக்கியம்சங்களாகும். மேலும் தமிழகச் சமய இலக்கியங்களில் அயல்நாட்டினர் கொண்டிருந்த ஈடுபாட்டினையும் பங்களிப்புக்கள் பற்றியும் டாக்டர் தி. பி. சித்தலிங்கையா, தனது ''தமிழ்ச் சமய இலக்கியங்களும் அயல் நாட்டினரும்'' என்ற கட்டுரையில் நன்கு விபரித்துள்ளமை இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

இந்து சமயத்தின் தொன்மையினையும் சிறப்பினையும் நன்கு உணர்ந்து நயத்தபிற நாட்டவர்களுள் கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களைச் சேர்ந்தவர்களும் இருந்திருக்கின்றார்கள். இவர்கள் இந்து சமயத்தின் இனிய சிறப்பியல்புகளில் கவர்ந்து இழுக்கப்பட்டவர்கள். இவர்களுள் வடநாட்டுப் பக்தி நெறியாளர்களான கபீர்தாஸர், குருநானக் ஆகியோர் இஸ்லாம் மதத்திலிருந்து இந்து சமயத்திற்கு மாறியவர்கள், இதே போல நவீனகால இந்து சமய நிறுவனங்களுள் ஒன்றான பிரம்மஞான சபையினைத் தாபித்த கிறிஸ்தவ மதத்தவரான அன்னிப் பெசண்ட்டு அம்மையாரும் இந்து சமயத்திற்கு மாறியமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மத்திய, தற்காலப் பகுதிகளில் இந்துப் பண்பாட்டின் அரிய விடயங்களை அறிந்து நயத்த, வெளிநாட்டு அறிஞர்கள் பலர். இவர்கள் இந்து சமயம் தொடர்பான தெய்வீக அருட்பாடல்களையும் தத்துவ சாஸ்திர நூல்களையும் ஆங்கிலம், ஜேர்மன், பிரெஞ்சு முதலிய மொழிகளிலும் மொழி பெயர்த்தும் வியாக்கியானங்கள் எழுதி, உலகளாவிய ரீதியில் பரப்பிய பெருமை பெற்றுள்ளார்கள். இவர்களுள் விக்டர் கசின், மாக்ஸ்முல்லர், போல்தியுஸன், வீபர், மொனியர் வில்லியம்ஸ், பெரிடேல் கீர், வின்டர் நிட்ஸ், மக்டொனால்ட், டாக்டர் ஜி. யூ. போப், டாக்டர் ஷோமரஸ், ரோமன் ரோலந்து, டாக்டர் ஆர்னோ

லேமன், எப். கிஸ்சுபிரி, ஜி. ஈ. பிலிப்சு, ஜே. எஸ். எம். ஹூப்பர், பெர்சிவல், ஜே. ஸ்டோக்ஸ், ஹோரஸ் கிங்டன், ரெவரண்ட டியூக்ஸ், ஜே. எச். பீட் ஆகியோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமிழகக்கோயில்களை அயல்நாட்டவரும் கண்டு அகம்மிக மகிழ்ந்து போற்றியுள்ளனர். ஆட்சன் என்ற ஆங்கிலேயர் காஞ்சிபுரம் திருவேகம்பர் கோயில் மதிலைச் செப்பனிட்டார். வியோனார்ட் பிளேசு என்னும் அயலவர், மதுராந்தகம் பெருமாள் கோயிலுக்குத் திருப்பணி செய்தார். வில்லியம் காரோ என்பவர் பவானி சங்கமேசுவரர் கோயில் வேதநாயகி அம்பிகைக்குத் தந்தத்தால் செய்த ஊஞ்சல் ஒன்றை வழங்கி மகிழ்ந்துள்ளார். மதுரைக் கோயில் மீனாட்சியம்மைக்கு ரூஸ் பீட்டர் என்னும் வெள்ளையர் தங்கத்தால் செய்து மணிகள் பதிப்பித்த அங்கவடிகளை அளித்திருக்கின்றார். கிழக்கிந்தியர் கம்பெனியைச் சேர்ந்த இராபாட் கிளைவ் நவரத்தின மாலை ஒன்றைக் காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயிலுக்குக் கொடுத்துள்ளார். உலகப் புகழ்பெற்ற சாமர்செட் மாகயூன் என்னும் புதினநூல் ஆசிரியர் தாம் மதுரைக் கோயிலைக் கண்டு வியந்து, விம்மிதமுற்றதாகத் தம்நூலில் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய செய்திகளால் இந்துக்கோயில்களின் சிறப்பினையும் பெருமையினையும் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

இந்தியக்கோயில்கள் குறிப்பாகத் தமிழகக் கோயில்களின் கட்டடக் கலைச் சிறப்பும், சிற்பக்கலை வளமும், ஜாவா, பாளி, போர்ணியோ, பர்மா, மலேயா, இந்தோனேசியா, சயாம், கம்போடியா, சம்பா முதலிய கடல் கடந்த அயல்நாடுகளிலும் கூடப் பரவி விளக்கமுற்றன. ஜாவாவிலுள்ள போராபுதூர் (கி. பி. 750 – 850) புத்தர் கோயிலும், கம்போடியா அங்கோர் தாம் (கி. பி. 802 – 820) சிவன்கோயிலும், அங்கோர்வாட் (கி. பி. 1110 – 1150) பெருமாள் கோயிலும் தமிழகக் கோயிற் கட்டடக்கலை, சிற்பக்கலைகளினுடைய வளர்ச்சியின் சிறப்பையும் வளர்ச்சியினையும் விளக்குவனவாகும்.

மேற்குலக நாடுகளில் இந்துப் பண்பாட்டுச் சிந்தனைகளை பரப்பிய இந்தியர்களுள் சுவாமி விவேகானந்தர், டாக்டர் இராதாகிருஷ்ணன், ஸ்ரீ அரவிந்தர், வங்கக் கவிஞர் அரவிந்திரநாத் தாகூர், சகோதரி நிவேதிதா போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இந்துப் பண்பாட்டம்சங்களை மேற்குலக நாடுகளில் பரவுவதற்கு காரணமாய் இருந்தவர்களுள் கிழக்கு நாட்டில், இலங்கையைச் சார்ந்த இந்து சமயப் பெரியார்களும் அடங்குவர். இவர்களில் சேர். முத்துக்குமாரசுவாமி, சேர். பொன்னம்பலம் இராமநாதன், சேர். பொன்னம்பலம் அருணாசலம், கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி, சீமாட்டி லீலாவதி இராமநாதன் ஆகியோர் கிழக்கு நாடுளிகல் மட்டுமன்றி மேற்குலக நாடுகளிலும் மக்கள் நன்கு பாராட்டத்தக்க வகையில் இந்துப் பண்பாட்டு விழுமியங்களை உலகளாகிய நிலையில் மேன்மை அடையச் செய்தார்கள். இந்து சமயத்தவர்களின் பிரதான நூல்களாக விளங்குகின்ற பகவத்கீதை, சைவசித்தாந்த நூல்கள், ஆகியவற்றின் சிந்தனைகளை மேற்குலகில் பரப்பியவர்களுள் டாக்டர் இராதாகிருஷ்ணன், அன்னிப்பெசன்ற் அம்மையார், எட்வேர்ட் கார்பெண்டர், சுவாமி விவேகானந்தர், சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம், எச். ஆர். ஹொஸிங்ரன் ஆகியோர்களைக் குறிப்பிடலாம்.

தென்கிழக்காசிய நாடுகளில் இந்து சமயத்தின் அறுவகைச் சமய நெறிகளான சைவம், வைணவம், காணாபத்தியம், சௌரம், சாக்தம், போன்ற சமயங்களும்

அவைதீக சமய நெறிகளுள் ஒன்றான பௌத்த சமயமும் நன்கு செல்வாக்குப் பெற்றிருந்ததை நாம் அறியமுடிகின்றது. இந்நாடுகளில் தென்னிந்தியர்களின் செல்வாக்கு அதிகமாகக் காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது. தென்கிழக்காசிய நாடுகளில் தமிழ், வடமொழிச் செல்வாக்குகளும் விரவிக் காணப்பட்டன. பல்வேறு வணக்க முறைகள் இந்நாடுகளில் காணப்பட்டாலும் கூட, சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுகின்ற சைவசமய நெறியே முதன்மையானதாகவும் மேன்மையுற்ற நிலையிலும் காணப்பட்டது. சிவனது பெருமைகளைக் கூறுகின்ற தெய்வீக வரலாற்று நூல்கள், தத்துவ சாஸ்திர நூல்கள் எல்லாம் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு இருந்தன. இவற்றிலிருந்து சிவ வழிபாட்டின் பழமையை நாம் ஓரளவு மட்டிடக்கூடியதாகவுள்ளது. உலக நாட்டில் வாழ்ந்த, தற்பொழுது வாழ்ந்து வருகின்ற மக்கள் சிவனது அம்சமான இலிங்கத்தினை வழிபட்டுவருகின்றனர். இவ்விலிங்க வழிபாடானது உலகம் முழுவதிலும் காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது. உலகநாடுகளில் சிவ வழிபாடு, சைவசமயம் என்ற நோக்குகளிலே பல்வேறு கட்டுரைகளை ந. சி. கந்தையாபிள்ளை அவர்கள் எழுதியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. ஒரு காலப்பகுதியிலே உலகநாடுகள் எங்கும் சிவ வழிபாடு நன்கு வியாபித்திருந்ததை அறிந்து கொள்ள முடிகின்றது. உலகநாடுகளிலே சிவனுடன் இணைத்து சக்தியும், மற்றும் சிவனது ஊர்தியாகப் போற்றப்படுகின்ற இடபமும் (ரிஷபம்) அணிகலனான பாம்பும் நன்கு வணங்கப்பட்டதை அறியமுடிகின்றது. சிவனையும் சக்தியையும் ஒருங்கே காட்டும் அர்த்தநாரீசுவரரையும் தென்கிழக்காசியச் சிற்பிகள் அழகிய சிற்பமாக வடித்துள்ளனர். அச்சிற்பங்களைக் கொண்ட கோயில்களில் பூசைகள் நடத்தப்பட்டன என்பதற்கும் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. மேலும் சிவனுடன் விட்டுணுவையும் சேர்த்து, அரி – அரன் என்ற பெயருடன் தென்கிழக்காசிய நாட்டு மக்கள் வணங்கி வந்தார்கள். தென்கிழக்காசிய நாட்டு மக்களிடையே வைதீக சமயம் மட்டுமன்றி அவைதீக சமயமான பௌத்த மதமும் நன்கு செல்வாக்குப் பெற்றிருந்தன. இந் நாட்டு மக்களிடையே ஒருவகையான சமய ஒருமைப்பாடு காணப்பட்டது என்றே கூறலாம்.

உலகநாடுகளிலும் சிறப்பாக தென்கிழக்காசிய நாடுகளிலும் இந்தியப் பண்பாடும் இந்துப் பண்பாட்டம்சங்களும் நன்கு செல்வாக்குப் பெற்றிருந்தன தொடர்பான பல்வேறு தரவுகளை வரலாற்றாசிரியர்கள் வெளியிட்டிருக்கின்றார்கள். சண்மதங்களுள் ஒன்றான ''சைவசமயமும் சிவவழிபாடும்'' இந்தியாவுக்கு அப்பால் நன்கு பரவியது தொடர்பான விபரங்களை, இதோடு தொடர்பான நூல்களில் ஆசிரியர்கள் நன்கு எடுத்துக்காட்டியுள்ளார்.

தென்கிழக்காசிய நாடுகளான தாய்லாந்து, இந்தோனேசியா, கம்போடியா, மலேசியா, யாவா, வியட்நாம், பர்மா, சுமாத்திரா, பாலி, பிலிப்பைன் ஆகியனவற்றில் இந்து சமயம் சார்ந்த பல்வேறு திருவுருவங்களும், சிற்பங்களும் கல்வெட்டுச் சாசனங்களும் கிடைத்துள்ளது. இச்சான்றுகளும் சிவன், விஷ்ணு, சக்தி, விநாயகர், சூரியன் ஆகிய தெய்வங்களது வடிவங்கள் பல்வேறு நிலைகளில் சித்திரிக்கப்பட்டிருப்பதாக இதுபற்றி ஆராய்ந்து கருத்துக்களை வெளியிட்ட ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். இச்சான்றுகளிலிருந்து இந்து சமயம் இந்நாடுகளில் ஒரு காலப்பகுதி வரை நன்கு மேன்மையுற்றிருந்ததென்பதையும், இங்கு வாழ்ந்த மக்கள் இந்து சமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள் என்பதையும், இந்துக் கோயில்களோ அல்லது வழி

பாட்டிடங்களோ அமைக்கப்பட்டு தெய்வங்களுக்கு வழிபாடுகள் செய்யப்பட்டிருக்கலாம் என்பதையும் அறியமுடிகின்றது.

தென்கிழக்காசியாவில் பல்வேறு மதங்களிடையே ஒருமைப்பாட்டினை நாடிப் போற்றுவதற்குக் காரணமாக அமைவது, அரசரைத் தெய்வமாகப் போற்றிய வழிபாட்டு முறையாகும். இவ்வழிபாடு, 'தேவராச' வழிபாடு எனப்பெயர் பெற்றது. நாட்டை அரசாளும் அரசரின் ஆற்றல் சிவனிடமிருந்து, சிவலிங்கத்தின் மூலமாகப் பெறப்படுவது என்றும், அச்சக்தி இலிங்கத்தில் வதிவது என்றும், அந்த இலிங்கம் மலையுச்சியில் வைத்துக் காக்கப்படல் வேண்டும் என்றும் கருதப்பட்டது. தேவராச வழிபாடானது கம்போடியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் காணப்படுகின்றது. இந்தோனேசியாவிலும், மலேசியாவிலும் 'பாதார குரு' என்னும் தெய்வம் பிரசித்தி பெற்ற தெய்வமாகும். இத்தெய்வம் சிவபெருமானுடன் தொடர்புடைய தெய்வமாகும்.

கடந்த இருபது ஆண்டுகளாக இந்து நாகரிகப் பரம்பல் ஈழத்தில் இருந்தும் இந்தியாவிலிருந்தும் தென்கிழக்காசிய நாடுகள் தவிர்ந்த மேற்குலக நாடுகள் வரை நன்கு பரவி வருவதை அவதானிக்கலாம். இத்தகைய பரம்பலுக்கான காரணங்களாக வேலைவாய்ப்பு பெறல், பொருளாதாரத்தினை மேன்மையடையச் செய்தல், போர்ச்சூழல், அரசியல் ஸ்திரமற்ற தன்மைகள், உயர்கல்வி கற்றல், திருமணம் செய்தல், நிரந்தர குடியேற்றம் ஆகியனவற்றைக் குறிப்பிடலாம். இவ்விரு நாட்டவர்களுள் ஈழத்திலிருந்து பல்வேறு காரணங்களுக்காக குடிபெயர்ந்து சென்றவர்களின் முயற்சிகளினாலும் இந்தியாவிலிருந்து குடிபெயர்ந்து சென்றவர்களின் முயற்சிகளினாலும் இந்துக் கடவுளர்கள் பலவற்றுக்கு தனித்தனி கோயில்களும் இந்து சமயப் பெரியார்களது பெயர்களில் பல புதிய சமய நிறுவனங்கள் உருவாக்கப்பட்டும் அவற்றில் சமய நடைமுறைகள் பேணப்பட்டு வருவதை அறிய முடிகின்றது. மேலும் இம்மக்கள் தமது வாழ்வியல் நிலைகளிலும் பல்வேறு இல்லறக் கிரியை மரபுகளையும் பேணி வருகின்றார்கள்.

சுருங்கக் கூறின் இந்தியப் பண்பாடு உலகளாவிய ரீதியில் நன்கு பரவியதையும், சிறப்பாக இந்துப் பண்பாட்டம்சங்கள் மேன்மையுற்றிருந்ததையும் அறிய முடிகின்றது. இந்துக்களின் முதன்மைத் தெய்வமான சிவனை முழுமுதலாகப் போற்றுகின்ற சைவசமயமும் இதனோடு தொடர்பான பல்வேறு தெய்வங்களும் உயிரினங்களும் போற்றித் துதிக்கப்பட்டதையும், தற்பொழுதும்கூட இத்தகைய வழக்கங்கள் நடைமுறையில் விளங்குவதையும் அவதானிக்க முடிகின்றது. □

உலகிலேயே அதிகமான வங்கிக் கிளைகளை வைத்திருக்கும் வங்கி இந்தியாவில் இயங்கிவரும் ''ஸ்ரேட் பாங்க் ஒவ் இந்தியா'' என்ற வங்கியாகும். இதற்கு மொத்தம் 10,841 கிளைகளுண்டு.

வணிக வரவு வளமுடன் வளர

எமது நல்வாழ்த்துக்கள்

பாடசாலை உபகரணங்களையும்,
சஞ்சிகைகளையும் மலிவான
விலையில் பெற்றுக் கொள்ளவும்
போட்டோஸ்ரற் பிரதிகளை
உடனுக்குடன் பெற்றுக் கொள்ளவும்
நீங்கள் நாடவேண்டிய இடம்

**மக்மிலன் புத்தகசாலை**

326, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

இன்று அறிமுகமான
புடவைத் திணிசுகளை
இன்றே கொள்வனவு செய்ய
நீங்கள் நாடவேண்டிய
ஸ்தாபனம்

**MALAR TEXTILE**

**18, GRAND BAZAAR**
**JAFFNA**

இந்துவின் வணிக இதழ்
சிறக்க நல்வாழ்த்துக்கள்

இ

பொன்னம்பலம்
களஞ்சியம்

361, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

● வர்ணக் கறுப்பு வெள்ளை
புகைப்படங்களை
(பாஸ்போட் அடையாள அட்டை)

உயிரோவியமான படங்களாகப்
பெற்றுக் கொள்ள இன்றே
நாடுங்கள்

பாரத்
ஸ்ரூடியோ

82/1 & 2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வணிக வரவு வளமுடன் வளர,
எமது நல்வாழ்த்துக்கள்.

எக்ஸ்போ பேனிச்சர்ஸ்
441 கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்
கண்ணாடி நிலையம்
இல, 234 கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

வாழ்த்துகிறோம்

வெஸ்கோ
மருந்தகம் & அழககம்
470, (250) ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

வரவிற்கு எமது நல்லாசிகள்
பாலர் வகுப்பு முதல் பட்டதாரி
வகுப்பு வரை
சகல பாடப்புத்தகங்களும்
கிடைக்குமிடம்.

சுரேகா
புத்தக களஞ்சியம்
25, பஸ் நிலையம்
யாழ்ப்பாணம்.

வாழ்த்துகிறோம்

குகன் ஸ்ரோர்ஸ்
180, (380) ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

# நைமித்திகக் கிரியைகளில் மஹோற்சவம்

*முன்னுரை:*

எமது சமய அனுட்டானங்கள் யாவும் கிரியைகளோடும் சம்பிரதாய பூர்வமான சடங்குகளோடும் தொடர்பு பட்டவையாகவே அமைகின்றன. இது சைவ சமயத்துக்கு மட்டுமன்றி ஏனைய சமயங்களுக்கும் பொருந்துவதே. சைவ சமயத்தைப் பொறுத்தவரை அதன் கட்டுக்கோப்பை நிலைப்படுத்தி வைக்கும் சட்ட அமைப்புப் போன்று இருப்பவை கிரியைகளாகும். சிந்தனையளவில் சமயத்தை நிறுத்தி வைக்காது நமது நாளாந்த வாழ்வுடன் ஒட்டியுறவாடும் நெறிமுறையாக உணர்வுபூர்வமாக இணைந்து வளர்வதற்கு உதவுபவை கிரியைகளேயாகும். இக்கிரியைகளைச் செய்யும் ஒருவர் ஆத்மஞானத்தை அடைய முடியும்.

*கிரியைகளின் வகை:*

இவ்வகையிலே சிறப்புப்பெறும் கிரியைகள் பற்றி ஆகமங்களே மிகவும் விதந்து கூறுகின்றன. இவ்வாகமங்கள் கூறும் கிரியைகளை நாம் இரு வகைகளில் எடுத்து நோக்கலாம். அவை;

1. வீட்டுக் கிரியை
2. கோயிற் கிரியை

சோ. சுஜீவகுமார்
ஆண்டு 13F
வர்த்தகப்பிரிவு

என்பனவாகும். இங்கு வீட்டுக் கிரியைகளை பூர்வக் கிரியை, அபரக் கிரியை எனவும், கோயில்களில் நிகழும் கிரியைகளை ஆன்மார்த்தக் கிரியை, பரார்த்தக் கிரியை எனவும் பிரித்து நோக்கலாம்.

*கோயிற் கிரியைகள்:*

இந்த வகையில் கோயிற் கிரியைகள் எமது சமயத்தில் முக்கிய இடம்வகிக்கின்றன. இக் கோயிற் கிரியைகளை ஆன்மார்த்தம், பரார்த்தம் எனப் பகுத்தாராய வேண்டிய தேவை ஏற்படுகின்றது. ஆன்மாவானது தன்னை ஈடேற்றுதலை நோக்காகக் கொண்டு ஆற்றப்படுவதான கிரியை ஆன்மார்த்த கிரியையாகும். பரந்த நோக்கில் எல்லா உயிர்களதும் நன்மை கருதிச் செய்பவை (லோக க்ஷேமார்த்தம்) பரார்த்தக் கிரியைகள் எனவும் கூறப்படும்.

*பரார்த்தக் கிரியை:*

இவ்வாறு பிரிக்கப்படும் பரார்த்தக் கிரியைகளை வேறொரு வகையில் மூன்று பிரிவாக வகுக்கும், நியதியுமுண்டு. அவை நித்தியம், நைமித்திகம், காமியம் என்பனவாகும். தினமும் ஆலயங்களில் நிகழும் கிரியைகள் நித்தியக் கிரியைகளாம். விசேஷமாக அவ்வப்போது நிகழ்பவை நைமித்திகமாம். வேண்டுதல்கள் காரணமாக நிகழ்பவை காமியக் கிரியைகளாம்.

*நித்தியக் கிரியை:*

இந்த வகையிலே நித்திய பூஜைகள் ஆலயங்களின் வசதிக்கேற்ப ஒரு வேளை

முதல் பன்னிரு வேளைகளில் நிகழும் திருச்செந்தூர் முதலிய தமிழக கோயில்களில் பன்னிரு வேளைகள் பூஜைகள் நிகழ்கிறது. எமது நாட்டில் பல கோயில்களில் ஆறு காலப் பூஜை நடைபெறுகின்றன். இவ் ஆறு காலப் பூஜைகளை கிரியை, நூல்கள் ஷட் கால பூஜை எனக் குறிப்பிடுகின்றன. உஷக்கால பூஜை, காலை சந்தி பூஜை, உச்சிக்கால பூஜை, சாயரட்சை பூஜை, இரண்டாங்கால பூஜை. அர்த்தயாமப் பூஜை எனப் பெயர் பெற்று இவை மக்களிடை வழங்குகின்றன. இவற்றில் உஷக்காலப் பூஜை சூரியன் உதிக்க மூன்றே முக்கால் நாழிகைகளுக்கு முன்னரும், காலை சந்தி பூஜை சூரியனுதித்த பின் ஏழரை நாழிகைகளுக்கு முன்னரும், உச்சிக்கால பூஜை நடுப்பகலிலும், சாயங்காலப் பூஜை சூரியன் அஸ்தமிக்க மூன்றே முக்கால் நாழிகை முன்னரும், இரண்டாங்காலப் பூஜை சாயங்காலப் பூஜையின் பின் மூன்றே முக்கால் நாழிகைகளிலும் நிகழ வேண்டுமென ஆகமங்கள் கூறுகின்றன.

### *நைமித்திகக் கிரியை:-*

அடுத்ததாக நைமித்திகக் கிரியைகளை நோக்கின் இவை நிமித்த கிரியைகள் எனவும் விசேஷக் கிரியைகள் எனவும் காணப்படுகின்றன. இவ்வகைக் கிரியைகள் குறிப்பிட்ட விசேஷ தினங்களில் மட்டும் நிகழ்வன. இவ் விசேஷ தினங்கள் வாரத்திற்கொருமுறை அல்லது இரு வாரங்களுக்கொரு முறை நிகழலாம். சில, மாதத்திற்கொருமுறை சில மாதங்களுக்கொரு முறை நிகழ்வன. வருடம் ஒரு முறையும் பல வருடங்களுக்கொரு முறை நிகழும் நைமித்திகக் கிரியைகளுமுண்டு.

தினந்தோறும் நிகழும் கிரியைகளே வாரமொருமுறை விரிவாக நிகழும் சந்தர்ப்பங்களும் நேரிடலாம். இத் தினங்களில் நித்திய பூஜையில் நிகழும் அபிஷேகம், அலங்காரம், ஆராதனை முதலியனவும், உற்சவங்களும் விரிவாக நிகழ்வன. இவ்வகையில் சுக்கிரவாரம் எனப்படும் வெள்ளிக்கிழமை தோறும் இவ்வாறாக விசேஷ அபிடேக அலங்காரங்களும், சுவாமி தரிசனமும் நிகழ்வதுண்டு. இவ்வர்றே சோமவாரமும் முக்கியம் பெறுகின்றது.

இருவாரங்களுக் கொருமுறை வருவது பிரதோஷம் முதலான விஷேச நாட்களாகும். கிருத்திகை, சதுர்த்தி, சஷ்டி, மாதப் பிறப்பு முதலிய விசேட தினங்கள் மாதமொருமுறை வருவன. சங்கிராந்தி முதலிய தினங்கள் சில மாதங்களுக்கொருமுறை நிகழ்வன. மாதப்பிறப்பிலும், கிரகணம் நிகழும் தினங்களிலும் விசேஷ தீர்த்தோற்சவம் முதலியன நிகழும். நடேசரபிஷேகங்கள் ஒவ்வொரு ஆண்டும் ஆறுமுறை நிகழ்வன. ஆடிப்பூரம், ஆவணிச்சதுர்த்தி, ஆவணி மூலம், நவராத்திரி, விஜயதசமி, கந்தசஷ்டி, திருக்கார்த்திகை, கிருத்திகா தீபம், கார்த்திகைச் சோமவாரம், மார்கழித்திருவாதிரை, தைச் சங்கிராந்தி, மாசிமகம் முதலியனவும், பிரம்மோற்சவமும் வருடமொரு முறையும் மகாமகம் பன்னிரண்டு வருடமொருமுறையும் நிகழும் நைமித்திக நிகழ்ச்சிகளாகும்.

### *மஹோற்சவம்:-*

இவ்வாறு வருடமொருமுறை நிகழும் நைமித்திகக் கிரியைகளுள் பிரம்மோற்சவம் பிரதானமானதாகும். உற்சவம் என்னுஞ் சொல் பஞ்சகிருத்தியங்களில் ஒன்றான சிருஷ்டியைக் குறிக்கும் எனக்கிரியை விளக்கம் கூறும் நூல்கள் பகருகின்றன. உற்சவம் அறுவகைப்படும். இவை பதிருகம், சௌக்யம, ஸ்ரீகரம், பார்த்திவம், சாத்துவிகம் என்பன. பைதிருகம் பன்னிரண்டு. நாட்கள் நிகழும் உற்சவம், சௌக்கியம் ஒன்பது நாட்களும் ஸ்ரீகரம் ஏழுநாட்களும், பார்த்திவம் ஐந்து நாட்களும் சாத்துவிகம் மூன்று நாட்களும், சைவம் ஒரு நாளும் நடக்

கும் உற்சவங்களுமாம். இவ்வகையில் ஆண்டுக்கொருமுறை நிகழும் மஹோற்சவம் எனப்படுகின்ற பிரம்மோற்சவம் சௌக்கியம் எனப்படும் பிரிவினுள் அடங்குகின்றதெனலாம்.

## உறுப்புக்கள்:-

பிரம்மோற்சவத்தின் உறுப்புக்கள் பதினெட்டு இவற்றைக் கிரியை நூல்கள் பின்வருமாறு வரிசைப்படுத்தியுள்ளன. அவை விருஷயாகம், துவஜாரோகணம், பிருஹத்தானம், அங்குரம், மகாயாகம், அஸ்திரயாகம், பலிதானம், யானக்கிரமம், பரிவேஷம், விராஜனம், கௌதுகம், தீர்த்தசங்கிரஹம், சூர்ணோத்துவம், தீர்த்தம், அவரோஹணம், ஸ்நபனம், விவாகம், பக்தோற்சவம் என்பன.

## தொடங்கும் முறைகள்:-

பிரம்மோற்சவம் தொடங்கும் முறையையிட்டு மூன்று வகையாகக் காரணாகமத்தில் கூறப்படுகின்றது. உற்சவத்தில் கொடியை ஏற்றிய பின் பேரிதாடனம் அங்குரம் ஆகிய கிரியைகள் நிகழின் துவஜாரோகண பூர்வகமான உற்சவமாகும். முதலில் பேரிதாடனம் நிகழ பிறகு துவஜாரோகணமும் அங்குரார்ப்பணமும் தொடரின் அவ்வுற்சவப் பேரிதாடன பூர்வமான உற்சவமாகும். முதலில் அங்குரமும் பின் பேரிதாடனமும் பிறகு துவஜாரோகணமும் நிகழ்ந்தால் அவ்வுற்சவம் அங்குரார்ப்பண பூர்வமான உற்சவமாக கூறப்படும்.

## பூர்வாங்கக் கிரியைகள்:-

இவ்வாறான வகையில் கூறப்படும் பிரம்மோற்சவத்தில் முதலில் நிகழ்வது விக்னேசுர பூஜை இது உற்சவத்தில் நிகழவுள்ள காரியங்கள் தடையின்றி நிகழ விக்கினம் தீர்க்கும் விநாயகரை வேண்டிச் செய்யப்படும். அடுத்ததாக அநுக்கையானது உற்சவத்திற்கு வந்துள்ள பிராம்மணோத்தமர்களிடமும், விக்னேஸ்வரப் பெருமானிடமும், மூலமூர்த்தியிடமும், அஸ்திரதேவரிடமும் சென்று பூஜை செய்து மஹோற்சவத்தை நன்முறையில் நடத்த அனுமதியும் ஆசியும் தருமாறு வேண்டுவதாகும். அடுத்ததாக ஆலயம் அமைந்துள்ள கிராமத்திலுள்ள தீய சக்திகள், துஷ்டத்தன்மைகள் முதலியவற்றால் பெருவிழாவுக்கு இடையூறு ஏற்படாதிருக்க காவல் தெய்வமாகிய வைரவப் பெருமானுக்கு ஆற்றப்படுவதான பூஜை, ஓமம் முதலியவற்றை நடாத்துதல் கிராம சாந்தியாகும். மேலும் வாஸ்து சாந்தி எனப்படுவது நிலத்தில் உள்ள குற்றங் குறைகளை நீக்குவதற்காகச் செய்யப்படுவதாகும். அத்துடன் ஐந்தொழில் விளக்கமாகிய மஹோற்சவத்தில் படைத்தலைக் குறிக்கும். மிருத்சங்குரகணமும், அங்குரார்ப்பணமும் நிகழ்த்தப்படும். அதனையடுத்து ரக்ஷாபந்தனமானது எடுத்தகருமம் தடையின்றி நிகழவும், அக்கருமமன்றி வேறு செயல்களில் ஈடுபடாது தடுப்பதற்கும் காப்புக் கட்டப்படும். இங்கு உற்சவத்தை நடாத்தும் குருவுக்கும் மூலமூர்த்தி நந்தி, பலிபீடம் முதலிய உற்சவத்துடன் தொடர்புடைய பரிவார தெய்வங்களுக்கும் ரக்ஷை அணிவிக்கப்படும்.

## யாகசாலை:-

பிரம்மோற்சவத்தில் யாகசாலையானது பிரதான இடம் வகிக்கின்றது. இவ்யாகசாலை கோவிலில் கிழக்கும், வடகிழக்கிற்கும் இடையில் நிரந்தர இடம் பெறுகின்றது. இங்கு சந்திரகும்பம் வைக்கப்பட்டு அங்குரார்ப்பண கிரியையும், அதனைத் தொடர்ந்து மஹோற்சவ குருவுக்கு ரக்ஷா பந்தனம் முதலியன செய்யப்படும்.

## துவஜஸ்தம்பம் - கொடிமரம்:-

நந்திக்குப் பின்னால் துவஜஸ்தம்பம் இடம்பெறும். இதில் நிகழும் கொடியேற்று நிகழ்ச்சியே துவஜாரோகணம் எனப்படும். கொடிச்சீலையில் சிவனுக்குரிய அடையாள மான விருஷபமும் அவனது சிறந்தபடைக் கலமான சூலமும் இடம்பெறும். மூலமூர்த்தி விநாயகராயின் மூஷிகமும், அங்குசமும் இடம்பெறுவன. சுப்பிரமணியருக்கு உற் சவம் நிகழின் மயூரமும், சக்தியும் இவ் வாறு இடம்பெறும். கொடிச்சிலையில் இவ் விரண்டுடனும் கண்ணாடி, பூரணகும்பம் முதலிய அஷ்டமங்கலப் பொருட்களும் இடம்பெறுவன.

துவஜாரோகண தினத்தன்று காலை யில் நீராடி நித்திய கர்மானுஷ்டானங்கள் யாவும் நிறைவேற்றிய சிவாச்சாரியர் வழ மையான நித்திய பூஜைகள் யாவும் முடித்து பூர்வாங்கக் கிரியைகளையும் செவ்வனே நிறைவேற்றுவார். அதன் பின் துவஜாரோகணத்துக்குரிய கொடிப்படம் தம்பம் அஸ்திரதேவர், நந்தி பலிபீடம் மூலமூர்த்திகள் என்பவற்றுற்கு அபிஷேகம் செய்வதற்காக வைக்கப்பட்ட கும்பங்க ளுக்கு பூஜை நிகழ்த்துவார். அத்துடன் அக்கினிகாரியம் நிகழ்த்தி கொடிப்படத் திற்கு புண்ணியாக நீர் தெளித்து பிம்பசுத்தி செய்தபின் அதிலுள்ள நந்திக்கு நயனோன் மீலனம் (கண் திறத்தல்) செய்யப்படும்.

### பேரீதாடனம்

இதனையடுத்து பூர்வாங்கக் கிரியைக ளின் பின்னர் படைத்தல் தொழிலைக் குறிக்கும் கொடியேற்ற விழா ஆரம்பத்தில் நாத தத்துவத்தை பேரீ எனப்படும் மேளத்திலே பூஜித்து மந்திர சகிதமாக குரு மேளத்தில் ஒலியெழுப்பி சகலதேவர் களையும் அங்கு எழுந்தருளும்படி வேண்டு தலாகிய பேரீதாடனம் இடம்பெறும்.

## துவஜாரோகணம்

ஆலய மூலமூர்த்தியைத் தம்பத்தில் ஆவாகணம் செய்து ஏற்கனவே ஸ்தா பித்து வைத்த ஸ்நபன கும்பங்களால் அபிஷேகம் செய்வர். அதன் பின் உற்சவ மூர்த்தியை அலங்கரித்து வலமாக துவஜஸ் தம்பத்திற்கு முன் எழுந்தருளுவித்தபின் கொடிச்சீலையை கோவிலை வலமாக கொண்டு வருவித்து கொடிமரத்திலுள்ள கயிற்றில் பிணைத்து சமஸ்ததேவ தாவஹனம் என்னுங் கிரியையினை நிகழ்த்துவர். இக்கிரியையில் தேவர்கள் அனைவரும் துவஜதண்டத்தில் திருவிழா முடியும் வரை சாந்நித்தியங் (பிரசன்ன மாயிருத்தல்) கொண்டருளுமாறு வேண டப்படுவர். பின்னர் கொடியை சகல வாத்திய கோஷங்களுடன். ஏற்றி வலமா கச் சுற்றி, தர்ப்பையைச் சுற்றிலும் பரப்பி இணைத்துக் கட்டி அலங்கரித்த பின் விருஷப யாக குப்பத்தை துவஜதண் டததினடியில் அபிஷேகம் செய்தல் வேண் டும். பின்னர் அன்னத்தினாலான உருண் டைகளால் பலியிட்டு தூபதீபங்களால் அருச்சித்து பணிமாலை, சூரணிகை உரிய தாளங்கள் முதலியவற்றை படித்த பின் அஸ்திரதேவரை பிரதிஷ்டித்து ஆவாகித்து மகா ஆசிர்வாதம நிகழ்த்தி பிரமசநதி முதலான சந்தியாவாகனம் நிகழ்த்துதல வேண்டும். திக்குகள் அனைத்திலும் அத் திக்குகளுக்குரியோரை தியானித்து அவர வர்ககுரிய வேதமந்திரம், ராகம், பண், தாளம், வாத்தியம், நிருத்தம் முதலியவற் றுடன் ஆவாகித்தல் வேண்டும்.

### வீதியுலாவும் வாகனங்களும்

உற்சவ காலத்தில் தினந்தோறும் இரு வேளைகளிலும் யாக பூசையும், துவஜஸ்தம்ப அபிஷேகம், பூசை, பலியும் திக்குகளில் பலியும் நிகழும் இதனைய டுத்து உற்சவமூர்த்திக்கு அபிஷேக அலங்

காரமும், விஷேச தீபாராதனையும் அதை தொடர்ந்து வேதகோஷம், திருமுறை ஓதுதல் முதலியவற்றுடன் திருவுல்ாவும் நடைபெறும். வீதிவலமாக சுவாமி ஈசான மூலையையடைந்து யாகத்தில் பூர்ணாகுதியும், ஆராதனையும் நடைபெறும். ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு வாகனமும் ஒவ்வொரு வகை அலங்காரமும் உரியது உற்சவமும் வெவ்வேறுபடும் ''முதலாம் நாள் பகலில் விமானமும் சூரியப்பிரபையும்'' இரண்டாம் நாள் அவ்வறே பூதமும் நாகமும்; மூன்றாம் நாள் பல்லக்கும் கேடகமும்; நான்காம் நாள் ரதமும் பல்லக்கும்; ஐந்தாம் நாள் புருஷமிருகமும் சிங்கமும்; ஆறாம் நாள் சந்திர பிரபையும், அன்னமும்; ஏழாம் நாள் விருஷபமும் கைலாச வாகனமும்; எட்டாம் நாள் யானையும் கற்பகவிருஷமும்; ஒன்பதாம் நாள் குதிரையும் பல்லக்கும், எனப் பத்ததிகள் பலவாறு வேறுபடுத்திக் கூறுவன எனினும் கோவில்களுக்குரிய ஐதீகத்திற்கும் வழமைக்குமேற்ப இவற்றை அனுசரித்துக் கொள்ளலாம்.

### வீதியுலாவில் அலங்காரம்

முதலாம் நாள் சுயமாக இருக்கும் நிலையிலும் இரண்டாம் நாள் அமர்ந்தவாறும், மூன்றாம் நாள் சயனித்தவாறும், நான்காம் நாள் நிருத்தியம் இயற்றும் நிலையிலும், ஐந்தாம் நாள் ஹரரூபமாகவும், ஆறாம் நாள் விசுவரூபம் கொண்ட நிலையிலும், ஏழாம் நாள் அட்டகாசம் புரியும் கோலத்திலும், எட்டாம் நாள் தியானம் புரியும் நிலையிலும், ஒன்பதாம் நாள் யோகம் வீற்றிருக்குமாறும், பத்தாம் நாள் சம்ஹார கோலத்திலும் அலங்கரித்து திருவிழா நிகழ்த்தும் படி நூல்கள் கூறுகின்றனர். தேர்த்திருவிழாவும் தீர்த்தத் திருவிழாவும் உற்சவ தினங்களுள் முக்கியமானவை.

### ரதோற்சவ தத்துவம்

சுவாலித்து எரியும் அக்கினியின் தோற்றத்தில் அமைக்கப்பட்ட தேரானது அழித்தலை குறிப்பது தேரின் பாகங்கள் பிரபஞ்ச தோற்றத்தையும், அதன் பீடம் இருதயத்தையும் குறிப்பன. அங்கு இறைவன் வீற்றிருக்கும் தேர் ஓடுகின்றது வாழ்க்கைத்தேர் சிறப்பாக ஓட எமது இருதயபீடத்தில் எப்போதும் இறைவனை வைத்திருக்க வேண்டும். தேர் சரியான பாதையில் ஓட இசைவாக சறுக்கு கட்டை போட்டு அதனை கட்டுப்படுத்துவது போல நமது வாழ்வையும் நெறிப்படுத்த வேண்டும். குவிந்து செல்லும் தேர்க்கலச முடிவில் குடை நிழல் தெரிகிறது மனம் குவிந்து மேலான சிந்தனையுடன் இருப்பின் அவனது அருட்குடை நிழல் நம்மை துயர வெயிலிலிருந்து பாதுகாக்கும் தேர்க்காலில் தேங்காயை சிதற அடித்தல் நமது துன்பங்களையும், பாவங்களையும் நீக்குவதாகும்.

### ரதோற்சவம்:

இவ்வாறு அனேக தத்துவங்களை விளக்கும் தேர்த் திருவிழா ஒன்பதாம் நாள் பகல் நடைபெறும் தேரானது சுற்றி வந்ததும் சுவாமிக்கு பச்சை சாத்தும் வழக்கமுண்டு உக்கிர மூர்த்தியாக அழித்தற் தொழில் முடித்து வரும் இறைவனை குளிர்விக்கும் பாவனையே இதுவாகும். இவ்வேளையில் சிவாச்சாரியார்களும், உதவியாளர்களும் கூட பச்சை வேட்டி, சால்வைகளுடன் காணப்படுவது கண்கொள்ளாக் காட்சியாகும். பச்சை சாத்துதலுடன விசேட அருச்சனையும் தீபாராதனையும் இடம் பெற்று தேர்த்திருவிழாவானது நிறைவு பெறும்.

### தீர்த்தோற்சவம்:

தேர்த்திருவிழாவிற்கு அடுத்த நாள் இடம்பெறுவது தீர்த்தோற்சவம். இதில், மறைத்தலாகிய தொழிலை குறிப்பதான சூர்ணோற்சவம் முக்கியம் பெறுகிறது. இங்கு மஞ்சள் முதலிய திரவியங்களை உரலில் இட்டுத் தூளாக இடித்து சாணம், தைலம், நெய் முதலியவற்றுடன் கலந்து சுவாமிக்கு சாத்துதலே சூர்ணோற்சவமாகும். உற்சவ மூர்த்திக்கு ஆராதனை நிகழ்த்தலும், தீர்த்தம் கொடுக்கும் இடத்திற்கு அஸ்திர தேவருடன் உற்சவேசரை வலமாக எடுத்துச் சென்று அஸ்திர தேவருக்கு முறைப்படி அபிஷேகம் நிகழ்த்துதல் வேண்டும் பின் தீர்த்த நிலையத்தில் ஆசாரியாரும் அஸ்திர தேவருடன் நீரில் மூழ்கி ஸ்நானம் செய்யும் வேளை அடியார்களும் அவ்வாறு செய்வர் தீர்த்தோற்சவமானது அருளலைக் குறிக்கின்றது. தீர்த்தோற்சவத்தின் பின் சுவாமி வீதிவலம் வந்து கோவிலுக்குத் திரும்பியதும் யாககும்பங்களை மூலமூர்த்திக்கு அபிஷேகித்தல் வேண்டும். அதன்பின் அங்குர விசர்ஜனம் செய்து முளைப்பாலிகைகளை சகல மூர்த்திகளுக்கும் சார்த்தி நீராஜனம் செய்வதையடுத்து வழமையான வைரவ, சண்டேஸ்வரர் பூஜையுடன் தீர்த்தோற்சவம் நிறைவுபெறும்.

### துவஜாவரோகணம்:

தீர்த்தோற்சவத்தன்று மாலையில் துவஜாவரோகணமும் இடம்பெறும். சாயங்காலப் பூஜை முடிந்து உற்சவ மூர்த்தியை வசந்த மண்டபத்திலிருந்து ஸ்தம்ப மண்டபத்திற்கு கொண்டு வருவர். கணபதிகானம் முதலியவற்றை துவஜாரோகணத்தில் செய்தது போல் செய்து சமஸ்ததேவதா விசர்ஜனம் செய்வர் நிதானமாக கொடிக் கயிற்றை அவிழ்த்து கொடியை சகல வாத்திய கோஷங்களுடன் இறக்கிக் கொடித்தம்ப கூர்ச் சத்தை மூலமூர்த்தியிடமும், கொடிப்படத்தை நந்தியிடமும் சமர்ப்பித்து நிராஜனம் செய்தபின் உற்சவ மூர்த்தியை வீதிவலம் வரச்செய்வர் கொடியிறக்க நாளில் முதலில் வெளிவீதி வலம்வந்த பின்னரே உள்வீதி வலம் வருதல் முறை. வெளி வீதி வலம்வரும் போது நவசக்திகளிலும் முதலாம் நாள் ஆவாகனம் செய்த தேவர்களை மகிழ்வித்தபின் உத்வாசனம் செய்வர். இதன்பின் உள்வீதியில் வலம் வரும் போது, கிழக்கு கோபுர வாசலிலிருந்து தென்கிழக்கு வரை மங்கல வாத்தியமும். அங்கிருந்து தெற்கு வாசல்வரை வேதபாராயணமும், தென்மேற்குவரை தமிழ் வேத பாராயணமும் மேற்குத்திசைவரை சங்க நாதமும். வடமேற்கு வரை தாளவாத்தியமும் (தவில்), வடக்குவரை கீதஇசையும் (நாதஸ்வரம்) இசைத்துவடகிழக்கு வரை மௌனமாகவும் அங்கிருந்து வாயில்வரை சகலவாத்திய கோஷத்துடனும் வந்து இருப்பிடம் சேர்ப்பர்.

### சண்டேஸ்வர உற்சவம் பக்தோற்சவம்:

இதன்பின்னர் பக்தகோடிகளின் வழிபாட்டுப்பலனை அனுக்கிரகம் செய்பவராகவுள்ள சண்டேஸ்வரரை பக்தியுடன் கௌரவமாக வீதிவலம் வரச் செய்தல் அவசியமாகும். சண்டேஸ்வர உற்சவத்தின்பின் சிவாச்சாரியார் சகல மூர்த்திகளின் ரக்ஷ பந்தனங்களையும் கழற்றி தமது தரத்திலுள்ள ரக்ஷ பந்தனத்தையும் நீக்குவார்.

### ஆசாரிய உற்சவம்:

மஹோற்சவத்தின் இறுதிக் கட்டமாக அமைவது ஆசாரிய உற்சவம். இறைவன், குரு, லிங்கம், சங்கமம் ஆகிய 3 இடங்களில் நின்று அருளுவதாக கூறுவர். அவற்றில் குரு வழிபாட்டை பிரதி பலிப்பதாக ஆசாரிய உற்சவம் விளங்கும் மஹோற்சவ கிரியைகளை செவ்வனே நிறைவேற்றி வைத்த சிவாச்சாரியாரை வயது, தகுதிக்

குறைவு பாராது பூமாலை முதலியவற்றால் அலங்கரித்து மங்கல வாத்திய சகிதம் வீதி வலமாக அழைத்து வந்து மண்டபத்தில் அமர்த்தி அடியார்கள் யாவரும் அவரை வணங்கி இயன்றளவு குருதக்ஷணை வழங்கி வீபூதிப் பிரசாதம் பெற்று பின் அவரை வீடுவரை அழைத்துச் சென்று பின்னர் தம தில்லம் திரும்புவர்.

## திருக்கல்யாணம்:

திருக்கல்யாணம் பிரம்மோற்சவத்தில் முக்கியம் பெறும் இது சிவனுக்கும் பார்வ திக்கும் நிகழும் கல்யாண வைபவத்தைச் சித்ரிப்பது இங்கு அங்குரார்ப்பணம், ரக்ஷபந்தனம், கன்யாதானம், பாணிக்கிர கணம், மாங்கல்ய சூத்ரகாரணம், அக்கினி பிரதக்ஷணம், வாஜ ஹோமம், ஆசீர் வசனம் முதலியன முக்கிய அம்சங்களாக இடம் பெறும்.

## மஹோற்சவ தத்துவம்:

உற்சவங்களின் பிரிவுகள் பலவகை கிருத்தியங்களை காட்டிநிற்பன அங்கு ரார்ப்பணம், திருக்கல்யாணம், துவாஜ ரோகணம், ரக்ஷாபந்தனம் ஆகியன சிருஷ் டியையும், வாகனங்களில் உலாவுதல். ஹோமம், பலி என்பன காத்தலையும் சூர் னோத்துவம், ரதாரோகணம் என்னுமிரண் டும் சம்ஹாரத்தையும், மௌனோற்சவம், திரோபாவம் எனும் மறைத்தலையும், ஊடல் திருவிழா, தீர்த்தம் என்பன அனுக் கிரகத்தையும் குறிக்கும் என்பது நூல்கள் கருத்து. பலகாரணங்களால் கிரியைகளை உரியவாறு நிகழ்த்தாது தவறு ஏற்படும் சந்தர்ப்பத்தில் அக்குறைகளைக் களைய ரதாரோகணத்தன்று பிராயச்சித்தக் கிரி யைகளும் இடம்பெறுதல் வேண்டும்.

இவ்வாறு வருடமொரு முறை நிகழும் மஹோற்சவத்தின் தத்துவங்கள் அளப் டரியன இம்மஹோற்சவங்கள் நித்தியக் கிரி யைகளில் ஏற்படும் தவறுகளை நிவர்த்திக் கவே ஆற்றப்படுகின்றன.

அடுத்து கிரியைகளில் முக்கியம் பெறு வன மஹாமகம், மகாகும்பாபிஷேகம் எனும் உற்சவங்களாகும். இவை பெரும் பாலும் பன்னிரண்டு வருடங்களுக்கொரு முறை நிகழ்வன இதில் கும்பாபிஷேகமா னது சந்தர்ப்பங்களுக்கும், வசதிகளுக்கு மேற்றவாறு மாற்றியமைக்கப்படலாம்

## முடிவுரை:

இவ்வாறு பல வகைப்படுத்தப்படும் கிரியைகளை பலனை எதிர்பாராது நிஷ் காமியமாக செய்வதே நன்று. எனினும் கிரி யைகளைப் பலனை நோக்காகக் கொண்டு செய்யுமிடத்தும், நாம் அவனருளாலே அவன் தாள் வணங்கும் தன்மையினர் என் பதை நன்குணர்ந்து கிரியைகளை நிகழ்த்தி முடிக்கும் பொழுது நாம் பெறவிருக்கும் பலன்களனைத்தையும் சிவார்ப்பணமாக சமர்ப்பித்தல் எமக்கு பெரும் மனச்சாந்தி யினையும் பேருய்வையுமடைப்பிக்கும்.

உசாவியவை:

1. சைவத்திருக் கோவிற் கிரியை நெறி: கா கைலாசநாதக்குருக்கள் M. A. (Ceylon), Ph. D. (Poona).
2. சைவாலயக்கிரியைகள்: கோப்பாய் - சிவம்.

"வரவு" சிறப்புடன் மிளிர வாழ்த்துகிறது

மக்கள் சேவையில் 32 ஆண்டுகளைத் தாண்டும்

# மக்கள் வங்கி

58 இலட்சம் வாடிக்கையாளர்கள்! 331 கிளைகள்!

இந்த உன்னத நம்பிக்கைப் பிணைப்பில் நீங்களும் சேருங்கள்

- சிறுவர் நீடித்த சேமிப்புக் கணக்கு
- மகளிர் அதிர்ஷ்டகணக்கு
- சிறுவர் உண்டியல் கணக்கு
- மாணவர் சேமிப்பு / நிரந்தரவைப்புக் கணக்குகள்
- சேமிப்புச் சான்றிதழ்
- நிலையான வைப்புக்கள்


சுயதொழில் கடன் / அபிவிருத்திக் கடன் / கூட்டுறவு அபிவிருத்திக் கடன்


மக்கள் வங்கியில் வாடிக்கையாளராகி

அதிகூடிய பாதுகாப்பு! அதிகரித்த வட்டி வீதம்! கடன் வசதி!

அனைத்தையும் பெறுங்கள்

எங்கள் விளம்பரதாரர்களை





V

ஆதரியுங்கள்